ஸ்ரீ :

முக்கூடற் பள்ளு

மூலமும் குறிப்புரையும்

கதா பவனம்
மைலாப்பூர்

பதிப்பாசிரியர் :


மு. அருணாசலம், எம். ஏ.

சாது அச்சுக்கூடம்
இராயப்பேட்டை
சென்னை

1940

உரிமை
பதிவு செய்யப்பட்டது

விலை அணா 10



ஸ்ரீ :

முன்னுரை

1

தமிழ் மொழியிலுள்ள பழைய இலக்கியங்களுள் பெரும்பான்மையானவை ஆசிரியர்களது நிறைந்த கல்வியையும் சிறந்த புலமையையும் காட்டுவனவா யிருக்கின்றன; ஆதலால் இவை கல்வியறிவு மிக்கோருக்கே பயன்படக் கூடியவை. பழைய் இலக்கியங்களில் சிறுபான்மை தான் ஆதிக்க் கல்வியறிவில்லாத மக்களும் அறிந்து அனுபவிக்கக் கூடியனவா யிருக்கின்றன. சிலப்பதிகாரம் என்னும் பெருங் காவியத்தை இயற்றிய இளங்கோவடிகள்கூட உணர்ச்சி ததும்பும் வரிப்பாடல்களே இவர்கள் அனுபவிக்கத் தக்கவாறு மிக எளிய நடையில் அமைத்துள்ளார்.

> ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்துக்
> கானத் தெருமை கருந்தலைமேல் நின்றுயால்!
> வானோர் வணங்க மறைமேல் மறையாகி
> ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றி யேநிற்பாய்!

என்பது வேட்டுவவரியுள் ஒரு பாட்டு; இது ஆழ்ந்த கருத்துக்களை இலகுவான முறையில் வெளியிடுகிறது. இவ்வண்ணமே கானல்வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை, வாழ்த்துக் காதை முதலிய பகுதிகளில் பல பாடல்கள் எளிமைக்கே எடுத்துக்காட்டா யிருக்கின்றன. இத்தகைய எளிய செய்யுட்கள் வளையாபதியிலும் மிகுதியா யிருந்தன வென்பது யாப்பருங்கல விருத்தியுள் காணப்படும் மேற்கோள்களால் விளங்குகிறது :

> நீல நிழத்தனவாய் நெய்கனிந்து போதவிழ்ந்து
> கோலங் குலைன்ற குழல்வாழி நெஞ்சே!

கோலங் குயின்ற குழலுங் கொழுஞ்சிகையும்
காலக் கனலெரியின் வேம்வாழி நெஞ்சே !
காலக் கனலெரியின் வேவன கண்டாலும்
சால மயங்குவ தென்வாழி நெஞ்சே !

என்பது ஒரு வீளையாபதிச் செய்யுள். கலிப்பாடல்களிலே இடையில் வரும் உறுப்பாகிய தாழிசை முழுவதும் இவ்வாறு எளிய நடையிலமைந்த பாட்டு.

மேலே காட்டப்பட்ட செய்யுட்பகுதிகள் எளிய நடையில் இயன்றிருப்பது மட்டுமன்றி இசையோடு பாடுவதற்கென்றே அமைந்தவை. எளிய நடையிலமைந்த பாடல்கள் இசையுடன் சேரும்போது, சொற்கள் நெகிழ்ச்சிபெற்று, பாடல்களின் நயம் மிகுதியாகிறது. எளிமை இசை என்னும் இவ்விரு காரணங்களாலும் பாமரமக்களும் இவற்றைச் சுலபத்தில் உணர்ந்து அனுபவிக்கமுடிகிறது. மேலும், இலக்கியச் சுவையை இவர்கள் அனுபவிக்குமாறு செய்வதற்கு எளிய மக்கள் வாழ்க்கையையே பொருளாகக்கொண்ட செய்யுட்களே தக்க சாதனம் என்று பண்டையாசிரியர்கள் கண்டிருக்கிறார்கள். சிலப்பதிகாரத்தில், வேட்டுவ வரியும் ஆய்ச்சியர் குரவையும் வாழ்த்துக் காதையின் வரிப்பாடல்களும் இவ்விலக்கணம் வாய்ந்தவை. இப்பாடல்களின் பொருளுக்கேற்ப, இவற்றை வேட்டுவரும் ஆயர்குல மக்களும் குறவரும் பாடி ஆடினர்கள் என்பதாக ஆசிரியர் அமைத்திருக்கிறார்.

இவ்வாறு பாமரமக்கள் பாடி ஆடுவதற்கேயிய இலக்கியங்கள் இடைக்காலத்திலும் இருந்தனவென்று தெரிய வருகிறது. இராசராசசோழன் காலத்தே தஞ்சைப் பெருங்கோயிலில் இராசராச நாடகம் நடிக்கப்பட்டு வந்ததாகச் சாசனங்களிலிருந்து அறிகிறோம். திருப்பாதிரிப்புலியூர்த்தல சம்பந்தமாகப் புலியூர் நாடகம் ஏற்பட்டிருந்தது. ஆனால் இத்தகைய இலக்கியமொன்றும் இப்போது கிடைக்கவில்லை.

பிற்காலத்திலே, பாமரமக்கள் பாடி ஆடுவதற்கு ஏற்றனவாய், பள்ளு, குறவஞ்சி, கொண்டி நாடகம் என்ற மூவகைப் பிரபந்தங்கள் தோன்றலாயின. இவை தொடர்ந்து நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கதைபோலமைத்துக் கூறும். பள்ளில், பள்ளர் பள்ளியரும் பண்ணைக்காரனும் பிரதான கதாபாத்திரங்கள்; குறவஞ்சியில், ஒரு தலைவியும் குறவனும் குறத்தியும் குளுவனும் கதாபாத்திரங்கள்; கொண்டி நாடகத்தில் கொண்டியொருவனே தோன்றி நடிப்பன். 17-ம் நூற்றாண்டு முதற்கொண்டு இப்பிரபந்தங்கள் மிகுந்த பிரசித்திபெற்று எங்கும் பரவலாயின. இந்நூற்றாண்டில் எழுந்த மூக்கூடற் பள்ளும், 18-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திரிகூடராசப்பக் கவிராயர் செய்த குற்றாலக் குறவஞ்சியும் மதுரை கவிராயர் செய்த திருக்கச்சூர் கொண்டி நாடகமும் மிக்க பிராபல்ய மடைந்தன. இவற்றுள் பள்ளுப் பிரபந்தத்தின் பூர்வசரித்திரத்தை மட்டும் இங்கே சிறிது ஆராயலாம்.

2

நூல்களுக்குரிய வனப்பு எட்டு எனத் தொல்காப்பியம் செய்யுளியலில் கூறப்பட்டிருக்கிறது. இவற்றுள் 'புலன்' என்பதும் ஒன்று. இதை விளக்கப்புகுந்த ஆசிரியர்,

> சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து
> ஓதல் வேண்டாது குறித்தது தோன்றிற்
> புல்லினை மொழிப புலனுணர்ந் தோரே (233)

என்று கூறுகிறார். சேரி மொழியாவது 'பாடி மாற்றங்கள்'; தொழிலாளர், எளியோர் முதலிய மக்கள் பயிலும் வழக்கச் சொற்கள். 'வழக்கச் சொல்லினையே தொடுக்கப்பட்டு ஆராயவேண்டாமற் பொருள் விளங்குவது புலனென்னும் செய்யுளாம்' என்பது இளம்பூரணர் உரை. 'அவை விளக்கத்தார் கூத்து முதலாகிய நாடகச் செய்யுளாகிய

வெண்டுறைச் செய்யுள் போல்வன வென்பது கண்டுகொள்க' என இதற்கு உதாரணம் எழுதினர் பேராசிரியர். விளக்கத்தார் கூத்து முதலாயின இக்காலத்து இன்னவென்றே அறியவியலாது. எனினும், செய்யுள் வனப்பில் புலன் என்பது ஒன்று எனவும், பாமரமக்கள் வழங்கும் சொற்களால் ஆக்கப்பட்டு அவர்கள் ஆடியும் பாடியும் வரும் நாடகச் செய்யுளே அதற்கு இலக்கியம் எனவும் அவர் கூறுதலால், அவர் காலத்துக்கு முன்னே அவ்வகை நூல்கள் பல இருந்தன என்பது தெளியப்படும். பிற்காலத்தே நாமறிந்த அவ்வகை நூல்கள் மேற்சொன்ன மூவகைப் பிரபந்தங்களே.

குறவஞ்சி என்ற விரிந்த பிரபந்தவகை தோன்றுவதற்கு வழி காட்டியது பழைய கலம்பக உறுப்புக்களுள் ஒன்றான 'குறம்' எனக் கருதலாம். ஆனால், பள்ளுப் பிரபந்தத்துக்கு இத்தகைய மூலம் ஏதேனும் இருப்பதாகத் தெரியவில்லை. முக்கூடற் பள்ளிலே, இப்பிரபந்தத்தைப் 'பள் மூவகைத் தமிழ்' எனவும், 'பள்ளிசை' எனவும், 'பள்ளேசல்' எனவும் ஆசிரியர் கூறுகிறார்; இயல் இசை நாடகமென்னும் முத்தமிழும் இதனுள் விரவி வருமென்பது ஆசிரியர் கருத்தாகலின் 'மூவகைத் தமிழ்' என்றார். பிறவற்றிலும் இப்பெயர்கள் பயின்று வந்திருக்கின்றன. பள்ளு நாடகம், குறவஞ்சி நாடகம், நொண்டி நாடகம் என்பது பெருவழக்காயுள்ளது. தொண்ணூற்றாறு பிரபந்தங்கள் வரிசையில் பள்ளும் ஒன்று என்பதாக 1732-ல் செய்யப்பெற்ற சதுரகராதியில் முதன் முதல் கூறப்பட்டிருக்கிறது. இதன் ஆசிரியர் முக்கூடற் பள்ளின் கதைகளையே பள்ளுக்குரிய செய்தியாக இங்கு எடுத்து உரைத்திருக்கிறார். இதனால், பள்ளு என்பது பிரபந்த வரிசையில் ஒன்று என முன்னரே கருதப்பட்டு வந்ததெனவும் இலக்கிய நிலையடைந்த முதற் பள்ளு முக்கூடற்பள்ளு என்பதுதான் எனவும் புலப்படுகிறது. பிரபந்த

இலக்கணங் கூறும் நூல்களாகிய பன்னிரு பாட்டியல், வச்சணந்திமாலை, பிரபந்த மரபியல், இலக்கணவிளக்கப் பாட்டியல் முதலியவற்றில் பள்ளுப் பிரபந்தத்தின் பெயர் காணப்புடவில்லை.

பன்னிரு பாட்டியலில் 'உழத்திப் பாட்டு' என்ற பிரபந்த வகைக்குரிய இலக்கணம் அடியிற் கண்டவாறு வகுக்கப்பட்டிருக்கிறது :

> *புரவலற் கூறியவன் வாழிய வென்று*
> *அகல்வயல் தொழிலை யொருமை யுணர்ந்தனள்*
> *எனவரு மீரைந் துழத்திப் பாட்டே* (333)

அரசனை வாழ்த்தி உழவுத்தொழிலைக் கூறும் பத்துப்பாட்டுக்கள் கொண்டது உழத்திப்பாட்டு என இது கூறுகிறது; 'உழத்தி' என்பதனால் பெண் பாடுவதாயிருக்கலாம். இது பள்ளுப் பிரபந்தத்தைக் குறிப்பதன்று. குறவஞ்சி குறத்திப் பாட்டு எனப் பெயர் பெற்றதுபோல, பள்ளு உழத்திப் பாட்டு எனப் பெயர் பெற்றிருக்கலாமாயினும், இவ்விலக்கணத்தால் உழத்திப்பாட்டு பள்ளினின்றும் வேறானது என்பது தெளிவாகிறது. உழத்திப் பாட்டுக்கு இலக்கியம் இப்போது இருப்பதாகத் தெரியவில்லை.

மருத நிலத்து மக்கட்செய்தியைக் கூறவந்த இளங்கோவடிகள்,

> *கூங்கை வினைஞருங் களமருங் கூடி …*
> *பாருடைப் பனர்போற் பழிச்சினர் கைதொழு*
> *வேரொடு நின்றோர் ஏர்மங் கலமும்*
> *அரிந்துகால் குவித்தோர் அரிகடா வுறுத்த*
> *பெருஞ்செய்ந் நெல்லின் முகவைப் பாட்டும்*
> (நாடுகாண் காதை, 125, 134-137)

பாடினரென்று கூறுகிறார். 'ஏர்மங்கலம்' என்பது பொன்னேர் பூட்டிநின்ற உழவர் ஏரை வாழ்த்தி நன்மை விளையுமாறு

பாடும் மங்கலப்பாட்டு. 'முகவைப்பாட்டு' என்பது பொலிபாடுதல்; அதாவது நெற்கதிரின் தாள்களை அரிந்து போட்ட உழவர் சூட்டைப் பரப்பிக் கடாவிடுங்காலத்தே பாடும் பாட்டு. இவை பயிர்த் தொழில் செய்யுங் காலத்தே, குறிப்பிட்ட செயல்கள் நிகழும்போது உழவர் பாடும் பாட்டுக்கள் என்று இப்போது தெரிய வருகின்றன. இப்பாட்டுக்கள் உழவர் வாழ்க்கையையே பொருளாய்க் கொண்டுள்ளன வென்று திட்டமாய்க் கூறவியலாது.

அரங்கேற்றுகாதையுரையில் வரிப்பாட்டு எட்டு வகைப் படுமென்றும் இது பல்வரிக்கூத்தெனவும் பெயர் பெறுமென் றும் அடியார்க்குநல்லார் கூறுகிறார். மேலும், அவரவர் பிறந்த நிலத்தன்மையும் பிறப்பிற்கேற்ற தொழிற்றன்மையும் தோன்ற நடித்தலே வரியாகும் என்பர். பழைய மேற்கோள் செய்யுளொன்றின் மூலமாகப் பல்வரிக்கூத்துக்கள் எவை யென்பதையும் மிக விரிவாகத் தெரிவிக்கிறார். பாம்பாட்டி, பறை, குரவை, அம்மனை, பந்து, கழங்காடல், பகடி, பகவதி, சாழல், உந்தி, அவலிடி, குணலை முதலியன இதன்கண் கூறப்பட்ட பல்வரிக்கூத்துட் சில. சித்தர் பாடல்களிலும் தத்துவராயர் பாடுதுறையிலும் திருவாசகம் முதலியவற்றிலும் இக்கூத்துக்களை மனத்துட்கொண்டு செய்யப்பெற்ற இலக்கி யங்களைக் காண்கிறோம். இப் பல்வரிக்கூத்துக்கள் அடியார்க்கு நல்லார் காட்டும் மேற்கோளைச் செய்த ஆசிரியர் காலத்துக்கு முன்னே வழக்கிலிருந்தன என்பதில் ஐயமில்லை. 'ஐயனுக் குப் பாடும் பாட்டு ஆடும் படுபள்ளி' என்பனவும் அம் மேற்கோள் செய்யுளில் காணப்படுகின்றன. இவற்றுள், 'ஆடும் படுபள்ளி' என்பது பள்ளியரும் பள்ளரும் சேர்ந்து ஆடும் கூத்தெனக் கொள்ளலாம். இதற்குரிய பழைய இலக் கியங்களும் இலக்கணமும் இப்போது அறியமுடியவில்லை. எனினும், மிகப் பழைய காலத்தே உழவுத்தொழிலில்

ஈடுபட்ட பள்ளர் பள்ளியர் வாழ்க்கையையொட்டிய கூத்து வகையொன்று பாமரமக்களால் விரும்பி ஆடப்பட்டு வந்த தென்பது புலனாகிறது. இதிலிருந்தே பள்ளு என்ற தனிப் பிரபந்தவகை வளர்ந்திருக்கவேண்டும்.

3

பள்ளுப் பிரபந்தம் எவ்வாறு தோன்றி வளர்ந்தது என்பதை இங்ஙனம் ஒருவாறு ஊகிக்கலாமே யொழியத் திட்டமாய்க் கூறமுடியாது. 17-ம் நூற்றாண்டிலிருந்துதான் இதன் சரித்திரம் தெளிவாகப்புலப்படக்கூடியதாயிருக்கிறது. தமிழ் நாட்டின் மூவேந்தரான சேர சோழ பாண்டியர்களின் வமிசங்கள் அழிவுற்றுப் பல நூற்றாண்டுகள் ஆய்விட்டன. பின்னர் அரசியற் குழப்பங்களால் அமைதியற்றிருந்த நாடு நாயக்க மன்னரது ஆட்சியிலும் அவர்களது பிரதிநிதிகளின் கீழும் ஒருவாறு அமைதியுற்று வாழத் தொடங்கியது. இடைக்காலத்து நிகழ்ந்த குழப்பங்களால் சிறப்பு மிக்க பழைய கவி மரபு தடைப்பட்டு விட்டது. பிற மக்கள் கலப்பால் கவிவாணர்கள் புதிய முறையில் நூல் செய்வதில் ஈடுபட்டார்கள். பழைய பெருங் கவிய மரபு தடைப்பட்டமையால், இவர்களுக்கு ஒப்பற்ற பெருந்தலைவனொருவனைப் போற்றிப் பெருங்காப்பிய மொன்று செய்வதில் ஊக்கமில்லாது போனமை இயல்பே. புதுக்காப்பியஞ் செய்ய முனைந்தவர்கள் தாமறிந்த மக்களையும் அவர்கள் வாழ்க்கையையும் பொருளாக அமைத்துச் செய்யுள் செய்தார்கள். தமிழ் நாடு முழுவதும் பயிர்செய்வோர் மிகுதியாதலால், இவர்கள் வாழ்க்கையிலேயே பாடுவோர் மனஞ்சென்றது. பயிர்த்தொழில் செய்யும் உழவரும் உழத்தியரும் தொழிலில்ஈடுபட்டிருக்கையிலேயே பாடியும் ஆடியும் தம் வாழ்க்கையை ரசமாக அனுபவித்து வந்தார்கள். இவர்களிடையே இலக்கியம் இல்லை யென்பதொன்றே

யொழிய பாட்டுக்கள் வேண்டியவரை வழங்கிவந்தன. புது நூல்கள் செய்வதில் ஊக்கங்கொண்டிருந்த கவிஞர்கள் இப்பாடல்களைத் தாமும் அனுபவிக்கத் தொடங்கி, இவைகளைத் தங்கள் திருத்தமான மொழியில் அமைத்ததன் மூலமாக இவைகளை இலக்கியமாக்கி விட்டார்கள். இவ்வாறு எழுந்த இலக்கியங்களே பள்ளும் அதனொடொத்த முற்றப் பிரபந்தங்களும்.

4

நூற் பொருள்

பள்ளர் வாழ்க்கையைக் கூறுவதால் இப்பிரபந்தம் பள்ளு எனப் பெயர்பெற்றது; பள் - பள்ளர் சாதி. பள்ளர் என்பார் இன்றும் திருநெல்வேலி முதலிய இடங்களில் பயிர்த்தொழில் செய்துவரும் மக்கள்; இவருள் பெண்மக்கள் இக்காலத்துப் பள்ளியர் என்றும் பள்ளத்தியர் என்றும் கூறப்படுவர். தஞ்சை முதலிய பிரதேசங்களில் பள்ளி என்று வழங்கப்படும் வகுப்பினர் வேறு. இனி, பொதுவாகப் பள்ளினுட் கூறப்படும் பொருள் யாதென்பதைப் பார்க்கலாம்.

உழவர் உழத்தியரது ஏழை வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளை எளிய நடையில் நயம்படச் சித்திரிப்பதே பள்ளுப் பிரபந்தத்தின் உட்கோளாகும். சிறப்புமிக்க ஒரு பண்ணையிலே பள்ளனொருவன் பரம்பரையாகப் பயிர்த் தொழில் செய்து வருகிறான். இவனுக்கு மனைவியர் இருவர். இளையவள் மோகத்திலே மூழ்கிய பள்ளன் மூத்த பள்ளியைத் திரும்பிப் பார்ப்பதில்லை. இந்நிலையில் மழை பெய்து ஆற்று வெள்ளம் வருகிறது. மூத்தபள்ளி பண்ணைக் காரனிடஞ் சென்று பள்ளன் வேலையை மறந்து இளையவள் வீட்டிலேயே கிடப்பதை யறிவிக்கிறாள். பண்ணைக்காரன் இளையவளைக் கோபிக்கிறான். ஒளித்திருந்த பள்ளன் வெளி

வருகிறான். பண்ணைச் செயலைச் சொல்லுமாறு பண்ணையான் கேட்க, பல்வான் விதைவர்க்கம், மாட்டுவகை, மேழிமுதலான கருவிவகை ஆகியவற்றைக் கூறி மீள்கிறான். பண்ணைக் காரன் சொற்படியே சென்று வயலில் கிடை வைப்பதற் காகக் குட்டிடையனை அழைத்து வருகிறான். இடையரை வயலில் ஏவிவிட்டு மறுபடியும் இளையபள்ளி வீடே கதியாகப் போய்விடுகிறான். மூத்தவள் மீண்டும் பண்ணையானிடம் முறையிடுவது தெரிந்து, தான் பயிர்த் தொழிலைக் கவனித்து வருவதுபோல் பாசாங்கு செய்கிறான். பள்ளனது கள்ளத் தைக் கண்ட பண்ணையான் அவனைத் தொழுவில் மாட்டு கிறான். பள்ளன் படுந் துன்பத்தைக்கண்டு மூத்தவள் மனம் பொறுமல் தான் பிணைப்பட்டு அவனை மீட்கிறாள். விடுவிக் கப்பட்ட பள்ளன் விதைக்கணக்கு முதலியன சொல்லி, நல்ல முகூர்த்தத்தில் பள்ளரெல்லோரையுங் கூட்டிச்சென்று உழு கிறான். பள்ளனை ஒரு மாடு முட்ட அவன் மயங்கி விழு கிறான். பள்ளியர் வருந்தி நிற்கின்றனர். பின்னர் அவன் தேறி எழுந்து வேலையைக் கவனிக்கிறான். நாற்றுப் பறித்து, நடவு ஆகி, பயிர் நன்றாக விளைகிறது. அறுவடைசெய்து கண்டுமுதல் பண்ணி, செலவு வகைகளுக்குப் பள்ளன் நெல் அளக்கிறான். தன்னை அலட்சியம்செய்து தனக்குரிய பங்கைப் பள்ளன் சரியாகத் தரவில்லை என்று மூத்தவள் பள்ளியர் முன் முறையிடுகிறாள். கேட்டிருந்த இளையவள் அவளைக் கோபிக்க, இருவருக்கும் ஏசல் மூளுகிறது. முடிவாக, பள்ளி யர் இருவரும் தாமே சமாதானமாகிப் பாட்டுடைத் தலைவனை வாழ்த்திப் பள்ளனோடு ஒத்துவாழ்கிறார்கள்.

நூலின் பொருள் அமைதி இவ்வளவே. அகப்பொருள் தழுவிய கோவை முதலிய பிரபந்தங்கள் போலவே, பள்ளி யும் பாட்டுடைத் தலைவன் பெயர் மட்டுமே கூறப்படும்; கதாபாத்திரங்களுக்குரிய பெயர்கள் வழங்கப்படமாட்டா.

பள்ளன் பாட்டுடைத் தலைவன் பெயரைச் சார்த்திக் குறிப்பிடப்படுவான். பள்ளியருள் மூத்தவள் பாட்டுடைத் தலைவனது ஊர் அல்லது நாட்டின் பெயரைச் சார்த்தியும், இளைய வள் அயல் ஊர் அல்லது நாட்டின் பெயரைச் சார்த்தியும் வழங்கப்படுவர்; இவ்விருவருள் ஒருத்தி சிவனடியாளாய் மற்றவள் விஷ்ணுவினடியாள். வைணவப் பள்ளாகிய முக்கூடற் பள்ளில் இம்மூவரும் முறையே அழகக்குடும்பன், முக்கூடற் பள்ளி, மருதூர்ப் பள்ளி என்று பெயர் பெறுகிறார்கள்; சைவப் பள்ளாகிய திருவாரூர்ப் பள்ளில் வன்மீகப் பள்ளன், வன்மீகப் பள்ளி, சீரங்கப் பள்ளி என்று பெயர் பெறுவர்.

5

முக்கூடற் பள்ளு

இந்நூல் முக்கூடலில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் திருமால்மீது பாடப்பெற்ற பிரபந்தம். திருமால், கருடாழ்வார், சேனைமுதலிகள், நம்மாழ்வார் என்னும் மூல்வருக்கும் கடவுள் வணக்கங் கூறி நூல் ஆரம்பமாகிறது. பள்ளியர் இருவரும் பள்ளனும் தோன்றித் தங்கள் குலப் பெருமை கூறுகிறார்கள். பிறகு பள்ளியர் தங்கள் நாட்டு வளமும் நகர்வளமும் பாடி, மழை பெய்யுமாறு கூவும்படி குயிலை வேண்டுகிறார்கள். பள்ளரெல்லோரும் திரண்டு, மழை வேண்டிக் கிராம தேவதைகளுக்குப் பூசை போடுகிறார்கள். மழை பெய்வதற்கான அறிகுறிகள் உண்டாகி, மழைபெய்து, ஆற்றில் வெள்ளம் பெருகி, குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தல் என்னும் ஐவகை நிலங்களிலும் பாய்ந்தோடுகிறது. இங்கு, பொருநையாற்றிலும் சித்திரா நதியிலும் போகும் மீனினங்கள் வருணிக்கப்படுகின்றன. பிறகு பண்ணைக்காரன் வரவும், மூத்தபள்ளி தன் குறைகளை அவனிடம் சொல்ல, கதை மேலே தொடர்ந்துபோகிறது. பள்ளன் உழச்செல்லும்

போது அவனுக்கு உதவியாகச் செல்லும் பள்ளர் வகையீர், பள்ளியர் நடச்செல்லும்போது பள்ளியர் வகையும், அவர்கள் காதற் செய்திகளும் விவரிக்கப்படுகின்றன. விதை, மாடுகள், ஏர்க்கால் முதலியவற்றின் கணக்குரைக்கும்போதும் கண்டுமுதலான நெல்லுக்குச் செலவு கூறுமிடத்திலும் முக்கூடல் தல சம்பந்தமான பல செய்திகள் புனைந்து கூறப் படுகின்றன. ஏசலில் பள்ளியர் தம்மை ஏசிக்கொள்வதோடு நில்லாது சைவ வைணவ சரித்திரங்களைச் சுட்டியும் ஏசிக் கொள்ளுகிறார்கள்.

பொதுவாகப் பள்ளுப் பிரபந்தத்துக்கு இன்றியமை யாத உறுப்புக்கள் இவ்வளவே. பிற்காலத்தே நூல் செய்த ஆசிரியர்கள் தத்தம் கவித்திறனுக்கு ஏற்ப இவைகளைப் பெருக்கியும் மாற்றியும் பிரபந்தங்கள் செய்தனர். ஆற்று வெள்ளம் பெருகிவருவதை வருணிக்கும்போது அதில் ஓடம் விடுவது வையாப்பள்ளு முதலியவற்றிலும், வெள்ளத்துக்கு அணைகொலுவது குருகூர்ப்பள்ளிலும் கூறப்படுகிறது. இதை யடுத்து, பள்ளியர் கும்மியடிப்பது பல நூல்களில் சொல்லப் படுகிறது. மாடுமுட்டிப் பள்ளன் மயங்கி விழுவதாகப் பெரும்பான்மையான பிரபந்தங்கள் கூறுவதற்கு மாறாக, அவன் காலில் கொழுப்பாய்ந்து அவன் மயங்கி விழுகிறான் என்று திருவாரூர்ப்பள்ளும் குருகூர்ப்பள்ளும் கூறும். பள்ளியர் ஏசி ஓய்ந்து தாமே சமாதானமாவரென்பதற்கு மாறாக, பண்ணைக்காரன் அவர்களைச் சமாதானம் செய்து வைப்பனென்று சில நூல்கள் உரைக்கும்.

6

முக்கூடல் தல வரலாறு

முக்கூடல் என்பது திருநெல்வேலி ஜில்லாவில் தாமிர பருணி நதியின் வடகரையிலுள்ள சிறு கிராமம்; மூன்று

ஆறுகள் கூடுமிடத்திலிருப்பதால் முக்கூடலாயிற்று. முன் காலத்தில் சித்திரா நதியும் கோதண்டராம நதியும் இவ்வூரில் வந்து பொருநையில் கலந்தமையால், இவ்வூருக்கு இப்பெயர் வந்தது. சித்திரா நதி (= அழகிய நதி) யென்பது வட மொழிப் பெயர்; சிற்றாறு என்பது இதன் தமிழ்ப் பெயர். பெயர் சிற்றாறு என்றிருந்தபோதிலும் பெருமை மிக்கது என்று கூறுகிறார் பள்ளுப் பிரபந்தத்தின் ஆசிரியர்:

சிற்றா றென்பது பெற்றாலும் ஒரு
சிறியவர் மனப் பெருமைபோல்
சித்ரா நன்னதி பெருகி வார
சித்ரம் பாரும்...

சிற்றாறு திருக்குற்றாலத்துக்கு மேற்கே உற்பத்தியாகிறது. இதன் நீர்வீழ்ச்சிகளுள் தேனருவி மிகச் சிறப்புடையது. கோதண்டராம நதி என்பது கழுகுமலைப் பிரதேசத்தில் உற் பத்தியாகும் சிறு வாய்க்கால். இதன் நீர் சிறிது உப்பா யிருப்பதால் உப்போடையென்று வழங்கப்படும். முற் காலத்தில் இது முக்கூடலில் தாமிரபருணியிற் கலந்தது; இப்போது முக்கூடலுக்குச் சிறிது மேற்கே கங்கைகொண் டான் என்னுமிடத்தில் சித்திரா நதியிற் போய்விழுகிறது. இந்நதியைக் குறித்து ருசிகரமான கதையொன்று சொல்வ துண்டு. மானைத் தேடிவந்த இராமபிரான் தாகமிகுதியினல் பக்கத்திலிருந்த ஆனைமலையிலிருந்து ஆனைநதி (கஜநதி - கயத் தாறு) வருமாறு பணித்தார். இதில்வந்த நீர் உப்பாயிருக்கவே, தம் கோதண்டத்தைப் பூமியில் ஊன்றிக் கங்கையை வர வழைத்துத் தாகத்தைத் தீர்த்துக்கொண்டார். கங்கை தோன்றிய இடமே இப்போது கயத்தாறென்னும் ஊரிலுள்ள கோதண்டராமேசுவரர் ஆலயத்துட் காணப்படும் தீர்த்தம். கயத்தாறு கோதண்டராம நதியாகி இக்காலத்தில் உப் போடையாகிவிட்டது. இக்கதை வேறுவிதமாகவும் வழங்கப்

படும்; இந்நூல் 51-ம் பாட்டின் அடிக்குறிப்பிற் கண்ட செய்யுளில் இந்நதியின் வரலாறு உரைக்கப்பட்டிருக்கிறது.

முக்கூடலுக்கு இப்போது வழங்கும் பெயர் சீவலப் பேரி என்பது. 12-ம் நூற்றாண்டில் அரசுபுரிந்த பாண்டியன் மாறவர்மன் ஸ்ரீ வல்லபனால் சீவலப்பேரி என்ற பெயருடைய ஏரியொன்று கட்டப்பட்டது. அதையொட்டி இவ் வூருக்கும் அப்பெயரே வழங்கப்படுகிறது. ஏரிகள் வகையில் சீவலப்பேரியும் ஓர் ஏரியென்பதாக இந்நூலும் (92) குற்றாலக் குறவஞ்சியும் (81) கூறும். இந்த ஏரிக்குத் தண்ணீர் பாய்ச்சி வந்தது சித்திரா நதி. இதன் பொருட்டுச் சித்திரா நதியில் போடப்பட்டிருந்த அணை 1796-ம் ஆண்டில் வெள்ளத்தால் உடைந்து அழிந்து போயிற்று. அதுமுதல் இந்த ஏரி நன்செய் நிலமாக மாற்றிவிட்டது. இதுவன்றி, 12-ம் நூற்றாண்டினிறுதியில் அரசு புரிந்த வீரபாண்டியனால் கட்டப்பட்ட வீரபாண்டியப்பேரியும் இந்நூலில் (92) குறிப்பிடப் படுகிறது.

சீவலப்பேரியில் தாமிரபரணி மிக அகலமாயுள்ளது. வருஷத்தில் பெரும்பாகமும் தண்ணீர் ஆற்றின் நடுவில் குறைவாகச் சிறிய ஓடைபோல ஓடும். நீரோட்டத்துக்கும் கரைக்கும் அதிக தூரமாகையால், தண்ணீர் மொண்டு வருவது மிக்க சிரமம். இது காரணமாக 'சீவலப்பேரியில் பெண் கொடுப்பதைவிடச் செக்கிழுக்கப் போடலாம்' என்ற ஒரு பழமொழி வழங்குகிறது.

முக்கூடலில் பழமையான விஷ்ணுவாலயம் ஒன்றுண்டு. இங்கு எழுந்தருளியிருக்கும் திருமாலின் திருநாமம் அழகர் என்பது. இந்நூலில் இவர் அலங்காரர் என்றும் செண்டலங்காரர் என்றும் கூறப்படுகிறார்; கையில் செண்டு என்னும் ஆயுதத்தைத் தாங்கியிருப்பதால் செண்டலங்காரப்

பெருமாள் என்று பெயர் பெற்றார். திருமாலிருஞ்சோலை மலையில் எழுந்தருளியிருக்கும் திருமாலுக்கு அழகர், மாலலங்காரர் என்ற திருநாமங்களும் கூடலில் கூடலழகர் என்ற திருநாமமும்உண்டு. முக்கூடலுக்குத் தென்கூடலென்ற பெயரும் அழகருக்குத் தென்கூடலழகரென்ற பெயரும் வழங்கினவென்று தெரிகிறது. 'தென்முக்கூடல்' எனவும் 'தெக்கண விட்டுணு' எனவும் இந்நூலிற் காணப்படுவன இக்கூற்றை வலியுறுத்தும்.

அழகராலயத்தில் சேர சோழ பாண்டிய ரென்னும் மூவேந்தரின் சாசனங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. பாண்டியன் சடையன் மாறனுடைய சாசனங்களும் இராசராச சோழனுடைய சாசனங்கள் பதிஞென்றில் சிலவும் வட்டெழுத்திலுள்ளவை. வீரராசேந்திரசோழன் சாசனமொன்றும், முதற் குலோத்துங்கசோழன் சாசனமொன்றும், முதல் ராசேந்திர சோழன் (1012-44) சாசனங்களிரண்டும் தமிழெழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

சிவலப்பேரியிலுள்ள சாஸ்தாகோயிலும் பூலாவுடையார் கோயிலும் பிரசித்தமானவை ; இவற்றில் திருவிழா சிறப்பாக நடந்து வந்தது. இவ்விரு காவல் தெய்வங்களும் இந்நூலகத்துக் குறிப்பிடப்பட்டுள்ளன. மாடுமுட்டிப் பள்ளன் கீழே விழுந்ததைக் கண்ட பள்ளி, 'இது ஐயா பூலாவுடையார் குறையோ' என்றஞ்சுவதாக நூல் கூறுகிறது. ஏனை காவல் தேவதைகள் புலியூருடையாரும் வடவாய்ச்செல்லியும்.

இவ்வூரின் பிடாகையான மறுகால்தலை யென்னுமிடத்தில் மலையில் செதுக்கப்பட்டுள்ள 'பஞ்சபாண்டவர் படுக்கை' யும் அதன்மேலுள்ள பாறையில் பாலி லிபியில் வெட்டப்பட்டுள்ள அசோகசாசனத்தையொத்த எழுத்துக்களும் இங்கே புத்த சமயம் பரவியிருந்ததைக் காட்டும்.

முக்கூடல் நகரம் இருநூறாண்டுகளுக்கு முற்பட்ட காலம் வரையில் நாகரிகத்திலும் பயிர்த்தொழிலிலும் மிகப் பிழைத்தி பெற்றிருந்ததாகத் தெரிகிறது. பிற்காலத்தில் அழிந்துவிட்டது. இப்போது பிரபலமான சந்தையொன்று அங்கே வருடந்தோறும் நடைபெறுகிறது. அது காரணமாகவே இவ்வூருக்குச் சிறிது முக்கியமேற்பட்டிருக்கிறது. தளவாய் முதலியார் சத்திரமொன்றும் இங்கிருக்கிறது.

7

நூலாசிரியர்

இந்நூலைச் செய்து புலவர்களுக்கெல்லாம் புது வழியொன்றைக் காட்டிய ஆசிரியர் பெயர் அறியமுடியவில்லை. பரிசோதித்த ஏடுகள் ஒன்றிலும் இவர் பெயர் காணப்படவில்லை: எனினும், இவர் சிறந்த பக்தர் என்பதும், நம்மாழ்வாரிடத்து மிக்க ஈடுபாடுடையவர் என்பதும், சைவ சமயத்திலும் ஒத்த அன்புடையவர் என்பதும், நன்றியறிதல் மிக்கவர் என்பதும் நூலிலிருந்து வெளியாகின்றன.

நூல் தோன்றிய காலம்

ஆசிரியர் பெயர் அறியமுடியாத போதிலும், இந்நூல் தோன்றிய காலத்தை யறிய இரண்டு குறிப்புக்கள் இதனகத்தே கிடைக்கின்றன. பள்ளியர் மழைபெய்யக் கூவும் படிக் குயிலை வேண்டுவதாக அமைந்த குயிற்பாட்டிலே, ஆசிரியர்—

காவை வரு திருமலைக் கொழுந்து முகில்
செங்கோன்மை ஓங்கவே கூவாய் குயிலே (29)

என்று கூறுகிறார். இத் திருமலைக்கொழுந்து என்பவர் காவை வடமலையப்ப பிள்ளையன் புதல்வரான காவை திருமலைக்

கொழுந்துப் பிள்ளையன். வடமலையப்ப பிள்ளையன் கி. பி. 1663-ம் ஆண்டில் காலஞ்சென்றார் என்று கன்னியாகுமரிக் கல்வெட்டொன்றினால் தெரியவருகிறது. திருமலைக்கொழுந்துப் பிள்ளையன் அதுமுதல் 1682 வரையில் திருநெல்வேலிச் சீமையை ஆண்டு வந்தார். மேலே காட்டிய குயிற்பாட்டில் திருமலைக்கொழுந்து மன்னனுடைய செங்கோன்மை நிலை பெற்று வளரவேண்டும் என்று நிகழ்காலத்தில் கூறியிருக் கிறபடியால், நூல் திருமலைக்கொழுந்துப் பிள்ளையன் ஆட்சி புரிந்த காலத்திலே (1663 - 1682 க்குள்) செய்யப்பெற்ற தென்பது நிச்சயமாகிறது.

மேலும், மேழி ஏர்க்கால் முதலிய பயிர்த்தொழிற் கருவிகளைப் பண்ணைக்காரனுக்குப் பள்ளன் கணக்கு ஒப்பு விப்பதாயுள்ள பாடலில்,

அனகன் ஆறை வரும் நயினத்தை
அழகர் மண்டபத் தூண்சாரம் ஏற்றக்
கனக நீள்வடங் கோடி கொடுத்தேன் (74)

என்று பள்ளன் கூறுகிறான். 'நயினத்தை' என்பது பொது வாகத் திருநெல்வேலியில் முதலியார் மரபினரைக் குறிக்க உபயோகிக்கும் சொல். ஆறை வரும் நயினத்தை என்பவர் ஆறை அழகப்ப முதலியார்; திருநெல்வேலியில் பெருஞ் சிறப்பு வாய்ந்த தளகர்த்தராயிருந்தவர். இவர் முக்கூடல் அழகர் கோயிலுக்குத் திருப்பணி செய்த வரலாறு இவ்வடி களில் சுட்டப்படுகிறது. இவர் காலம் கொல்லம் 851 - 905 ஆண்டுகள்; அதாவது கி. பி. 1676 - 1730. இவர் அழகர் மண்டபத்தில் தூண்சாரம் ஏற்றும்பொருட்டு வடக்கயிறுகள் கொடுத்ததாகப் புலவர் கூறுவதால், இவர் காலமும் புலவர் காலமும் ஒன்றே. ஆகவே நூல் செய்த காலத்தே திருமலைக் கொழுந்துப் பிள்ளையனும் ஆறை அழகப்ப முதலியாரும் வாழ்ந்திருந்தமையால், இருவருக்கும் பொதுவாகிய 1676 -

1682 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தே நூல் செய்யப் பெற்றிருக்கலாம்; உத்தேசம் 1680 என்று கொள்ளலாம்.

8

இந்நூலுள் கூறப்பட்டோர்

காவை அம்பலவாணர்

இவருடைய பெயர் இந்நூலில் இரண்டிடங்களில் வருகிறது. சித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றான இருபாவிருபதுக்கு உரைசெய்த மதுரைச் சிவப்பிரகாசர் தமது அவதாரிகையில், "இந் நூலுக்கு வியாக்கியை செய்யவேண்டினது கொண்டு மெய்கண்ட சந்ததியிற் காவை அம்பலநாதத் தம்பிரான் திருவடிமரபிலாரில் மதுரை ஞானப்பிரகாசத் தம்பிரான் திருவடியைப் பெற்ற சிவப்பிரகாச ஞானப்பிரகாசத் தம்பிரானுர் கடாட்சித்த உபதேச சம்பிரதாயத்தைச் சகாத்தம் ஆயிரத்து நானூற்றெருபதின்மேற் செல்லாநின்ற காலத்திலே வியாக்கியை செய்ததென அறிக" என்று உரை வரலாற்றை யுரைத்தார். இதிற் குறிப்பிட்ட சகம் 1410-க்குச் சரியான ஆண்டு கி. பி. 1488. அம்பலநாதத் தம்பிரான் என்பாரே அம்பல்வாணர்; அம்பலவாணத் தம்பிரான் என்றே பிற இடங்களில் வழங்கப்படுகிறார். இவர் மெய்கண்ட சந்தான பரம்பரையில் தீட்சைபெற்றுத் துறவு பூண்டாரென்பது இதனால் தெரிகிறது. இவரது திருவடி மரபு எனக் கூறப்பட்டிருத்தலால், இங்கே குறிப்பிட்ட 1488-ம் ஆண்டுக்குப் பல ஆண்டுகள் முன்னரே இவர் வாழ்ந்தவர் எனக் கருத இடமேற்படுகிறது; உத்தேசம் 1425 எனக் கொள்ளலாம்.

இவரது ஊர் காவனூர் என்னும் காவை; திருப்பரங்குன்றத்தைச் சார்ந்ததெனக் கூறுவர். இவர் கார்காத்த வேளாண் மரபினர்; அதற்கேற்பச் சிறந்த வள்ளலாக விளங்கி

னூர் என்பது இந்நூலாசிரியர் இவரை "பாவலர்க் குபகாரி" என்று சிறப்பிப்பதனால் பெறப்படுகிறது. பாவலர்க் குபகாரியாயிருந்ததோடன்றி, தாமும் சிறந்த ஒரு பாவலர்; சமய அறிவு மிக்கவர்; பல சைவ நூல்கள் செய்தவர். யோக மார்க்கங்களுள் ஒன்றான பிராசாத மார்க்கத்தைப் புலப்படுத்தும் பிராசாத அகவல் என்ற நூலும், சித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றான திருவருட்பயனுட் சொல்லப்படும் பொருளை உதாரணத்தால் விளக்கிக் கூறும் திருவருட்பயன் உதாரணக் கலித்துறை என்ற நூலும் இவர் செய்தவை. அன்றியும், சிவப்பிரகாசத்தின் கருத்தைத் தொகுத்து ஒவ்வொரு செய்யுளுக்கும் ஒரு கொளு அமைத்திருக்கிறார். இவர் சந்ததியினர் பல பிரிவினர் என்பதைக் கருத்துட்கொண்டே இந்நூலாசிரியர் 'காவை அம்பலவாணன் பல கிளையுந் தழைக்கவே கூவாய் குயிலே' என வாழ்த்துகிறார்.

காவை வடமலையப்ப பிள்ளையன்

இவர் அம்பலவாணரது வழித்தோன்றல். சிறந்த தலைவர். திருமலை நாயக்க மன்னர் காலத்தும் சொக்கநாத நாயக்கர் காலத்தும் திருநெல்வேலிச் சீமையை ஆண்டு வந்தவர். செஞ்சிக்கும் கூடலுக்கும் தஞ்சைக்கும் இவர் ஆணை சென்றதென இந்நூல் கூறும். குதிரை சவாரி செய்பவரென்பதும், இவர் குதிரை கறுப்பு நிறமுடையதென்பதும் இந்நூலால் விளங்குகின்றன. சிவபக்தர். சைவ வைணவ ஆலயங்களுக்கு விசேஷமான தருமங்களைச் செய்திருக்கிறார்.

17-ம் நூற்றாண்டிலே டச்சுக்காரருக்கும் போர்த்துக்கீசியருக்கும் கீழ் கடற்கரை யோரங்களில் பல போர்கள் நடந்தன. ஒருமுறை டச்சுக்காரர்கள் 1648-ல் திருச்செந்தூரிலிறங்கி ஆலயத்திற் புகுந்து கொள்ளையடித்து அங்கிருந்த மூர்த்தியைக் கடலிலெறிந்துவிட்டுப் போயினர். வடமலை

யப்பர் கனவில் முருகப் பெருமான் தோன்றி விக்கிரகம் இருக்குமிடத்தை யறிவிக்கவே, இவர் அவ்விடத்தில் தேடச் செய்து விக்கிரகத்தை மீட்டும் கோயிலில் பிரதிட்டை செய்தார் என்பது பழமையாய்க்கூறப்படும் வரலாறு. இச்செயலைக் கீர்த்தனத்தில் பாடியே வென்றிமாலைக் கவிராசர் இங்கிகழ்ச்சி 829-ம் ஆண்டில் (கி. பி. 1654) நடந்தது எனக் குறிப்பிட்டிருக்கிறார். வடமலையப்பர் செயலை நினைவு கூர்தற்காக வட மலையப்பர் மண்டபமென ஒரு மண்டபம் அமைக்கப்பெற்றிருக்கிறது; முருகப்பெருமான் விழாக் கொள்ளுங்காலத்து அங்கெழுந்தருளுவதுண்டு.

முக்கூடலில் அழகருக்காகப் பிள்ளையன் ஐந்து குளங்கள் தோண்டுவித்தாரென்றும் அவற்றில் அழகர் முத்திரையாகிய சக்கரம் பொறிக்கப்பெற்ற கற்களை நாட்டினரென்றும் இந்நூல் (14) கூறுகிறது. சங்கர நயினார் உலா, தென்திருப்பேரை மகரநெடுங் குழைக்காதர் திருப்பணிமாலை, திருக்கோஷ்டியூர் வைத்தமாநிதி திருப்பணிமாலை முதலிய நூல்கள் இவர் சைவ வைணவ ஆலயங்களுக்குச் செய்த திருப்பணிகளைத் தெரிவிக்கும். இந்நூல்கள் இவருடைய குண விசேஷங்களையும் வள்ளன்மையையும் பலவாகப் பாராட்டிப் புகழும். ஐயன் என்ற சொல் இவரது பெருமைக் கடையாளமாக இவர் பெயரின்பின்னர் சேர்த்து வழங்கப்பட்டது; இவர் பரம்பரையினருக்குரிய சிறப்புப் பெயராக இன்றும் வழங்கப்படுகிறது. இவர் காலத்தே திருநெல்வேலிப் பிரதேசத்தில் இவர்மீது பிரபந்தம் இயற்றிப் பாடாத புலவரே கிடையாது. வடமலை வெண்பா இவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது. முக்கூடலில் இவரது மாளிகை யிருந்ததென்பது 'வடமலேந்த்ரன் மடத்துக்கு வேண்டுஞ் செந்நெல் வாரிக் குவிப்பார்' என்று இந்நூலகத்து வருவதால் விளங்குகிறது. பிள்ளையன் தாயார் அந்தியகாலத்தே இவ்வூரில்

இருந்ததாகவும், தாமிரபருணியின் தண்ணீர் குடித்தே தாம் கடைசிவரை உயிர் தரிக்கவேண்டும் என்று அவர் விரும்பிய மையால், மாளிகையோரமாகத் தாமிரபருணியிலிருந்து ஒரு வாய்க்கால் ஓடிவரும்படியாகப் பிள்ளையன் செய்வித்தாரென் றும், அவ்வாய்க்கால் நீர்ப்பாசனத்திக்கும் உபயோகிக்கப் பட்டுப் பிற்காலத்தில் அழிந்துபோய்விட்டதென்றும் சொல் லப்படுகிறது. 1663-ல் பிள்ளையன் காலஞ் சென்றார். பிறகு அவர் குடும்பத்தினர் இருபிரிவாகப் பிரிந்தனர்; ஒரு பிரிவினர் ஆற்றுக்கு வடகரையிலும் மற்றொரு பிரிவினர் தென்கரை யிலும் இருந்துவிட்டனரென்று தெரிகிறது.

காவை திருமலைக்கொழுந்துப் பிள்ளையன்

வடமலையப்பரது புதல்வர். இவர் காலம் 1663 - 1682 என மேலே கூறப்பட்டது. சொக்கநாத நாயக்கரது பிடதி நிதியாக இவர் திருநெல்வேலிச் சீமையில் ஆட்சிபுரிந்தார். தந்தையைப்போலவே இவரும் புலவரை ஆதரித்தார். திருமலை வேண்பா இவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது. திருக்குற்றாலநாதர் ஆலயத்துக்கு இவர் நிலங் கள் தானஞ் செய்தமை குற்றாலக் குறவஞ்சியில் கூறப்பட் டுள்ளது. இவர் புதல்வராகிய இரசை வடமலையப்பர் 1682 முதல் ஆட்சிபுரிந்தார். இவரது வள்ளன்மையைப் புலவராற்றுப்படை வியந்துகூறும். வள்ளலா யிருந்ததோடு தாமும் பெருங் கவிஞராயிருந்தார். ஐயாயிரம் செய்யுள் கொண்ட மச்ச புராணத்தையும் நீதிப் புராணத்தையும் இவர் செய்தார். மச்ச புராணத்தின் அரங்கேற்றம் 1706-ல். நீதிப் புராணத்திலிருந்து பிள்ளையன் பரம்பரைக்குரிய கோத்திரப் பெயர் 'நாரணக்குட' என்று தெரிகிறது.

ஆறை அழகப்ப முதலியார்

இவர் காலம் 1676-1730 என்பதும் முக்கூடல் அழகர் கோயிலுக்கு இவர் திருப்பணி செய்தமை இந்நூலுட் கூறப்

பட்டிருக்கிறதென்பதும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளன. திருவிதாங்கூர் இராச்சியத்தின் அரசுரிமையைக் குறித்துத் தாயத்தார்களுக்குள் கலகம் நேர்ந்தபோது அதைத் தீர்த்து வைப்பதற்காக நாயக்க அரசருடைய பிரதிநிதியால் சேனையோடு அனுப்பப்பட்டவர். கலகத்தை அடக்கி, திருவிதாங்கூர் மன்னனுக்கு அரசுரிமையை வாங்கி அளித்துத் திரும்பியவர். சிறந்த உபகாரி. இவருடைய புகழ் சிவசைலப் பள்ளில் விளங்கக் கூறப்பட்டிருக்கிறது.

பெரியநம்பி அய்யங்கார்

சீரத்துர் என்னும் ஊரினர். முக்கூடலிலிருந்த இராமானுச மடத்தின் தலைமைப் பீடத்தில் அமர்ந்திருந்தாரென ஊகிக்க இடமிருக்கிறது. 'தருமநிதி' எனக் கூறப்படுகிறார். இவரது திருமாளிகைக்கு அழகர் பண்ணையிலிருந்து நெல் அளக்கப்பட்டதெனத் தெரிகிறது.

9

நூலைக் குறித்த செய்திகள்

முக்கூடற்பள்ளு சம்பந்தமாக குறிப்பிடத்தக்க இரண்டு செய்திகள் கர்ணபரம்பரையாக வழங்கி வருகின்றன.

87-ம் பாட்டாகிய 'வரத்தினை மீறும் செலவுக்குத் தரித்திரம் ஏறும்' என்ற செய்யுளைப் புலவர் பாடிவரும்போது, 'பரத்தைக் கைச் சுள்ளும்' என்று சொன்னவுடன் அவருடைய வாக்குத் தடைப்பட்டு நின்றுவிட்டதாம்; இரண்டு நாள் வரையில் பாட்டை முடிக்க இயலாமல் புலவர் அப்படியே இருந்துவிட்டாராம். பிறகு, ஆற்றின் அக்கரையிலுள்ள ஊரிலிருந்து ஒரு பெண் தலையில் குடத்தைச் சுமந்துகொண்டு தன்னெதிரே போவதைத் தற்செயலாகக் கண்டார். கண்டவுடன், தடைப்பட்டிருந்த அவருடைய வாக்கு 'அக்கரைத்-

[1]திருத்தினிற் கள்ளும்' என்று மேலே செல்ல ஆரம்பித்தது. சரசுவதியே ஒரு பெண் வடிவெடுத்துவந்து பாட்டை மூடிக் கப் புலவருக்கு இவ்வாறு வழி காட்டினளென்று புலவரும் பிறரும் நம்பினர்களாம். வந்த பெண்ணே இவ்வடியைச் சொல்லிக்கொடுத்து மறைந்தாளென்றும் சொல்வதுண்டு.

மற்றொரு செய்தியும் இப்பாட்டு சம்பந்தமானதே. நூல் செய்யப்பட்ட காலத்தில் முக்கூடல் மிக்க செழிப்புள்ள நிலையிலிருந்திருந்த போதிலும், பிற்காலத்தில் வளங்குன்றி க்ஷீணித்து விட்டது. இந்த அழிவுக்குக் காரணம், சரசுவதி சொல்லிக்கொடுத்த இப்பாட்டில் பூலவர் 'தரித்திரம் ஏறும்' என்ற தொடரை அமைத்திருந்தது தான் என்று சொல்லு கிறார்கள். திரிகூடராசப்ப கவிராயர் குற்றாலக் குறவஞ்சியில் இலஞ்சி என்ற ஊரைக் குறிப்பிடும்போது 'மீறும் (எல்லா வளங்களும் செழிக்கும்) இலஞ்சி' என்றமையால் அவ்வூர் சிறப்புற்றோங்கியது என்பது மற்றொரு கர்ணபரம்பரைச் செய்தி. சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக முக்கூடலில் இருந்த கார்காத்த வேளாண் மக்களுடைய செல்வநிலை சீர்கேடடைந்து அவர்கள் தாழ்ந்த நிலைமையை யடைந்து விட்டார்கள்; இலஞ்சியிலிருந்த கார்காத்த வேளாளர் சிறப் புற்று வாழ்ந்துவந்திருக்கிறார்கள். இவ்விஷயமே மேற்சொன்ன செய்திகள் எழுந்த காரணத்தை விளக்கப் போதியதாகும்.

10

இந்நூலும் பின்வந்த பள்ளுகளும்

முக்கூடற் பள்ளிலமைந்த செய்யுள் வகைகள் கலிப்பா சிந்து என்னும் இரண்டே. பள்ளு வரிசையில் இது முதலில் தோன்றிய நூலாதலின் இதன் ஆசிரியர், ஆற்று வரவையும், பள்ளன், பள்ளியர், பண்ணைக்காரன் முதலியோரையும்

[1]திருத்து - புதிதாகத் திருத்தி யமைக்கப்பட்ட ஊர்.

வருணிப்பதோடு நின்று, பிற இடங்களில் கதைப்போக்கைச் சுவைபட எளிமையாகச் சொல்வதையே தம் கருத்துட் கொண்டார். பள்ளர் வாழ்க்கையையும் அவர்கள் செயல்களையும் அவர்கள் பாஷையிலேயே உரைப்பதை நோக்கமாகக் கொண்டாராதலின், இவர் தமது கூற்றுகப் பாட்டுக்களை அடுக்கவில்லை. எனவே இவருக்குச் சுருங்கிய பா வகைகளாகிய கலிப்பாவும் சிந்துமே நூல் செய்யப் போதியனவாயின. பின் வந்தோர் நூலில் முக்கியமாகிய எளிமையைக் கைவிட்டு, அகப்பொருட் செய்திகளை மிகுதியாக அமைக்க வேண்டுமென்றும் தம் புலமைத் திறத்தை வெளியிடவேண்டுமென்றும் கருதியமையால், பிற பா வகைகளைத் தேட வேண்டியதாயிற்று. அகவல், விருத்தம், வெண்பா, கட்டளைக் கலித்துறை முதலியனவும் பள்ளில் புகுந்தன; அதன் உயிர் நிலையாகிய எளிமையும் கவிநயமும் மறைந்தொழிந்தன.

திருமலைப் பள்ளன் 'அச்சமே கீழ்கள தாசாரம்' என்ற திருக்குறளை (1075) அனுயாசமாக எடுத்துப் பிரயோகிக்கிறான்:

அச்சமே கீழ்ச்சாதிக் காசாரம்
என்பர்கள் ஆருமே (திருமலைப் பள்ளு, 103)

தொழுவில் மாட்டப்பட்டுக்கிடக்கும் பருவைப் பள்ளன் தான் செய்த பிழையைப் பொறுக்கும்படி ஆண்டையை வேண்டும் போது, ஆண்டைக்குத் திருக்குறள் போதிக்கிறான்:

ஒறுத்த தாற்பய னென்பொறுத் தாருக்
குலக முள்ளள வும்புக ழென்றே
மறுத்த விர்ந்திடு வள்ளுவனுர் சொன்ன
மான வெள்ளைக் குறள் அறியீரோ?
(பருவைப் பள்ளு, 101)

என்று வினவுகிறான். பின்வந்த ஆசிரியர்கள் பள்ளுப்

பிரபந்த இயல்பை அறவே மறந்துவிட்டார்களென்பதற்கு இவை தக்க சான்றுகள்.

முக்கூடற்பள்ளை முன் மாதிரியாக வைத்தே பிற பள்ளுகள் அனைத்தும் அமைந்தன. அதன் கதைப் போக்கை அனுசரித்தே மற்றவைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. பள்ளர் பள்ளியர் பண்ணைக்காரன் வருணனை, நாட்டு வளம், ஆற்றுவரவு, ஐந்திணை நிலங்கள், பயிர்த்தொழில், நெற்கணக்கு முதலியவற்றைக் கூறும்போது, முக்கூட்டற் பள்ளில் எந்தச் சந்தர்ப்பத்தில் எவ்வகைச் சந்தமுடைய சிந்து உபயோகிக்கப்பட்டிருக்கிறதோ அந்தச் சந்தர்ப்பத்தில் அதே வகைச் சிந்து தான் பிற பள்ளுகள் எல்லாவற்றிலும் உபயோகிக்கப்பட்டுள்ளது; பெரும்பான்மையான சொற்றொடர்களும் அதிலிருந்தெடுத்தவை. இக்கூற்றுக்குச் சிறிதளவு விலக்கானவை திருவாரூர்ப் பள்ளும் குருகூர்ப் பள்ளுமே.

பிற்காலத்து ஆசிரியர் முதனூலிற் கண்ட சில குறிப்புக்களை எவ்வாறு பெருக்கிக் கொண்டார்களென்பதை ஆராய்ந்தால் இவ்வுண்மையை உணரலாம். உதாரணமாக, பள்ளி பண்ணைக்காரனைப் பலவாறாக வருணித்து அவனைக் கும்பிடுவதாகச் சில செய்யுட்கள் பள்ளுகளில் காணப்படுகின்றன. இலக்கியப் பண்பு நிறைந்த திருவாரூர்ப்பள்ளு, குருகூர்ப் பள்ளு தொடங்கி எல்லாப் பள்ளுகளிலும் இது நிலைத்த உறுப்பாக ஆய்விட்டது. இதற்கு முக்கூடற்பள்ளில் காணப்படும் குறிப்பெல்லாம் 'ஐயா பராக்குப் பாராதும்மைக் கும்பிட்டேனுண்டே' (103) என்ற ஒருவரிதான். மாடு முட்டி மயங்கிவிழுந்த பள்ளனைக்கண்டு மூத்தபள்ளி 'சக்களத்தி புலைமருந்தின் வெறியோ' (117) என்று கூறுகிறாள். அவ்வளவுதான் மருந்து செய்யும் விதத்துக்கு இரண்டு செய்யுட்களும் மருந்தின் குணத்துக்கு இரண்டு செய்யுட்களும் குருகூர்ப் பள்ளில் இடம்பெற்றுவிட்டன. கார்காலம் வரக்

கண்டு முக்கூடலிலிருந்த தலைவியின் கண்கள்கலங்கின என்று இரண்டு வரிகள் (41) முக்கூடற் பள்ளில் காணப்படுகின்றன; திருமலைப் பள்ளு செய்தவர், நந்திக்கலம்பகத்தே கார்காலத்தைக் குறித்த பாட்டுக்கள் அமைந்த முறையில் மூன்று செய்யுட்களை அமைத்துவிட்டார்.

முக்கூடற்பள்ளில் காணப்படும் வாக்கு நயம் குருகூர்ப் பள்ளு நீங்கலாக ஏனைய பிற்காலப் பள்ளுகளில் காணலரிது. 'முக்கூடற் பள்ளைப்போல ஒரு பள்ளும், குற்றூலக் குற வஞ்சியைப்போல ஒரு குறவஞ்சியும், வருண குலாதித்தன் மடலைப்போல ஒரு மடலும் இல்லை' என வழங்கும் பழ மொழியும் இவ்வுண்மையைக் கொண்டே எழுந்திருக்கிறது.

11

முக்கூடற் பள்ளு 17-ம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிற்றென்பது மேலே கூறப்பட்டது. அடுத்த நூற் றாண்டில் தலங்கள் தோறும் பள்ளுப் பிரபந்தங்கள் ஏற்பட லாயின. சிறந்த உபகாரிகளையும் தாம் வழிபடு கடவுளையும் பிர பந்தங்கள் செய்து போற்றி வந்த புலவர்கள், பழைய மரபை யொட்டி, கலம்பகம், அந்தாதி, பிள்ளைத்தமிழ் முதலிய நூல் களைச் செய்வதோடமையாது, அதிகக் கல்வியறிவு பெறுத சாமானிய மக்களும் படித்து அனுபவித்துப் பாடவும் ஆட வும் ஏற்றவையான புள்ளு குறவஞ்சி போன்ற பிரபந்தங் களையும் செய்யலாயினர். 18, 19-ம் நூற்றாண்டுகளில் இந்நூல் கள் பெருகலாயின. மக்கள் மனத்தைக் கவரத்தக்க இசைப் பாடல்களும் நடிப்பதற்கேற்ற உறுப்புக்களும் இவற்றில் அமைந்திருந்தமையின், பொதுமக்கள் இந்நூல்களைப் பயிலு வதில் ஈடுபட்டது இயல்பே. விநாயகர், முருகன், திருமால், சிவபெருமான், அடியார்கள், உபகாரிகள் முதலியோரைப் புகழ்ந்து இப்பிரபந்தங்கள் செய்யப்பட்டன; சில மரபுகளின்

பெருமையை விளக்கும் பொருட்டும் இரண்டொரு பிரபந்தங்கள் தோன்றின. ஆலயங்களில் திருவிழா நடந்த காலத்து, மக்கள் அவ்வத் தலத்துக்குரிய பள்ளையும் குற வஞ்சியையும் பாடியும் கூத்தாக ஆடியும் அனுபவித்து வந்தார்கள். திருவாரூரிலே திருவீழாவுக்காகக் கொடியேற்றும் போதும் இறக்கும்போதும் அத்தலத்துக்குரிய பள்ளும் குற வஞ்சியும் பாடி நடிக்கப்பட்டுவந்தன. தஞ்சை இராச்சாசேச் சுரத்திலும் அப்படியே.

இவ்வாறு இந்தப் பிரபந்தங்களை மக்கள் அனுபவித்து நாடகமாக நடித்து வருகையில், காலப்போக்கையும் நாட்டில் நிகழ்ந்த மாறுதல்களையும் அனுசரித்துப் பழைய முறைகளை மாற்றிக்கொள்வது அவசியமாயிற்று. முதலில் தோன்றிய பள்ளுப்பிரபந்தம் குறிப்பிட்ட ஓரிடத்து மக்கள் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாய் அமைந்திருந்தது. இது தமிழ்நாடு முழுவதிலும் பரவியகாலத்து, வெவ்வேறிடத்துள்ள மக்களியல்புக் கேற்றவாறு இதன் உறுப்புக்களை விரிவுக்கவும் சுருக்கவும் வேண்டியது இன்றியமையாததாயிற்று. திருவாரூர்ப் பள்ளு பிற்காலத்தில் கட்டியக்காரன் வரவு என்ற உறுப்பும் பல்லவி அனுபல்லவி சரணம் என்ற பகுதிகளையுடைய கீர்த்தனங்களும் சேர்த்துப் பெருக்கப்பட்டது என அந்நூல் முகவுரையால் தெரிகிறது. வைசியர் திரைகட்டோடியுந் திரவியம் தேடுபவராகையால், அவர்களைச் சிறப்பிக்க வந்த பள்ளில் கப்பற்பாட்டும் சரக்குக்களின் வகையும் கூறப்படுதல் இயல்பே.

12

முக்கூடற் பள்ளு நாடகம்

முக்கூடற் பள்ளு முக்கூடலைச் சார்ந்த பிரதேசங்களில் மட்டுமன்றி, திருநெல்வேலி ஜில்லா முழுவதும் பிரசார

மெய்தி யிருந்தது. மிகச் சமீபகாலம் வரையில் ஓலையேட்டி லெழுதிப் படிப்பதே பெரு வழக்கு ; புதிதாகத் தமிழ் படிக்கத் தொடங்கும் சிறுவர்களுக்கு ஆசிரியர்கள் முக்கூடற் பள்ளை ஏட்டில் எழுதிக் கொடுத்துப் படிக்கச் செய்வார் கள். இவ்வாறு எல்லா மக்களாலும் இது விரும்பிப் பயிலப்பட்டு வந்ததோடல்லாமல், விரித்துத் தனி நாடக மாகவும் அமைக்கப்பட்டிருந்தது. நாடகமாக அமைத்த வர் வேளான் சின்னத்தம்பி என்ற பெயரையுடைய என்னயினுப் புலவர். என்னயினுன், எல்லார்க்கு நயினுன் என்பதன் திரிபெனத் தோற்றுகிறது. திருக்கோளூர் வைத்த மாநிதி திருப்பணிமாலையிலே அவ்வாலயத்தில் திருப்பணி செய்தாருள் காவை வடமலையப்பரோடு எல்லார்க்கு நயினுன் என்பார் ஒருவரும் பாராட்டப்படுகிறூர் ;

சதுரவித ரணசுமுகன் காரைக்காட்
டார்மரபில் தழைத்த மேகம்
விதுர்ன்மலர் மகள்கொழுநன் எல்லார்க்கு
நயினுன்போர் வேந்தர் வேந்து (12)

என்ற அடிகளால் இவர் கார்காத்த வேளாளர் என்று தெரி கிறது. இவரும் சிறந்த போர்வீர ரென்பது,

கருநடர்மா ளுவர்துளுவர் வங்காளர்
பப்பரர்கை முகிழ்த்துப் போற்ற
வருநடநீள் குரதுரகன் எல்லார்க்கு
நயினுன்தெம் மன்னர் ஏறு (4)

என்று அந்நூலே கூறுவதால் பெறப்படும். காவை வடமலை யப்பருடன் இருந்தவர் அல்லது அவர் வழிவந்தவர் என இவரைக் கருத இடமிருக்கிறது. இவர் பெரும்புகழோடு விளங்கியமையின் பின்வந்தோர் இவர் பெயரைத் தரித்தல் இயல்பு. முக்கூடற் பள்ளை நாடகஞ் செய்த என்னயினுப் புலவர் இவருக்குப் பிறகு சிறிது காலங் கழித்துத் தோன்றி

இவர் பெயரைத் தரித்திருந்தவர் என்று கருதலாம். பள்ளு பிரபலமடைந்த பின்னர்த்தான் அதை நாடகமாக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும். முதனூலுக்கும் நாடகத்துக்கும் இடையில் அரை நூற்றாண்டு கழிந்திருக்கலாம். 18-ம் நூற்றாண்டின் மத்தியில் இந்நாடகம் அமைக்கப்பட்டதெனக் கொள்ளலாம்.

என்னையினுப்புலவர் தமக்கு இயற்றமிழ் இசைத்தமிழ் பரதநாட்டியம் என்பவற்றை முறையே முத்துப்புலவர், நாச்சிமுத்துப் பணிக்கர், சாமிப்புலவர் என்பார் கற்பித்தனர் என்று கூறுகிறார். நாடகத்தில் பெரும்பான்மையான பாட்டுக்களுக்கு ராகமும் தாளமும் அமைத்திருக்கிறார். 18-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாடப்பெற்ற குற்றாலக் குறவஞ்சியில் இசையுறுப்புக்கள் பல அமைக்கப்பெற்றிருத்தலைக்கண்டு இவ்வாசிரியரும் நாடகத்தில் அவ்வுறுப்புக்களைச் சேர்த்திருக்கக்கூடும். நாடகம் 320க்கு மேற்பட்ட செய்யுட்களையுடையது. புதிதாய்ச் சேர்க்கப்பட்ட பாடல்களில் விருத்தமும் தருவுமே அதிகம். விநாயகர் வணக்கத்தோடு நூல் தொடங்குகிறது. பள்ளன் பள்ளியர் வந்தவுடன் கோமாளியொருவன் வருகிறான்; தெருக்கூத்துக்களிலும் சம்ஸ்கிருத நாடகங்களிலும் வரும் விதூஷகன் என்ற பாத்திரத்துக்கேற்ப இவன் வருவிக்கப் பெற்றான் போலும். தெய்வங்களுக்குப் பொங்கலிடும்போது மூத்தபள்ளிக்குத் தெய்வ ஆவேசமுண்டாகிறது. கண்ட பள்ளன் அஞ்சித் தான் அவளிடத்தில் அன்போடு நடக்க இசைகிறான். ஆற்றுவெள்ளத்திலே பள்ளன் ஓடம் விட்டு இளையபள்ளி வீட்டுக்குப் போகிறான். பள்ளியர் எசிக்கொள்ளுகிறார்கள். மருந்து விவரித்துச் சொல்லப்படுகிறது. தச்சன் வந்து பள்ளனைத் தொழுவில் மாட்டுகிறான். மூத்த பள்ளிக்கும் பள்ளனுக்கும்

தர்க்கம் நடக்கிறது. புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதிகள் இவ்வளவே. மக்கள் விருப்பத்துக்கேற்ப இவை அமைத்துக் கொள்ளப்பட்டன போலும். பிற்காலத்துப் பள்ளுகளிலும் இவற்றிற் சிற்சில காணப்படுகின்றன.

13

வேறு பள்ளுகள்

இதுவரையில் ஏற்பட்டுள்ளனவாய்த் தெரிந்த பள்ளுப் பிரபந்தங்கள் உத்தேசமாக நிர்ணயிக்கக்கூடிய காலக்கிரமப் படிக் கீழே சொல்லப்பட்டிருக்கின்றன. உடுக்குறியிடப் பெற்றவை அச்சில் வெளிவராதவை.

1. திருவாரூர்ப் பள்ளு (தியாகேசர் பள்ளு)

சுமார் ஞானப்பிரகாசர் செய்ததெனச் சொல்லப்படுகிறது. இது கோயிலிற் பாடப்பெறுவதென்றும் இடைச் செருகல்கள் பல இதிலுண்டென்றும் மேலே குறிக்கப்பட்டது. பிற பள்ளுகள் எல்லாவற்றிலும் காலத்தால் இது முந்தியதாயினும், முக்கூடற்பள்ளுப் போலன்றி இதில் பல செய்யுள் வகைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தெய்வநிலை போற்றுதல் முதலிய உறுப்புக்களும் கவிக்கூற்றுள்ள பாகங்களும் ஆசிரியரின் கல்விப்பெருக்கையும் புலமை மிகுதியையும் காட்டுவனே; ஆனால் இயற்கையையும் எளிமையையும் ஒதுக்கி விட்டன. பண்ணையானது அங்கவிகாரங்களை வேடிக்கையாகக் கூறிக் கும்பிடுவதென்னும் உறுப்பும் இதில் காணப்படுகிறது. இக்காரணங்களால், முக்கூடற் பள்ளின் பிறகே இது செய்யப்பட்டதென்றும் அதனினும் மிகுதியாக இதில் இலக்கியச் சுவையைக் காட்ட ஆசிரியர் கருதினரென்றும் நினைக்க இடமிருக்கிறது.

2. குருகூர்ப் பள்ளு (பராங்குசப் பள்ளு)

நம்மாழ்வார்மீது ஆழ்வார் திருநகரி சடகோபப் புலவர் பாடியது. பள்ளுப் பிரபந்தங்களின் வரிசையிலேயே, முக்கூடற் பள்ளும் இந்நூலும் மாறுபட்ட இரண்டு சிறந்த தனிநிலைகளையுடையன என்று கூறலாம். முந்திய நூலின் ஆசிரியர் ஏழை மக்களான உழவர் உழத்தியரது எளிய வாழ்க்கையில் ஈடுபட்டு, அதிலுள்ள அழகை அனுபவித்து, அவ்வாழ்க்கையை அந்த மக்களுடைய பாஷையிலேயே விளக்கிக் காட்டவேண்டுமென்ற உணர்ச்சியுடன் தம் நூலைச் செய்தார்; அதன்பின் அவ்வகை நூல்கள் சில தோன்றவும், அவை சாமானியம் என்று கருதின சடகோபப் புலவர் அத் தகைய பிரபந்தமொன்றிலே சிறந்த இலக்கியப் பண்பையும் கவிச்சுவையையும் ஏற்ற வெண்ணிக் குருகூர்ப் பள்ளைச் செய்தார் என்று அனுமானிக்கலாம்; இந்நூலிலுள்ள அகத் துறைப் பாட்டுக்களைக் காணும்போது இவ்வாறு எண்ணத் தோன்றுகிறது. நூலமைப்பில் இது திருவாரூர்ப் பள்ளைப் போன்றது; அதனினும் சுவை மிக்கது. ஆற்று வெள்ளத் தில் அணையடைப்பு, இளையபள்ளி பள்ளனுக்கிட்ட மருந் தைச் செய்யும் முறை, அதன் இயல்பு, தாலாட்டு என்பன இதிற்கண்ட விசேட உறுப்புக்கள். திருவாரூர்ப் பள்ளுப் போலவே இதிலும் பள்ளன்கொழுக்குத்தி மயங்கிவிழுகிறான். சண்டையிடும் பள்ளியரைப் பண்ணையான் சமாதானம் செய்துவைக்கிறான். இந்நூலின் காலம் உத்தேசம் 1700.

3. திருமலைப் பள்ளு*

திருமலை முருகன் பேரில் பெரியவன் கவிராயர் செய்தது. நூலகத்துப் பல பாடல்கள் முருகன் துதியாக வும் காயத்தை வெறுத்துரைப்பதாகவும் அமைந்திருக்கின் றன. இதிலும் பலவகைப் பாக்கள் வீரவி வருகின்றன.

செய்யுட்கள் பல இடங்களில் எளிமையாகவும் நயமாகவும் உள்ளன. கடவுள் வணக்கங் கூறும்போது, பிள்ளைத் தமிழ் மரபை யொட்டி, திருமால், பிரமன், சரசுவதி, இலக்குமி, காளி, வீரபத்திரன், சத்தகன்னியர், துவாதசாதித்தர், வருணன், சாத்தன், இந்திரன் என்போருக்கு இதன் ஆசிரியர் வணக்கங் கூறியிருக்கிறார். 18-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்நூல் செய்யப்பெற்றதென்று கருதலாம்.

4. சிவசயிலப் பள்ளு

அன்பூர்ச் சிவசயிலநாதர்மீது ஆழ்வார்குறிச்சி இராமநாதன் கவிராயர் செய்தது. ஆறை அழகப்ப முதலியார் செயல்களைச் சிறப்பித்துக் கூறுகிறது. அவர் காலத்திலேயே செய்யப்பெற்றதென நூலகத்துள்ள குறிப்புக்களால் புலப்படுகிறது. கலிப்பா, சிந்து என்னுமிருவகைச் செய்யுட்களாலியன்றது. பொருள் அமைதியும் உறுப்புக்கள் அமைந்துள்ள கிரமமும் செய்யுட்களின் சந்தமும் நேரே முக்கூடற் பள்ளை அடியொற்றியவை. அதிலிருந்து சொற்களும் தொடர்களும் அப்படியே இதில் எடுத்தமைக்கப்பட்டுள்ளன. மழை வேண்டிப் பாடும் 'மழை தருவாய்' என்ற பாட்டு இதில் புதியதாயுள்ள உறுப்பு. சில பாடல்கள் பிரதிகளில் கிடைக்கவில்லையெனத் தெரிகிறது. காலம் 1720.

5. வைசியப் பள்ளு*

கச்சி ஏகாம்பரநாதரையும் வைசிய குலத்தோர் ஆயிர வரையும், சிறப்பாக, ஏகாம்பரர் கோயிலைப் பொன் வேய்ந்த பொன்வேய்ந்தானென்பவனையும் புகழ்வது. சங்கரமூர்த்திப் புலவர் பாடியது. கம்பமாநதியில் வெள்ளம் பெருகிவர, அதில் வைசியர்கள் தங்கள் சரக்குகள், ஆடை, பொற்பணி முதலியவற்றைப் பல தேசங்களிலுமிருந்து கப்பலிலேற்றிக் கொண்டு வந்து கரைசேர்க்கிறார்கள் என்ற பகுதி விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

6. வடகரைப் பள்ளு

1731 - 41 ஆண்டுகளில் வடகரை ஜமீன்தாராயிருந்த பெரியசாமித்துரை பேரில் கடிகைமுத்துப் புலவர் பாடியது; ஆற்று வெள்ளத்தில் கப்பல் விடுவதாகச் சில பாடல்களும் கும்மிப்பாட்டும் இதிலுள்ளன. வைசியப் பள்ளிகள், வைசியர் பொருளீட்டிக் கப்பலிலேற்றிக்கொண்டு வரும்போது கப்ப லோட்டினர் என்றுள்ள செய்தியைத் தழுவி. இந்நூலில் ஆற்று வெள்ளத்தே கப்பல் விடும் செய்தி அமைக்கப்பட் டது போலும். துரை ஜமீன் பட்டத்துக்கு வருமுன்பே 1723-ல் நூல் அரங்கேற்றப்பட்டது.

7. சிகாழிப் பள்ளு*

சிகாழி சிதம்பரநாத முனிவர் தொடங்கி அருணசலக் கவிராயர் பூர்த்திசெய்த நூல்; சீகாழித்தல விஷயமானது; காலம் 1745. நூலைக் குறித்து வேறொன்றும் தெரியவில்லை.

8. தில்லைப் பள்ளு*

தில்லைத் தல விஷயமாக தில்லைவிடங்கன் மாரிமுத்தாப் பிள்ளை இயற்றியது. அம்பலப்பள்ளிக்கும் கோவிந்தப் பள்ளிக்கும் ஏசல் என்றும் வழங்கப்பெறும். காலம் 1760.

9. கண்ணுடையம்மை பள்ளு

நாட்டரசன் கோட்டையிலிருக்கும் கண்ணுடையம்மை யையும் நகரத்தாரையும் சிறப்பித்து முத்துக்குட்டிப் புலவர் இயற்றியது. நாடு, நகர், தீர்த்தம், ஊர் என்பவற்றின் விசே டம் விரித்துரைக்கப்பட்டது. இவ்வூரைச் சார்ந்த நாட்டிலே நீர்வளம் குறைவாதலால், குளம் வெட்டுதல் ஏன்ற செய்தி சேர்க்கப்பட்டிருக்கிறது. குளம் வெட்டி மழை பெய்யாது போகவே, புது வீடு கட்டி யலங்கரித்து விதை நெற் கோட்டையை நனைத்து ஊறவைத்து முளைத்த நெல்லை

அவித்து, அதிலிருந்து மதுவடித்து அம்மைக்குப் படைத்து, மங்கையர் கும்மியடித்து விழாச் செய்கிறார்கள். மழை பெய்கிறது, அவித்த நெல்லும் முளைக்கிறது. நகரத்தார் வரலாறும் பழக்க வழக்கங்களும் விளக்கப்பட்டுள்ளன. பள்ளனை மாடு முட்டும் பகுதி கூறப்படவில்லை. காலம் 1775.

10. கதிரைமலைப் பள்ளு

இலங்கையிலுள்ள கதிர்காமத்தில் எழுந்தருளியிருக்கும் முருகவேள்மீது செய்யப்பெற்றது. ஆசிரியர் பெயர் அறியப் படவில்லை. விநாயகர் பெருமையும் முருகன் பெருமையும் நாட்டுவளமும் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மழை பெய்ய வருணன் வரங்கொடுத்தான் என்பது புதிய செய்தி; பள்ளன் மூத்த பள்ளியைக் குறை கூறுகிறான்; இறுதியில் பண்ணைக்காரன் சமாதானஞ் செய்கிறான். யாழ்ப்பாணத்துப் பள்ளுகளில் முந்தியதென இது கூறப்படுகிறது.

11. பரூர் விநாயகர் பள்ளு

யாழ்ப்பாணத்திலுள்ள பரூர் யென்னுந் தலத்து விநாயக மூர்த்திமீது யாழ்ப்பாணத்து நல்லூர்ச் சின்னத் தம்பிப் புலவர் செய்தது. நாட்டுவளம், குடித்தரம் முதலிய பகுதிகள் விரிக்கப்பட்டன; வெண்பா முதலிய பாக்கள் விரவியது. சில பகுதிகள் சிதைந்து போயின. காலம் 1780.

12. தண்டிகைக் கனகராயன் பள்ளு

யாழ்ப்பாணத்துத் தண்டிகைக் கனகராய முதலியார் மீது மாவைச் சின்னக்குட்டிப் புலவர் பாடியது. குயிற் பாட்டு விரித்துக் கூறப்பட்டுள்ளது. இடையிற் சில பாடல் களும் ஏசற்பகுதியும் சிதைந்து போயின. காலம் 1790.

13. சேற்றூர்ப் பள்ளு

சேற்றூர் ஜமீன்தார்மீது கார்காத்த மரபினரான இராஜ பாளையம் சங்கரமூர்த்திக் கவிராயர் செய்தது. காலம் 1800.

14. திருவிடைமருதூர்ப் பள்ளு*

பிரான்மலை வெறிமங்கைபாகக் கவிராயர் பாடியது. காலம் 1820.

15. மாந்தைப் பள்ளு

சிதம்பர தாண்டவ மதுரகவிராயர் செய்தது. விசுவ கர்ம மரபினரைச் சிறப்பிக்கவந்த நூல்.

16-17. கூடற் பள்ளு*, தஞ்சைப் பள்ளு*

இவற்றைக் குறித்து யாதும் தெரியவில்லை.

18. தென்காசைப் பள்ளு

தென்காசை ஜமீன்தார்பேரில் பாடப்பட்டது.

19. கொடுமளூர்ப் பள்ளு* (?)

முருகவேள் பேரில் முதுகுளத்தூர் நல்லவீரப்பப் பிள்ளை பாடியது. காலம் 1840.

20. இராசநகர்ப் பள்ளு (?)

கந்தபுராணக் கீர்த்தனை முதலிய பல இசை நூல்கள் செய்த கவிகுஞ்சர பாரதியார் இயற்றியது. காலம் 1850.

21. புதுவைப் பள்ளு*

ஸ்ரீவில்லிபுத்தூருக் கருகிலுள்ள புதுவை பொன்னுச் செட்டியாரென்பவர் செய்தது.

22. முக்கூட்டுப் பள்ளு (?)

கொங்குநாட்டைச் சேர்ந்த பழனிசாமிப் பிள்ளை என்னும் புலவர் பாடியது.

கடைசி இரண்டு பள்ளுகளும் 19-ம் நூற்றாண்டின் மத்தியில் தோன்றியனவாகத் தெரிகின்றன.

23. மன்னர் மோகனப் பள்ளு*

சோழநாட்டு இராசமன்னர் கோவில் திருமால்மீது பாடப்பெற்றது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. மோகனப் பள்ளு என விசேடிக்கப்பெற்றிருக்கிறது. தஞ்சையை ஆண்ட விசயராகவ நாயக்கர் (1640-74) இதனுள் குறிப் பிடப்படுகிறார். நூலின் தொடக்கமும் முடிவும் பிற பள்ளுப் பிரபந்தங்களின் மரபுக்கு வேறுபடுகின்றன. இதன் கால மும் பொருளமைப்பும் ஆராய்தற்குரியன.

திருநீலகண்டன் பள்ளு

இங்கே கருதப்படும் பள்ளுப் பிரபந்த வகையில் சேராத பள்ளு ஒன்று 'திருநீலகண்டன் பள்ளு' என்ற பெயரோடு காணப்படுகிறது. அறுபத்துமூன்று நாயன் மாருள் ஒருவரான திருநீலகண்ட நாயனாருடைய சரித்திரத் தைக் கும்மிப்பாட்டில் பலவகையாகப் புனைந்து கூறுவதாக அமைந்துள்ளது இந்நூல். இதன் பாட்டு ஒவ்வொன்றும் 'பள்ளியரே' என்று முடிவதனால் இதுவும் பள்ளு எனப் பெயர் பெற்றது போலும். இதன் செய்யுளொன்று மாதிரிக் காகக் கீழே தரப்பட்டிருக்கிறது :

செல்லுமோ இன்னும் இரண்டொரு நாழிகை - இச்
சேதியி லென்ன தாமதமா
செப்பும் திருநீல பத்தா நமக்குச்
சொணமுந் தீர்த்திட நேரமில்லே
அல்லலென் முலினி மேலத் தெருவினில்
அன்புள்ள பத்தன் அமுதுசொன்னான் - அதற்
கண்டை வீட்டுக்காரன் சற்றே அமு
தாக்கியிருக்குது வாருமென்றான்
பொல்லாத காளி அகோரி என்பாரி
பிரிந்தரை நாழிகை இருந்தறியாள்
பிள்ளே ரெண்டுண்டு அதிலே ஒருபிள்ளே
போவார் வருவார்வாய் பார்த்திருக்கும்

தொல்லை கிடக்கு தநேகம் எனக்குத்
தோதகப் பாதகம் பண்ணுதே
தோகையை அழைத்தமு துண்டில்லை என்று
சொல்லி விடென்னூர் பள்ளியரே.

இதனால், பள்ளு என்ற பெயருடன் அடியார் சரிதமுரைக்கும் எளிய கும்மிப் பாட்டுக்கள் சில வழங்கிவந்தனவென்று தெரிகிறது. இவற்றுக்கும் பள்ளுப் பிரபந்தத்துக்கும் சம்பந்தமில்லை.

14

முக்கூடற் பள்ளு நாடகம் 1886, 1894 முதலிய பல ஆண்டுகளில் அச்சிடப்பட்டிருக்கிறது; ஆனால் ஒவ்வொரு பதிப்பிலும் நூலைப் படிக்க இயலாதவாறு பிழைகள் மலிந்து காணப்படும். முக்கூடற் பள்ளு இதுவரை அச்சாகவில்லை. இதிலுள்ள பாடல்களை அங்கங்கே சிலர் சொல்லியுங் கேட்டும் வந்தபோதிலும் நூல் அச்சாகாமலிருந்தது ஒரு பெருங் குறையே. பல ஏட்டுப் பிரதிகளையும் காகிதப் பிரதிகளையுங் கொண்டு பரிசோதித்து இந்நூல் இப்போது வெளியிடப்படுகிறது. நூலிறுதியில் அரும்பொருளகராதி யொன்றும் செய்யுள் முதற்குறிப்பகராதி மொன்றும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்நூற் பரிசோதனைக்கு ராவ்சாகிப் திரு. வையாபுரிப் பிள்ளையவர்கள் நான்கு ஓலைப் பிரதிகள் தந்தார்கள்; அவர்களுக்குரியதொன்றும், அரசாங்கத் தொன்னூல் நிலையப் பிரதி யொன்றும், பாளையங்கோட்டை காலஞ்சென்ற திரு. சி. வீரபாகுப் பிள்ளையவர்கள் பிரதி இரண்டும் ஆக நான்கு. இவையன்றி, அவர்கள் திரு. வீரபாகுப் பிள்ளையின் காகிதப் பிரதியையும் பெற்றுத் தந்தார்கள்; இது கோவிற் பட்டி, சிவலப்பேரி, கொம்பங்கிபுரம், விசயநாராயணம்,

முன்னீர்ப்பள்ளம் என்னும் ஐந்திடங்களிலுள்ள ஏடுகளோடு ஒப்புநோக்கிப் பாடபேதங்கள் குறிக்கப்பெற்றிருந்தது.

திரு. இருளப்ப சண்முகசுந்தரம் எழுதிய மூன்று காகித்ப் பிரதிகளை **திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள்** வரவழைத்துத் தந்தார்கள். நூல் அச்சாகி வந்தபோது, **திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியாரவர்கள்** தம் ஞாபகத்திலிருந்த பாடத்தைக் கொண்டு சில திருத்தங்களைத் தெரிவித்துதவினர்கள். இவ்வாசிரியர்கள் செய்த உதவிக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்நூலுக்கு வேண்டிய ஏட்டுப் பிரதிகளைத் தந்தும், தமக்குரிய சிரமத்தைச் சிறிதும் பாராட்டாமல் நூல் முழுவதையும் பரிசோதிப்பதில் எனக்கு எல்லா விதத்திலும் உதவி புரிந்தும் என்னை ஊக்கிவந்த **ராவ்சாகிப் திரு. வையாபுரிப் பிள்ளையவர்களுக்கு** நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

செவ்விய முறையில் இந்நூலை அச்சிட்டு வெளிவரச் செய்த **சாது அச்சுக்கூடத் தலைவர் அவர்களுக்கு** என் வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

முக்கூடல் சம்பந்தமான செய்திகளை அறிவதற்குத் திருநெல்வேலி ஜில்லா கெஜெட்டியரும் இம்முன்னுரை எழுதுவதற்குக் குருகூர்ப்பள்ளியின் பதிப்பாசிரியராகிய திரு. வையாபுரிப்பிள்ளையவர்கள் எழுதியுள்ள முன்னுரையும் பேருதவியாயிருந்தன.

என்னை இம்முயற்சியில் ஈடுபடச் செய்த பரம்பொருளின் திருவருளைச் சிந்தித்து வணங்குகின்றேன்.

தியாகராயநகர், சென்னை,
20 - 9 - 1940.

இங்ஙனம்,
மு. அருணாசலம்.

[**திருத்தம்:** 5-ம் பாட்டிலும் அதன் அடிக்குறிப்பிலும் 'அரசூர்' என்பதை 'ஆசூர்' என்றும், 17, 21-ம் பாட்டுக்களின் கடைசி வரியில் 'வளமையார் அரசூர்' என்பதை 'வளமை ஆசூர்' என்றும் திருத்திக்கொள்க. 6-ம் பாட்டு முதல் வரியில் 'அஞ்சனப் பொட்டு' என்பது 'மஞ்சணைப் பொட்டு' எனவும் பாடம்; மஞ்சணை -· எண்ணெய்க் குங்குமம்.]

வ

முக்கூடற் பள்ளு

காப்பு

கலிப்பா

பூமேவு நீலவெற்பில் பொன்னிறமு முண்டெனப்பூ
மாமேவு முக்கூடல் மாலழகர் பள்ளிசைக்கே
பாமேவு சொற்புரப்பர் பாவலரென் றெட்டெழுத்து
நாமேவு பத்தர்பத்து நாவலருங் காப்பாமே.

காப்பு. நீலவெற்பு - திருமால். பொன்னிறம் - திருமகளுக் குரியது. பூ மா மேவு - தாமரைப் பூவில் வீற்றிருக்கும் திருமகள் மேவும். முக்கூடல் - திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள சிவலப்பேரி என்னும் கிராமம்; சித்திரா நதியும் மற்றொரு சிற்றோடையும் தாமிரபர்ணியுடன் கலக்கும் இடத்தில் இவ்வூர் அமைந்திருப்பதால் முக்கூடல் எனப் பெயர்பெற்றது. காவிரி யாறு கடலொடு கலக்குமிடத்திலமைந்த காவிரிப்பூம்பட்டினத்தைப் பட்டினப்பாலை கூடல் என்று கூறும்: "தேறுநீர்ப் புணரியொடு யாறுதலை மணக்கும், மலியோதத்து ஒலிகூடல்" - 97 - 98. அழகர் - முக்கூடலில் கோயில்கொண் டெழுந் தருளியிருக்கும் திருமாலின் திருநாமம். பள் ளிசைக்கு - பள் ளுப் பிரபந்தத்துக்கு. பத்தர் - ஆழ்வார்கள்.

கடவுள் வணக்கம்

திருமால்

சிந்து

மணிமரகதச் சோதியர் ஆதியர்
மனுமரபினிற் காவலர் கோவலர்
மறைமுதல்வர்முக் கூடலர் ஏடலர்
—வாசத் துளவோர்

அணிஅரவணைத் தூயவர் மாயவர்
அடியவர்மனப் பூரணர் காரணர்
அழகர்பள்ளிசைப் பாவளம் நாவள
—மாகத் தருவோர்

துணிவொடுதிருத் தாள்வலி தோள்வலி
துணையெனமுதற் கூறிய சீரியர்
சுரர்பதிப்பகைக் கீறுளர் வீறுளர்
—சூரத் துடனே

பணிவிடைசெயத் தானவர் வானவர்
பழமகபதிப் பேரியல் சீரியல்
பகரிளமுறைக் கோனென வானெறி
—பாலிப் பவரே. க

க. காவலர் - இராமபிரான். கோவலர் - ஆயரிடையே வளர்ந்த கண்ணன். ஏடலர் வாசத்துளவோர் — இதழ்கள் விரிந்த வாசமுடைய துளவமாலையை யணிந்தவர். தாள்வலி மாவலியை அழித்தது; தோள்வலி இராவணனை மாய்த்தது. சுரர் பதிப் பகை - தேவேந்திரனது பகைவராய அசுரர்கள். தானவர் - அசுரர். மகபதி - இந்திரன். இள்முறைக்கோன் - உபேந்திரனுகிய திருமால்; திருமாலைப் புதல்வராகப் பெற வேண்டுமெனத் தவங்கிடந்த காசியபருக்கும் அதிதிக்கும் புதல்வராய் வாமன ரூபத்தோடு திருமால் தோன்றியமையின், இந்திரனுக்குத் தம்பியாகச் சொல்லப்படுவார்.

கருடாழ்வார்

தாரத்திரு பேரிற் கலவித்
தாகத்தின ளாகத் தருமச்
சாலைப்புவி காலைத் தடவத்
—தலையணை கொடுத்தே
ஆரத்தன பாரத் திருவுற்
முசைப்பட ஓசைத் திரைநெட்
டாழிக்கிசை யூழிச் சயனத்
—தழகர்பள் ளிசைக்கே
சேரத்தலை பூரித் தனசயச்
சீரைப்பகர் வாரைக் கருதித்
தேடித்திசை யோடித் திரியத்
—திறமிலை யதற்கே
கோரச்சிறை வீரப் புயமுக்
கூடற்பதி யாடற் கருடக்
கோனைப்பெரி யோனைப் பரவக்
—குறைவிலை நமக்கே. உ

சேனை முதலியார்

பூவலயக் காவலன் எனவும்
பூவைநிறச் சேவையன் எனவும்
போதனுமெட் டாதவன் எனவும்
—பொய்யா மறைதேர்

உ. தாரத்திருபேர் - திருமாலின் இரு தேவியராகிய திரு மகளும் நீளாதேவியும். கோரச் சிறை-அச்சந்தரத்தக்க சிறகு. தலை, சீர் - செய்யுளுறுப்புக்கள்.

ங. பூவலயக் காவலன் - பூலோகத்தின் காத்தற்கடவுள். பூவைநிறச் சேவையன் - காயாம்பூவின் நிறத்தையுடையவன்: 'அசோதை பெற்றெடுத்த பூவைப் புதுமலர் வண்ணன்'—சிலப் பதிகாரம்: கசு: 46-47; சேவையன் - சேவைக்குரியவன். போதன் - பிரமன்.

பாவலனுக் கார்வலன் எனவும்
பாரறியத் தாரணை செயும்என்
பாடலில்முக் கூடலில் அழகர்
—பள்ளே சல்லிலே

தாவறுசொற் கேவல முறினும்
சார்வுபொருட் சோர்வுகள் வரினும்
தாளவிதத் தேழணி கெடினும்
—தள்ளார் புலவோர்

தேவர்முடிப் பூவடிப் பிரசம்
சீலமணிக் கோலணி விலகும்
சேணமுதற் கோணமுன் னிடிலென்
—செய்வார் பிறரே. ந

நம்மாழ்வார்

வித்தாரக் கமலையை விமலையை
மெய்க்கோவிற் புரமிசை யுரமிசை
மிக்காகப் பரிபவர் தெரிபவர்
—வேதசிற் பரத்தார்

ந. பாவலன் - நம்மாழ்வார். தாரணை - தியானம். தாள விதத்து ஏழணி - எழுவகைத் தாளங்களாகிய அலங்காரங்கள்; எழுவகையர்வன : துருவம், மட்டியம், ரூபகம், சம்பை, திரிபுடை, அடதாளம், ஏகதாளம். சேணமுதற்கோன் - விஷ்வக்சேனர் என்னும் சேண முதலிகள்.

ச. கமலை - கமலத்தில் விற்றிருக்கும் இலக்குமி. விமலை - மலமில்லாதவள்; இலக்குமி. மெய்க்கோவில் மிசை-சரீரமாகிய கோவிலில்; திருமார்பில். பரிபவர் - விரும்பிச் சுமப்பவர்.

மூத்தேவிற் பெரியவர் கரியவர்
முப்பான்மைத் தொழிலினர் எழிலினர்
முக்கூடற் குழகர்மெய் யழகர்பள்
—மூவகைத் தமிழ்க்கே

பத்தாகப் பெயர்தரு முயர்தரும்
பத்தாளிற் பருதியர் சுருதியர்
பட்டோலைக் கெழுதரு முழுதுணர்
—பாவகுத் துரைத்தோர்

நத்தேவக் குருகையில் வருகையில்
நட்பாகப் புளிநடு வெளிபடு
நற்போதத் தருள்பொழி திருவிழி
—ஞானவித் தெனக்கே. ச

ச. மூத்தேவு - பிரமன் விஷ்ணு ருத்திரர். முப்பான்மைத் தொழில் - படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று. குழகர் - இளையவர். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் பயின்று வருவதால் பள் மூவகைத் தமிழ் என்று கூறப்படுகிறது. பத்தாகப் பெயர் தரும் பத்தாளிற் பருதியர் - பதின்மரெனச் சொல்லப்படும் பக்தர்களாகிய ஆழ்வார்களுள் சூரியனை யொத்தவர். சுருதியர் : 'வேதத்தைச் செந்தமிழால் விரித்துரைத்தான் வாழியே' என்பது காண்க. குருகை - திருக்குருகூர் என்னும் ஆழ்வார் திருநகரி. புளி - உறங்காப்புளி.

நூல்

பள்ளியர் வரவு

கலிப்பா

காவலராந் தேவரைமுன் கைதொழுது பின்னருமென்
ஆவலினு லேயழகர் அரசூர் வளநாடு
சீவலநன் னுடுமிசை தேர்ந்துரைக்கப் பண்ணுதனில்
ஏவலுறும் பள்ளியர்வந் தெய்தியது சொல்வேனே. (நு)

மூக்கூடற் பள்ளி

சிந்து

நெற்றியி லிடும் அஞ்சனப் பொட்டும்
மற்றொரு திருநாமப் பொட்டும்
நெகிழ்ந்த கருங் கொண்டையும் ரெண்டாய்
வகிர்ந்த வகுப்பும்
பற்றிய கரும்பொற் காப்பும் கையில்
வெற்றிலையும் வாயில் ஒதுக்கிய
பாக்கும் ஒருசுருளுக் கொருக்கால்
நீக்கு மிதழும்
வெற்றிவிழிக் கெதிர்கொண் டிருகோ
டுற்றகருப் பின்னு மெதிர்ந்தால்
விரிந்திடுமென் றெண்ணிச் சற்றே
சரிந்த தனமும்

நு. அரசூர் வளநாடு அல்லது அரசூர் வடகரை நாடென்பது முக்கூடல் நகரை உள்ளடக்கிய நாட்டின் பகுதி; சீவலநன்னாடு அல்லது சீவல மங்கைத் தென்கரை நாடென்பது மருதூரை உள்ளடக்கிய நாட்டின் பகுதி.

சிற்றிடையும் செம்பொ னிடைக்கிடை
பெற்றிடும் பட்டாங்கு மிலங்கத்
திருமுக்கூடல் வாய்த்த பள்ளி
தோன்றி னுளே. சூ

கலிப்பா

உள்ளத்தி லூசலிடும் உல்லாசப் பார்வைவிழிக்
கள்ளத்தி னுலிரும்புங் கல்லுங் கரையாதோ
வெள்ளத்தி லேதுயில்கார் மெய்யழகர் முக்கூடல்
பள்ளத்தி யார்அழகு பாரீக்க முடியாதே. எ

மருதூர்ப் பள்ளி

சிந்து

செஞ்சரணப் படமிடுங் கொச்சியின்
மஞ்சளும்பூம் பச்சையும் மணக்கச்
சிறியநுதற் பிறைவெண் ணீற்றுக்
குறியொளி வீசப்
பஞ்சலிமீன் கெண்டைகள் எனவே
அஞ்சனந்தோய் கண்கள் இரண்டும்
பக்கக் கொண்டையினுங் குழையினுந்
தைக்கக் குதிக்க

சூ. பட்டாங்கு - ஒரு சேலை வகை.

எ. வெள்ளத்திலே துயில்கார் மெய்யழகர் - பாற்கடலிலே பள்ளி கொள்ளும் கார்வண்ணராகிய அழகர்.

அ. செஞ்சரணப் படமிடும் மஞ்சள் - சிவந்த பாதத்திலே அலங்காரமாக இடப்பட்ட மஞ்சள். கொச்சியின் மஞ்சள் - மஞ்சளுட் சிறந்த வகை. பஞ்சலி - ஒரு மீன்வகை. அஞ்சனந் தோய் - மை தோய்ந்த.

நெஞ்சுகவர் கனதன மாமதக்
குஞ்சரவிணைக் கோடுகள் அசைய
நீலவடக் கல்லுடன் கோர்வைத்
தாலியும் இலங்க
வஞ்சிமருங் கணிபூம் பட்டும்
பஞ்சவர்ணத் தழகுந் துலங்க
மருதூர்க்கு வாய்த்த பள்ளி
தோன்றி னளே. அ

கலிப்பா

ஆதிமரு தீசருக்கும் ஆட்பட் டழகருக்கும்
பாதியடி மைப்படுமோ பள்ளிமரு தூரிளையாள்
சோதிமுக மள்ளருக்கே தோன்றிவய லுற்றுநட்ட
போதிலொரு பூவில்ஐந்து பூவும் பயிராமே. கூ

பள்ளன் வரவு

சிந்து

கறுக்குங் கிடாய் மருப்பின்
முறுக்கு மீசையும் - சித்ரக்
கத்தரிகை யிட்ட வர்ணக்
கன்னப் பரிசும்
குறுக்கில் வளை தடி சேர்த்
திறுக்குஞ் கச்சையும் - செம்பொற்
கோலப் புள்ளி யுருமாலும்
நீலக் கொண்டையும்

அ. குஞ்சரம் - யானை.

கூ. மருதீசர் - இளைய பள்ளியின் ஊராகிய மருதூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் திருநாமம். பூ - போகம்.

கo. கிடாய் மருப்பின் - ஆட்டுக்கடாவின் கொம்பு போன்ற. வளை தடி - ஆயுதவகை. கச்சை - இடுப்பில் கட்டும் பட்டை.

சறுக்குந் தொறுங் குதிப்பும்
சுறுக்குந் தலை யசைப்பும்
தடிசுற்றி ஏப்ப மிட்டே
அடிவைப்பதும்
மறுக்கும் மது வெறிகொண்
டுறுக்குஞ் சிரிப்புந் தோன்ற
வடிவழகக் குடும்பன் வந்து
தோன்றி னனே. கo

பள்ளன் தன் பெருமை கூறுதல்

ஒருபோ தழகர் தாளைக்
கருதார் மனத்தை வன்பால்
உழப் பார்க்குந் தரிசென்று
கொழுப் பாய்ச்சுவேன்
சுருதிஎண் ணெழுத் துண்மைப்
பெரியநம் பியைத் தொழாத்
துட்டர் செவி புற்றெனவே
கொட்டால் வெட்டுவேன்

கo. வடிவழகக் குடும்பன் - வடிவழகிய நம்பி என்பது வைஷ்ணவருக்குள் ஆடவருக்குச் சாதாரணமாய் வழங்கும் பெயர்; குடும்பன் - பள்ளர் தலைவன்.

கக. வன்பால் - கொடுமையாக. தரிசு - பயிரிடாத நிலம். எண்ணெழுத்து - திருமாலுக்குரிய அஷ்டாக்ஷரம். பெரிய நம்பி - இந்நூல் செய்யப்பட்ட காலத்திருந்த ஒரு வைணவப் பெரியார்; பின்னரும் 'சாத்தூரிற் பெரியநம்பி அய்யங்கார்' (கo) என்று குறிப்பிடப்படுகிறார். கொட்டு - மண்வெட்டி. பள்ளன் இப்பாடல் மூலமாகத் தனது திருமால் பக்தியையும் அடியார் வழிபாட்டையும் தெரிவிக்கிறான்.

பெருமாள் பதி நூற்றெட்டும்
மருவி வலஞ் செய்யாரைப்
பேய்க்காலில் வடம் பூட்டி
ஏர்க்கால் சேர்ப்பேன்
திருவாய்மொழி கல்லாரை
இருகால் மாடுகளாக்கித்
தீத்தியென் றுழக்கோலால்
சாத்துவே னுண்டே. கக

பள்ளியர் குடித்தரங் கூறுதல்

கலிப்பா

மள்ளர் குலத்தில் வரினும்இரு பள்ளியர்க்கோர்
பள்ளக் கணவன்எனில் பாவனேவே ருகாதோ
கள்ளப்புள் வாய்கிழித்த காரழகர் முக்கூடல்
கொள்ளத் தமது குடித்தரங்கள் கூறினரே. கஉ

மூத்த பள்ளி

சிந்து

உத்தர பாக மான
சித்திர நதிக்குத் தென்பால்
ஓடும் பொருநையுடன்
கூடும் போதே

கஉ. கள்ளப்புள் வாய் கிழித்த கார்அழகர் - பகீரசுரன் என்னும் அசுரன் கம்சன் ஏவலினால் கொக்குருவாய் வந்து கண்ணனைத் தன் மூக்காற் குத்தித் துன்புறுத்த, கண்ணன் அக்கொக்கை காலால் மிதித்து அதன் வாயைப் பிளந்து கொன் றருளினன் என்பது வரலாறு. குடித்தரம் - குடியின் பெருமை.

கஙு. சித்திரநதி - பொருநையுடன் முக்கூடலில் வந்து கலக்கும் ஓர் உபநதி ; சிற்சிறெனவும் சொல்லப்படும் (நிக). பொருநை - தாமிரபர்ணி.

அத்தனை காலமுந் தொட்டு
இத்தனை காலமுங் கண்டு
அடியடி வாழையாய் நான்
குடியில் வந்தேன்
பத்திலே பதினெண் முக
வைத்தா னில்லைக் குடும்பன்
பண்டே சரடு கட்டிக்
கொண்டான் என்னை
முத்தமிழ் நாட் டழகர்
கொத்தடி யானுக் கான
முக்கூடல் மூத்த பள்ளி
நானே யாண்டே. கஞ

இளைய பள்ளி

செஞ்சிக்குங் கூடலுக்குந்
தஞ்சைக்கும் ஆணைசெல்லும்
செங்கோல் வடம லேந்த்ரன்
எங்கள் ஊரே

கஞ. சரடு - தாலிச்சரடு. பத்திலே பதினெண்முக வைத்தா னில்லை - ஊரில் எல்லோருடன் என்னைச் சமமாகக் கருத வில்லை; சிறந்தவனென்று கருதியே என்னைச் சரடுகட்டிக் கொண்டான் என்பதும், என்னைப் பல மனைவியருள் ஒருத்தி யாகக் கொள்ளவில்லை; முதல் மனைவியாகக் கொண்டான் என்பதும் கருத்து; 'பத்தோடு பதினெண்முக' என்பது பழ மொழி. தொத்தடியான் - பரம்பரை யடியான்.

கச. செஞ்சி - தென்ஆர்க்காடு ஜில்லாவிலுள்ள செஞ்சிக் கோட்டை. கூடல் - மதுரை. தஞ்சை - சோழநாட்டுத் தலை நகர். இவை வடமலையப்பப் பிள்ளையனது ஆதிக்கம் பரவி யிருந்த நாட்டின் விரிவைக் காட்டுகின்றன. வடமலேந்திரன் - காவை வடமலையப்பப் பிள்ளையன்; பாண்டிநாடாண்ட நாயக்க மன்னர் காலத்துத் தென்பாண்டி நாட்டில் 17-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் அரசப் பிரதிநிதியா யிருந்து ஆட்சி புரிந்தவர்.

நெஞ்சிற் குறித்த குளம்
அஞ்சுக்குஞ் சக்கரக் கால்
நிலையிட்ட நாளிற் பண்ணைத்
தலையிட்டேன் நான்
கஞ்சிக்குந் தன்னிலே தான்
கெஞ்சிப்புகுந் தவளல்ல
கண்டாசைப் பட்டே கொள்ளும்
பெண்டா னவள்
மஞ்சிற் கறுப் பழகர்
தஞ்சைப்பள் ளனுக் கேற்ற
மருதூர் இளைய பள்ளி
நானே யாண்டே. கச

பள்ளன் குடித்தரங் கூறுதல்

சுக்கிரத் தேவர் தாயைச்
சக்கரத் தாழ்வார் கொன்ற
துட்டப் பிரம கத்தி
விட்டுப் போகத்

கச. குளம் அஞ்சுக்கும் சக்கரக்கால் நிலையிட்டநாள்-பள்ளியன் முக்கூடலில் ஐந்து குளங்களைத் தோண்டுவித்தா ரென்றும் அவற்றில் சக்கரமுத்திரையிடப்பெற்ற எல்லைக் கற்களை நாட்டுவித்தாரென்றும் சொல்லப்படுகிறது; சக்கரக்கால் - திருவாழிக்கல். அந்த நாளிலேயே அழகர் பண்ணைக்குத் தான் வந்ததாக இளைய பள்ளி கூறுகிறாள். மஞ்சிற்கறுப்பு - சோகத்தினும் கரியநிறம்.

கடு. சுக்கிராசாரியருடைய தாய் தேவலோகத்தில் இந்திரனில்லாது ஒழிந்து போகும்படித் தவம் புரிந்து கொண்டிருக்கையில், திருமால் தன் சக்கரத்தை ஏவி அவளைக் கொன்றார்; இதனால் சக்கரத்தாழ்வாருக்கு விளைந்தபிரமகத்தித் தோஷத்தை நீக்கி அருள் புரியத் திருமால் திருமுக்கூடலில் எழுந்தருளினர் என்பது வரலாறு.

தெக்கணு விட்டுணு வான
மூக்கூட லுற் றழகர்
திருவடி வைக்கு மன்றே
வரும் அடியேன்
பக்கமே தூரப் போயும்
தக்கசோ றென்வெள் ளாண்மை
பள்ளா பள்ளா என்பார் மெய்
கொள்ளா தவர்
மைக்கடல் முத்துக் கீடாய்
மிக்கநெல் முத்துண் டாக்கும்
வடிவழகக் குடும்பன்
நானே யாண்டே. கரு

நாட்டு வளம்

கலிப்பா

கோட்டுவளங் கூறியமுக் கூடல்அலங் காரர்திரு
நாட்டுவளம் பேசமணி நாவசைத்தார் பள்ளியர்கள்

கரு. தெக்கண விட்டுணு - தென்திருமால்; இதனால், முக்கூடலுக்கே தென்திருமாலிருஞ் சோலைமலை என்ற பெயரும் இருந்ததெனக் கருதலாம்; மூக்கூடல் அழகருக்குத் தென்கூடலழகர் என்ற திருநாமமுண்டு. முக்கூடலில் திருமால் எழுந்தருளிய நாள்தொட்டுத் தன் குடும்பமும் அங்கிருந்ததாகப் பள்ளன் பெருமை பாராட்டுகிறான். பக்கமே தூரப்போயும்...மெய் கொள்ளாதவர் - 'உயர்குலத்தார் அருகில் நான் வரநேரிட்டால் பள்ளன் என்ற காரணத்தால் என்னை விலகிப்போகச் சொல்லுவர்; அவர் உண்மையை யுணராதார்; அவர் உண்ணும் சோறு என் வேளாண்மையால் விளைந்த வளமாகும்' என்பது கருத்து. மைக்கடல் - கரிய கடல். நெல்முத்து - முத்துப்போன்ற நெல்.

ககூ. அலங்காரர் - முக்கூடல் அழகரது திருநாமங்களிலொன்று; செண்டலங்காரர் என்று இந்நூலுள் பின்னும் கூறப்பெறும் (ககஅ).

பாட்டுவளஞ் சேரகுலப் பத்தனூர் மாலிகைப்பூங்
காட்டுவள மென்னக் களமருதூர் செய்வாரே. கசு

மூத்த பள்ளி

சிந்து

மேடை யேறித்தன் காலைப் பவுஞ்சு
விரித்த பீலி மயிலெட்டிப் பார்க்கும்
பேடை மாங்குயில் வாய்கொண்டு சேவல்
பிளந்த வாய்தனைப் பேசாமல் மூடக்
கோடை போய்விட்ட சோபனங் கொண்டு
குளிர்ந்த கொண்டல் குறுந்துளி யோடே
வாடை யோடி வரக்களி கூரும்
வளமையார் அரசூர் வடகரை நாடே. கள

இளைய பள்ளி

வென்றல் லோவிடு வேனென வேயிரு
வேழங் கூடி மதிக்குடை தாவக்
குன்றெ லாந்தர மில்லையென் றூடவர்
கொம்ப னூர்மூலக் குன்றிற் பதுங்க
மன்றல் சேர்இள வேனில் புகப்புக
மாங்குயி லுக்கு மாராயஞ் சொல்லி
தென்ற லோடி வரக்களி கூரும்
சீவல மங்கைத் தென்கரை நாடே. கஅ

கசு. குலப் பத்தனூர் - நம்மாழ்வார்.
கள. பவுஞ்சு - பவுசு.
கஅ. மதிக் குடை - சந்திரனைக் குடையாகக் கவித்தது போன்ற நெற்றி. மாராயம் - உவகை.

நகர் வளம்

மூத்த பள்ளி

கொண்டல் கோபுரம் அண்டையில் கூடும்
கொடிகள் வரனும் படிதர மூடும்
கண்ட பேரண்டந் தண்டலை நாடும்
கனக முன்றில் அனம்விளை யாடும்
விண்ட பூமது வண்டலிட் டோடும்
வெய்யில்வெய் யோன்பொன் னெயில்வழி தேடும்
அண்டர் நாயகர் செண்டலங் காரர்
அழகர் முக்கூடல் ஊர்எங்கள் ஊரே. ககூ

இளைய பள்ளி

சங்கம் மேடைகள் எங்கும் உலாவும்
தரங்க மீன்பொன் னரங்கிடை தாவும்
திங்கள் சோலை மரங்களை ராவும்
தெருக்கள் தோறும் மதுக்களைத் தூவும்
பொங்க ரூடிளம் பைங்கிளி மேவும்
பூவை மாடப் புரிவினங் கூவும்
வங்க வாரிதி வெங்கடு உண்ட
மருதீசர் மருதூர் எங்கள் ஊரே. உ0

ககூ. பேரண்டம் - பேரண்டப்புள். தண்டலை - சோலை. அனம் - அன்னம். விண்ட பூ மது - அலர்ந்த பூவிலுள்ள தேன். செண்டலங்காரர் - அழகர்; செண்டு என்பது இருபுறமும் வளைவுள்ள பிரம்பு போன்ற ஒரு ஆயுதம்; மன்னர்குடி முதலிய சில திவ்விய ஸ்தலங்களிலுள்ள பெருமாளுக்கு இவ்வாயுதம் உண்டு; இது காரணமாகவே செண்டலங்காரர் என்ற பெயரும் வந்தது. (கலிமகள், கடு: 261-6.)

உ0. சங்கம் மேடைகளில் உலாவும்படியும் கடல்மீன் அரங்கில் தாவும்படியும் நீர்வளம் மிகுந்திருக்கிறது. ராவும் - அராவும். பொங்கர் - மரக்கிளைகள். பூவை - நாகணவாய்ப் புள். வாரிதி வெங் கடு - பாற்கடலில் தோன்றிய ஆலகால விடம்.

நாட்டு வளம்

மூத்த பள்ளி

கறைபட் டுள்ளது வெண்கலைத் திங்கள்
கடம்பட் டுள்ளது கம்பத்து வேழம்
சிறைபட் டுள்ளது விண்ணெழும் புள்ளு
திரிபட் டுள்ளது நெய்படுந் தீபம்
குறைபட் டுள்ளது கம்மியர் அம்மி
குழைபட் டுள்ளது வல்லியங் கொம்பு
மறைபட் டுள்ள(து) அரும்பொருட் செய்யுள்
வளமையார் அரசூர் வடகரை நாடே. உக

இளைய பள்ளி

காயக் கண்டது சூரிய காந்தி
கலங்கக் கண்டது வெண்தயிர்க் கண்டம்
மாயக் கண்டது நாழிகை வாரம்
மறுகக் கண்டது வான்சுழி வெள்ளம்
சாயக் கண்டது காய்க்குலைச் செந்நெல்
தனிப்பக் கண்டது தாபதர் உள்ளம்
தேயக் கண்ட(து) உரைத்திடுஞ் சந்தனம்
சீவல் மங்கைத் தென்கரை நாடே. உஉ

உக. கறை - களங்கம். கடம்பட்டுள்ளது கம்பத்து வேழம் - மதங்கொண்டவை கம்பத்தில் பிணிக்கப்பட்ட யானைகளே. சிறை - சிறகு. குழைபட்டுள்ளது - துவண்டு மெலிவது.

உஉ. மறுக - சுழல. தனிப்பக் கண்டது - பற்றற்றிருப்பது.

நகர் வளம்

மூத்த பள்ளி

சோதி மாமணி வீதி நெருக்கும்
சுரும்பு பாடி இரும்பும் உருக்கும்
சாதி நால்வளம் நீதி பெருக்கும்
தடத்து வாலை குடத்தை நெருக்கும்
போதில் மேய்ந்திள மேதி செருக்கும்
புனமெல் லாந்தண் மலர்விண் டிருக்கும்
ஆதி நாயகர் செண்டலங் காரர்
அழகர் முக்கூடல் ஊர்எங்கள் ஊரே. உஈ

இளைய பள்ளி

தத்தும் பாய்புனல் முத்தம் அடைக்கும்
சாலிவாய்க் கன்னல் ஆலை யுடைக்கும்
கத்தும் பேரிகைச் சத்தம் புடைக்கும்
கழிப்பு வேலை ஒலிப்பைத் துடைக்கும்
நித்தஞ் சாறுயர் சித்ரம் படைக்கும்
நிதியெல் லாந்தன் பதியிற் கிடக்கும்
மத்தஞ் சூடும் மதோன்மத்த ரான
மருதீசர் மருதூர் எங்கள் ஊரே. உசு

நாட்டு வளம்

மூத்த பள்ளி

மீதுயர்ந் திடுந் தெங்கிள நீரை
மிடைந்த பூகம் சுமந்துதன் காயைச்
சூத மொன்றிச் சுமக்கக் கொடுக்கும்
சூதம் தன்கனி தூங்கும் பலாவில்

உசு. வேலை - சமுத்திரம். சாறு - விழா. மத்தம் - ஊமத்தை. மதோன்மத்தர் - ஆனந்தமயமானவர்.
உடு. பூகம் - கமுகு. சூதம் - மா.

ஓது மந்தப் பலாக்கனி வாழை
உளுக்க வேசுமந் தொண்குலை சாய்க்கும்
மாதுளங் கொம்பு வாழையைத் தாங்கும்
வளமை யாகூர் வடகரை நாடே. உடு

இளைய பள்ளி

பங்க யந்தலை நீட்டிக் குரம்பினிற்
பச்சை இஞ்சியின் பார்சடை தீண்டும்
தங்கும் இஞ்சியும் மஞ்சட் கழுத்தைத்
தடவி மெள்ளத் தொடும்அந்த மஞ்சள்
அங்க சைந்திடுங் காய்க்கதிர்ச் செந்நெல்
அளாவி நிற்கும்அச் செந்நெலு மப்பால்
செங்கரும் புக்குக் கைதரும் போல்வளர்
சீவல மங்கைத் தென்கரை நாடே. உசு

குயில்

கலிப்பா

தேவாதி தேவர்திரு முக்கூட லின்பெருமை
நாவால் வழுத்திவள நாட்டியல்பு கூறியபின்
பூவா சனைசேர் புரிகுழலார் பூங்குயிலைக்
கூவாயென் றந்தக் குயில்மொழியைக் கொண்டாரே. உள

உடு. உளுக்க - சுளுக்க.

உசு. குரம்பு - வரப்பு. சடை - சடைபோன்ற இஞ்சிக் கிழங்கு. கைதரும் - கையால் தாங்குவதுபோலத் தாங்கும்.

உள. புரிகுழலார் - பள்ளியர்.

சிந்து

கார்பூத்த வண்ணனுர் கண்ணனுர் அழகர்படிக்
கட்டளைகள் உயரவே கூவாய் குயிலே
பேர்பூத்த முக்கூடல் மிக்கரா மானுசன்
பீடம்மிக விளங்கவே கூவாய் குயிலே
பார்பூத்த கீர்த்திபெறும் வைணவரும் தானிகரும்
பரிசனமும் வாழவே கூவாய் குயிலே
சீர்பூத்த *காவைவரு திருமலைக் கொழுந்துமுகில்
செங்கோன்மை ஓங்கவே கூவாய் குயிலே. உஅ

சீவலப் பேரிதமிழ் மூவகைக் கல்வியும்
செல்வமும் பெருகவே கூவாய் குயிலே
மாவளத் துடன்அழகர் தாவளக் குடிவாழ
மருதூரை வாழ்த்தியே கூவாய் குயிலே

உஅ. அழகர் படிக் கட்டளைகள் - அழகர் கோயிலுக்குரிய பூசைக் கிரமங்கள். ராமானுசன் பீடம் - முக்கூடலிலிருந்த வைணவ ஆசாரிய பரம்பரை. தானிகர் - ஸ்தானிகர். பரிசனம் - அடியார் குழாம். காவைவரு திருமலைக் கொழுந்து - காவை வடமலையப்பப்பிள்ளையன் குமாரராகிய திருமலைக்கொழுந்துப் பிள்ளையன் ; இவர் காலத்தே இந்நூல் செய்யப்பெற்றதெனக் கொள்ளலாம்.

உக. சிவலப்பேரி - முக்கூடலுக்கு இப்போது வழங்கும் பெயர்; ஸ்ரீ வல்லபமாறன் என்னும் பாண்டியனால் இவ்வூர் தோற்றுவிக்கப்பட்டமையின் இப்பெயர் பெற்றதென்பர். தமிழ் மூவகை - இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ். தாவளக்குடி - மருத நிலத்துக் குடிகள் ; தாவளம் - மருத நிலத்தூர்.

*பாடபேதம் :—காவைவரு வடமலையப்ப முகில், கீர்த்தி பெறுந் திருமலைக் கொழுந்து முகில், கச்சிவரு சொக்கலிங் கேந்த்ரமுகில், தச்சிவருந் திருமல நராதிபதி.

பாவலர்க் குபகாரி காவையம் பலவாணன்
பலகிளையுந் தழைக்கவே கூவாய் குயிலே
காவலர்க் குயர்பெருமை மேவுதேர்ப் பாலழகர்
கட்டளைகள் தழைக்கவே கூவாய் குயிலே. உக

பொருநையந் திருநதியின் இருகரையும் இருபூவும்
பூஞ்சாலி விளையவே கூவாய் குயிலே
அருள்பெறுந் தருமநிதி சாத்தூரிற் பெரியநம்பி
அய்யங்கார் வாழவே கூவாய் குயிலே
பெருவளந் தருநாடு திங்கள்மும் மாரியும்
பெய்யமழை வேண்டியே கூவாய் குயிலே
கருநெடும் புயலழகர் மருவுசந் நிதிகற்ப
காலங்கள் விளங்கவே கூவாய் குயிலே. நo

தெய்வநிலை போற்றுதல்

கலிப்பா

காரிப் பிரான்புதல்வர் கல்வித் தமிழ்வேதம்
பாரித்த முக்கூடற் பண்ணவனூர் நன்னுட்டில்
மாரிப் பொருட்டால் வரங்குறித்து மள்ளரெல்லாஞ்
சேரிக் குரவையெழத் தெய்வநிலை போற்றினரே. நக

உக. காவை அம்பலவாணன் - காவை வடமலையப்ப பிள்ளையனின் முன்னோர்; பிராசாத அகவல், திருவருட்பயன் உதாரணக் கலித்துறை முதலிய நூல்களின் ஆசிரியர்; துறவியாயிருந்தவர்; இவர் காலம் பதினேந்தாம் நூற்றாண்டு. தேர்ப்பால் அழகர் - பார்த்தசாரதி.

நo. இருபூவும் - இரண்டு போகமும். பூஞ்சாலி - நெல்லில் சிறந்த வகை. பெரியநம்பி: கக-ம் பாட்டின் அடிக் குறிப்பு பார்க்க.

நக. காரிப்பிரான் புதல்வர் - காரிமாறன் புதல்வராகிய நம்மாழ்வார். தமிழ் வேதம் - திருவாய்மொழி. குரவை - நாவால் ஒலிக்கும் மகிழ்ச்சியொலி.

சிந்து

திங்கள்மும் மாரிஉல கெங்கும் பெய்யவே
தெய்வத்தைப் போற்றிவந்து கைதொழுங்காண்
பொங்கலு மிட்டுத்தேங் காயுங் கரும்பும்
பூலா வுடையாருக்குச் சாலவே கொடும்
குங்குமத் தோடு சந்தனங் கலந்து
குமுக்கா வுடையாரய்யர் தமக்குச் சாத்தும்
கங்கணங் கட்டிஏழு செங்க டாயும்
கரையடிச் சாத்தாமுன்னே விரைய வெட்டும். நஉ

பூத்ததலைச் செஞ்சேவற் சாத்திரத் தாலே
புலியூ ருடையார் கொள்ளப் பலிதானிடும்
வாய்த்த சாராயமும் பனையூற்றுக் கள்ளும்
வடக்குவாய்ச் செல்லியுண்ணக் குடத்தில் வையும்
தோத்திரம் பண்ணும் பண்ணுங்கூத் தாடியே
தொழுது தொழுது வேண்டும் மழைபெய்யவே
ஏத்தும் அழகர்பேரை வாழ்த்தி வாழ்த்தியே
எல்லோரும் வாரும் பள்ளர் எல்லோருமே. நந

நஉ. பூலாவுடையார், உடையாரய்யர் - ஐயனார்போன்ற சிறு கிராமதேவதைகள். குமுக்கா - திரளாக. கரையடிச் சாத்தா - ஆற்றங்கரை, குளக்கரை முதலிய இடங்களில் ஊருக்குப் புறம்பே பிரதிட்டைபண்ணி வழிபடப் பெறும் ஐயனார்; சாத்தா - சாஸ்தா, ஐயனார்.

நந. பூத்த் தலை - பூ அலர்ந்தாற் போன்ற கொண்டை. புலியூருடையார் - மற்றொரு காவல் தேவதை. வடக்குவாய்ச் செல்லி - ஊரின் வடக்கு எல்லையிலிருக்கும் பெண் தேவதை. வடவாய்ச் செல்லி; செல்லி - செல்வி.

மழைக்குறி

கலிப்பா

முத்திதர வந்ததிரு முக்கூடல் மாதவர்தாள்
பத்திமற வாதபண்ணைப் பட்சேரிப் பள்ளரெல்லாம்
புத்தியுடன் தெய்வநிலை போற்றியபின் வானமுகில்
எத்திசையும் பெய்யமழை யின்குறியுண் டாகியதே: நச

சிந்து

ஆற்று வெள்ளம் நாளை வரத்
தோற்றுதே குறி - மலை
, யாள மின்னல் ஈழ மின்னல்
சூழ மின்னுதே

நச. பட்சேரி - பள்சேரி, பள்ளர்சேரி. இந்தப் பாட்டின் பின்,

" மேகமெல்லாம் ஒன்றுய்க்கூடித் தான்கருக்குதே—மெத்த
மின்னல்மின்ன வாசவன்கை வில்லெடுக்குதே
நாகரிகப் பொதியமலைக் காற்றடிக்குதே—கொண்டல்
நாலுதிக்கும் கோடையிடி தானிடிக்குதே
ஏகபோக மாமரத்தில் குயில்கள்கூவுதே—மழைக்
கேற்றமாம் சொறித்தவளை கூப்பிடுகுதே
ஆகையினல் எங்கள்திரு முக்கூடல் நகரில்
அந்திநேர மெல்லாம்மழை வந்துபெய்யுதே "

என்ற பாட்டு முக்கூடற்பள்ளைச் சேர்ந்ததாக வழங்கப்படுகிறது; முக்கூடற்பள்ளு நாடகம் என்ற நூலிலும் 'முத்திதர' என்ற பாட்டின் பின்னர்க் காணப்படுகிறது; ஆனல், ஏட்டுப் பிரதிகள் ஒன்றிலும் காணப்படவில்லை. அன்றியும், இதன்கணுள்ள சில சொற்களும் சொற்றொடர்களும் அடுத்த செய்யுளிலிருந்தெடுத்து அமைத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. எனவே, இது நாடகம் அமைத்தோரால், பிற்காலத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டதென்று கருதலாம்.

நேற்று மின்றும் கொம்பு சுற்றிக்
காற்றடிக் குதே - கேணி
நீர்ப்படு சொறித் தவளை
கூப்பிடு குதே
சேற்று நண்டு சேற்றில் வளை
ஏற்றடைக் குதே - மழை
தேடி யொரு கோடி வானம்
பாடி யாடுதே
போற்று திரு மாலழகர்க்
கேற்றமாம் பண்ணைச் - சேரிப்
புள்ளிப் பள்ளர் ஆடிப் பாடித்
துள்ளிக் கொள்வோமே. நடு

இக்கரைக் காலிற் பொருளை
யக்கரைக் காலின் - மழைக்
கேம மின்றிச் சாம மின்றி
நாமல்லோ போவோம்
தக்க தோணி யைத்துறையிற்
சிக்கெனக் கட்டும் - படல்
தாழைக் குடைக் கொங்கணியும்
வேளைக்கே வேண்டும்

நடு. மேல் திசையிலும் தென்திசையிலும் மின்னல் மின்னுவது, சுழல்காற்றடிப்பது, தவளை கத்துவது, நண்டு வளை தோண்டுவது, வானம்பாடி யாடுவது முதலியன மழைக் குறிகள். புள்ளிப் பள்ளர் - சிறந்த பள்ளர்.

நசு. ஏமம் - இரவு. கொங்கணி - மழையைத் தாங்கித் தலையில் கவிக்கும் சம்பங்கூடை; குடலை என்றும் சொல்வ துண்டு.

பக்கமேயுஞ் சூழ்கம்புஞ் சு
ருக்க வாங்கிடும் - சீலைப்
பந்தமும் விளக் கெண்ணெயும்
முந்தவே தேடும்
முக்கூடல் அழகர் பண்ணை
மிக்க சேரியில் - பள்ளர்
முழுதுங் குரவை யிட்டே
எழுவோ மடா. நசு

மழை பெய்தல்

கலிப்பா

சூலா னதுமுதிர்ந்தால் தோன்றுதோ பேறுசெங்கண்
மாலாசூர் நன்னுட்டில் மழையுமந்த வண்ணமன்றே
வேலா வலயமுந்நீர் மேய்ந்துகருக் கொண்டமுகில்
காலான தூன்றியந்தக் காலமுறை காட்டியதே. நஎ

சிந்து

காவுக் கிறைவ னுகும் இந்திரன்
ஏவற் பணிகொண் டெழுந்த கார்
கடலிற் படிந்து திருவிற் கோட்டி
அடல்முக் கூடல் அரியு மாய்ப்

நசு. கம்பு - இருளில் வழியைத் தடவிப் பார்த்துச் செல்வ தற்காக. சீலைப்பந்தம் முதலியன இருளில் வெளிச்சங் காட் டுவதற்காக.

நஎ. அந்தக் காலமுறை காட்டியது - மாரிக்காலத்தின் இயல்புக்கேற்ப மழைபெய்தது.

நஅ. காவுக்கு இறைவன் - மருதத்துக்குரிய தெய்வம். இந்திரன் மேகங்களுக்கும் இறைவனதலால், மேகம் அவனது ஏவற்பணி கொண்டெழுந்தது. திருவிற்கோட்டி - வானவில்லை ஆகாயத்தில் வளைத்து. கடலிற் படிந்தமையாலும் வில்லை வளைத்தமையாலும், மேகம் அரியாயிற்று.

பூவுக் குயர்ந்த கலிமின் னேடு
மேவிக் கமலத் தயனு மாய்ப்
புனலைத் தரித்து வரையி லேறிக்
கனலைத் தரித்த சிவனு மாய்த்
தாவிப் பறந்து பணிகள் பதுங்கக்
கோவித் தெழுந்த கருடனும்
தானே யாகி யுலகுக் குரிமை
ஊனே யாகி யுயிரு மாய்க்
கோவிற் பெரிய வடம லேந்திரன்
மாவிற் கறுத்துட் பொழிந்தபின்
குளிரு கின்றது கோன்கழுத் தினில்
வெளிறு கின்றது வானமே. நஅ

ஆற்று வரவு

கலிப்பா

பாயுங் கருடப் பரியார்முக் கூடலிலே
காயும் பொருப்பென் களபத் தனப்பொருப்பே
சாயும் புனலமுத தாரைகுளி ரக்குளிரத்
தோயும் பொருப்பர்கலை தோய்ந்தீரந் தோயாரே. நகூ

நஅ. கலிமின் - சரசுவதி ; மின் - மின்னல். கலிமின் னேடு மேவியமையால் மேகம் பிரமனை ஒத்தது. புனலைத் தரித்தமையாலும் மலைமீதேறியமையாலும், கங்கையைத் தரித்துக் கயிலை வரையிலிருக்கும் சிவனை ஒத்தது. பாம்புகள் பதுங்கும்படியாக எழுந்தமையால் கருடனுமாயிற்று. பணி - பாம்பு. 'வானின்றமையா துலகு' ஆதலின், மேகம் உலகுக் குரிமை ஊனேயாகி உயிருமாயிற்று. மா - குதிரை. வடமலேந்திரனது குதிரை கறுப்பென்பது இதனால் தெரிகிறது. வெளிறுகின்றது - மழைபெய்தபின் வானம் களங்க மற்றுப் பிரகாசித்தது.

நகூ. தலைவி கூற்று. பாயும் கருடப் பரியார் - பறக்கும் கருடனை ஊர்தியாகவுடையவர்.

குறிஞ்சி

சிந்து

வானக் குருசில் வள்ளலாய் - வரைக்
கோனைப் பரிசு கொள்ளலர்ய்,
வழங்கு மாறும் புறப்பட்டே - புனல்
முழங்கு மாறுந் திறப்பட்டே
தானக் களிறு படிந்திடக் - கொலை
ஏனக் களிறு மடிந்திடத்
தழையின் ஆரம் உந்தியும் - பசுங்
கழையின் ஆரம் சிந்தியும்
கானக் குளவி அலையவே - மது
பானக் குளவி கலையவே
காட்டுச் சாதி வேரிற் போய்க் - குற
மோட்டுச் சாதி ஊரிற் போய்ச்
சேனைப் புரவி அழகனர் - மரு
கோனைப் பரவி யழகுபூந்
தினையை வனத்தில் உதிர்த்துப் - பாலை
யனைய வனத்தை எதிர்ந்ததே. சஅ

கலிப்பா

பால்வெள்ளத் தாறுடைய பண்ணவர்முக் கூடலிற்கண்
வேல்வெள்ளத் தாறெமது மின்னிறைக்குங் கார்காலம்
கால்வெள்ளத் தாறுகரை கண்டுங்கரை காணுமல்
மால்வெள்ளத் தாறு வரவிரவு தீர்வாயே. சக

சஅ. தானக்களிறு - மதயானை. ஏனக்களிறு - பன்றி. கானக்குளவி - மரமல்லிகை. மதுபானக்குளவி - தேனீ. குறமோட்டுச்சாதி - குறிஞ்சி நிலத்துக்குரிய. மக்கட்சாதியாகிய குறவர். அழகனர் மருகோன் - முருகன்; குறிஞ்சி நிலத்துக்குரிய தெய்வம்.

சக. தலைவன் கூற்று.

பாலை

சிந்து

எதிரும் பாலை மரவமுங் - திரள்
வெதிரும் பாலைக் குரவமும்
இருப்பை ஈந்தி கள்ளியும் - கரைப்
பொருப்பை ஈர்ந்து தள்ளியும்
முதிரும் பாறு முறையிடக் - கழு
குதிரும் பாறு சிறையிட
முள்வே லெயினக் கிடைஎழப் - பதி
வெள்வே லெயினப் படைஎழப்
பிதிருங் காஎ விழியுடன் - குடில்
அதிருங் காஎ மொழியுடன்
பெரும றத்திய ரல்லவே - யெனுங்
கரும றத்தியர் செல்லவே
கதிருங் காலும் போலவே - சென்
றுதிரங் காலுஞ் சூலவேற்
கன்னி முலையிற் சுரந்தபால் - என
முன்னி முலையிற் பரந்ததே. சஉ

சஉ. மரவம், வெதிர், பாலை, குரவம், இருப்பை, ஈந்து, கள்ளி - மரவகைகள். வெதிர் - மூங்கில்; முதிரும் பாறு... சிறையிட - முதிர்ந்த பருந்து வருந்தவும், வெள்ளம் மரத்தை சார்ப்பதால் கூட்டினின்றும் விழும் குஞ்சுகளைக் கழுகு தன் சிறகில் அணைத்துக்கொள்ளவும். முள்வேல் எயினக்கிடை - முள்வேலுடைய முள்ளம்பன்றி இனத்தொகுதி. பதிவெள்வேல் எயினப்படை - பதியிலுள்ள வெள்ளிய வேல்பிடித்த எயினர் படை. பிதிருங் காஎ விழியுடன் - வெள்ளத்திலடிபட்ட மாடுகள் விழிபிதுங்க. காஎ மொழியுடன் - காஎப் பருவத்துள்ளார் அதிர்ந்து பேசும் மொழியோடு. பெருமறத்தியர் - மிக்க வீரமுடைய பெண்கள். கருமறத்தியர் - கரிய நிறமுடைய ப்ாலைவனப் பெண்கள். கதிருங்...கன்னி - சூரியனும் யமனும் போல, செல்லுமிடம் உதிரம் காலச்செய்யும் சூலமாகிய வேலைத் தரித்த கன்னி; கன்னி - துர்க்கை; பாலை நிலத்தின் தெய்வம்.

கலிப்பா

முந்நீ ரிடுங்கணையார் முக்கூடல் மால்வரையின்
மின்னீர் வரக்கான் விளங்கிநின்ற வாறேயோ
நன்னீர் மருதமென நால்வளமுண் டாயதுவே
றுண்ணீர் கைக்கொண்டு உகந்துமெல்லச் சொல்வீரே.

மு ல் லை

சிந்து

முல்லைக் கோடி யடுக்கையின் - மலி
கொல்லைக் கோடி கடுக்கையின்
முட்டித் தோன்றி மவ்வலை - மது
கொட்டித் தோன்றி வெவ்வலை
இல்லைச் சாடி எண்ணெயும் - அயல்
எல்லைச் சாடி வெண்ணெயும்
எள்ளும் அவரை துவரையும் - உரை
கொள்ளும் அவரை எவரையும்
தொல்லைப் பாடு பண்ணியும் - துறு
கல்லைப் பாடு நண்ணியும்
தொடுத்துப் பூவை நெற்றியைத் - தொட
மடுத்துப் பூவை எற்றியே
குல்லைத் தானந் தேக்கி - மாலுக்
கெல்லைத் தான மாக்கி மால்
கொள்ளுங் கயத்தை நிகர்த்து - மருதக்
துள்ளுங் கயத்தில் பரந்ததே. சச

சஅ. தலைவி கூற்று ; தோழி கூற்றுமாம். முந்நீரிடுங் கணையார் - சமுத்திர ராசன்மீது கணை எய்த இராமர்.

சச. முல்லை - முல்லைநிலம். அடுக்கையின் - அடுத்து. கடுக்கை - கொன்றை. தோன்றி - தோன்றி மரம். மவ்வல் - மல்லிகை விசேடம். வெவ்வலை - கொடிய அலை. பூவை நெற்றி - காயா மரத்தின் உச்சி. குல்லை - துளசி. மால் - முல்லைக்குரிய தெய்வம்.

கலிப்பா

குன்றைக் குடைகவித்த கோவலர்முக் கூடலிலே
இன்றைக் கிரவில் இவளெவர் தேற்றுவரோ
கன்றைக் கழுத்தணைத்துக் கற்றுவைக் கூவுமண்டர்
கொன்றைக் குழல்பூங் குழலிசெவிக் கேறுதே. சரு

மருதம்

சிந்து

பாயும் மருதஞ் செழிக்கவே - பண்ணை
தோயும் மருதந் தளிர்க்கவே
பகட்டுக் கமலக் குட்டத்திற் - புனல்
தகட்டுக் கமலை வட்டத்தில்
போயும் எருமை பதறவே - உற
மேயும் எருமை சிதறவே
புழுதிச் சாலை நனைத்துமே - குளிர்
கொழுதிச் சாலை யனைத்துமே
காயும் உரலுங் கரும்புந்தான் - அதில்
பாயும் முரலுஞ் சுரும்புந்தான்
சரிய முதலை முடுக்கியும் - வாழைப்
பெரிய முதலை அடுக்கியும்

சரு. தோழி கூற்று. குன்றைக் குடைகவித்த கோவலர் - கோவர்த்தனகிரியை ஆக்களுக்கும் ஆயருக்கும் குடையாகத் தூக்கிக் கவித்த கண்ணன். அண்டர் - ஆயர். கொன்றைக் குழல் : 'கன்றுகுணிலாக் கனியுதிர்த்த மாயவன்...கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி' - சிலப்பதிகாரம், ஆய்ச்சியர் குரவை.

சசு. மருதம் - மருதநிலம், மருதமரம். பகட்டுக் கமலக் குட்டம் - பிரகாசமான தாமரைக் குளம். கமலை வட்டம் - மாடுகள் பூட்டி இறைக்கப்பெறும் கமலை ஏற்றம். புழுதிச் சால் - புழுதி உழவு உழப்பெற்ற நிலம். பாயும் முரலும் சுரும்பு - சப்திக்கின்ற வண்டு பாயும். முதலை முடுக்கி - முதலை கூை ஓட்டி. வாழைப் பெரிய முதல் - பெரிய வாழைத்தாறுகள்.

காயுந் தவள வாரணம் - எதிர்
ஆயுந் தவள வாரணம்
கழனிக் குடிலைத் தொகுத்து - நெய்தலங்
துழனிக் குடிலிற் புகுந்ததே. சசு

கலிப்பா

மூன்றிற் குடவலையூர் முக்கூட லூரர்செய்த
நன்றிக் கிணையில்லை நான்நெடுமால் ஆனேனே
வென்றித் திருநாமம் வேறே பொருதைநதி
அன்றிற் குலங்காள் அவற்கீதுநீர் சொல்வீரே. சஎ

நெய்தல்

சிந்து

புகுந்த நெய்தலை மயக்கியே - மலர்
மிகுந்த நெய்தலைக் கயக்கியே
புடையிற் புள்ளினஞ் சரியவே - அதன்
இடையிற் புள்ளினம் இரியவே

சசு. தவளவாரணம் - வெள்ளையானை, ஐராவதம்; மருத நிலத்துத் தெய்வமாகிய இந்திரனுக்குரியது. தவள வாரணம் - வெண்மையான சங்குகள். துழனி - புள்ளொலிக் கூட்டம்: 'துள்ளுபுள் ளீட்டத் தோசை துழனி' - திவாகரம். ஏட்டுப் பிரதி.

சஎ. தலைவி கூற்று. நான் நெடுமால் ஆனேனே, வென்றித் திருநாமம் வேறே - சிலேடை: நான் மிக்க மயக்கத்தை அடைந்தேன், இம்மயக்கத்தை நீக்காத அவருக்கு வென்றித் திருநாமம் எதற்கு எனவும், நான் நெடிய திருமால் ஆயினேன், அவருக்கு இனி அப்பெயர் எதற்கு எனவும் இரண்டு பொருள் தோற்றுகிறது.

சஅ. நெய்தல் - நெய்தல் நிலம், நெய்தல் மலர். புள்ளினம் - வண்டினம், பறவையினம்.

பகுந்து நுழையப் பட்டினம் - திரை
மகந்து நுழையப் பட்டினம்
படைத்தி டாமை நிகழவே - நிலை
கிடைத்தி டாமை புகழவே
உகுந்த தண்டலை நீக்கியே - புன்னை
வகுந்த தண்டலை தாக்கியே
உப்பளத் திரை யோட்டியும் - புனல்
அப்பளத் திரை யூட்டியும்
தகுந்தடங் கடல் இறைவனைத் - தொழ
மகிழ்ந்திடுங் கடன் முறையினிற்
சார்ந்து சரிந்து நேர்ந்து - குறுகி
வார்ந்து வெள்ளம் ஊர்ந்ததே. சஅ

கலிப்பா

கங்கமே யூருங் கடவுளர்முக் கூடலிலே
தங்கமே தேடத் தணந்தார் மணந்திலரே
வங்கமே யங்கமனல் வங்கமே யானேன்வெண்
சங்கமே செங்கைதனில் சங்கமே தாங்கேனே. சக

சஅ. பட்டினம் - நெய்தல் நிலத்தூர். நுழையப்பட்டு இனம் படைத்திடாமை எனப் பிரிக்க. தண்டலை - பூந்தோட்டம், சோலை. புன்னை - நெய்தலுக்குரிய மரம். கடல் இறைவன் - வருணன், நெய்தலுக்குரிய தெய்வம்.

சக. தலைவி கூற்று. கங்கமே ஊருங் கடவுளர் - கருடனை ஊர்தியாகவுடைய திருமால். தங்கமே தேடத் தணந்தார் - பொருள் வயிற் பிரிந்த தலைவர். அனல் வங்கமே யானேன் - அனலிலிட்ட ஈயம்போல் உருகுகிறேன். வெண்சங்கமே - வினை. செங்கைதனில் சங்கமே தாங்கேனே - கையிலுள்ள வளைகள் கழல்கின்றன.

ஆற்று வெள்ளம்

பொருநை யாறு

சிந்து

உதைத்து விசைகொண் டெதிர்த்துக் கடலின்
உதரங் கீறி யதிரும்நீர்
உதய வரைக்கும் பொதிகை வரைக்கும்
ஒத்துப் போம்படி முற்றும்போய்
பதைத்து நெளியும் துதிக்கை மூக்கன்
பண்ணைச் சாலை எண்ணைமீன்
பசலி திருக்கை கசலி கெளுத்தி
பண்ணைக் கும்பழம் பாசிமீன்
வதைக்கும் மகரங் குதிக்குஞ் சள்ளை
மத்தி யுல்லம் பொத்திமீன்
மடந்தை கடந்தை சம்பான் நொறுக்கி
மலங்கும் பஞ்சலை கருங்கண்ணி
புதைத்து மணலில் ஒதுக்கிக் கடலில்
போக்கி அழகர் கருணைபோல்
பொருநை யாறு பெருகி வார
புதுமை பாரும் பள்ளீரே. (ரு.)

சித்திரா நதி

குற்றாலத் திரி கூட மால்வரை
யிற்றே மேகம் பொழிந்தநீர்
கூடிப் பொருநை நாடித் திருமுக்
கூடற் பதியை வலங்கொண்டே

ரு. உதயவரை கீழ்த்திசையிலும் பொதிகைவரை மேற்றிசையிலும் உள்ளன. துதிக்கை மூக்கன் முதல் கருங்கண்ணி யிறுதியாக உள்ளவை அனைத்தும் மீன்வகை.

வற்ரு மடுவிற் பரவை குரவை
வாளை கோளை தேளிமீன்
மயிந்தி உழுவை அயிந்தி கூனி
மணலி ஆரால் ஓராமீன்
பற்ரு அயிரை கெண்டை கெளிறு
பரு வராலும் அணையிலே
பாயக் காலிற் பாயக் குளத்திற்
பாய வயலிற் பாயவே
சிற்ரு றென்பது பெற்ரூலும் ஒரு
சிறியவர் மனப் பெருமைபோல்
சித்ரா நன்னதி பெருகி வார
சித்திரம் பாரும் பள்ளீரே. ருக

ருக. பரவை முதல் பருவரால் இறுதியாக உள்ளன அனைத்தும் மீன்வகை. இந்தப் பாட்டின் பின்,

"சங்கர நயினர் கிருபையால்
சார்ந்து பொழிந்த மேகநீர்
தழைத்த புன்னையங் காவினில் சென்று
கிளைத்த பெருங்கோட் டுரினில்
சிங்கார மேனி வந்து காளிங்க
ராய னுடையில் சேர்ந்துடன்
சிவந்த குங்குமஞ் சந்தனங் கொட்டிச்
சேர்ந்து வந்த நீரெல்லாம்
கொங்கலர் குழல் சீதை பொருட்டால்
அங்கெ முனிந்த ராமன்கைக்
கோதண் டத்தினுல் எழுந்த கங்கையைக்
கூடிச் சங்நதி கூடியே
செங்கண் மாலழ கேசர் பதத்தைச்
சிறக்க வலங்கொண் டேகியே
செண்பகக் கோதண்ட ராம நதிவார
சிங்காரம் பாரும் பள்ளீரே"

என்ற செய்யுள் திரு. இ. சண்முகசுந்தரம் என்பவர் எழுதிய கடிதப் பிரதிகளில் மட்டும் காணப்படுகிறது; ஒரு ஏட்டிலும்

பண்ணைக்காரன் வரவு

கலிப்பா

ஆறுபரந் தப்பாலு மங்நிலத்தா ரிங்நிலத்திற்
பேறுடனே மற்றநிலப் பேறும் பெறநினைந்தே
ஏறுபுனல் கண்டதற்பின் எம்பெருமான் முக்கூடல்
வீறுதரும் பண்ணை விசாரிப்பான் வந்தானே. ருஉ

சிந்து

மாறு கண்ணும் பருத்திப்பைக்
கூறை வயிறும் - கீரை
மத்துப் போல் தலையும் சுரை
வித்துப் போல் பல்லும்
நீறு போல் எழுந்த மூளை
யூறு நாசியும் - தட்டி
நெரித்த மாங்கொட்டை போல் ஈ
அரித்த வாயும்
தாறு மாருய் மீசையில் அஞ்
சாறு மயிரும் - தூங்கற்
சண்ணைக் கடாப் போல் நடையும்
மொண்ணை முகமும்

காணப்படவில்லை. முக்கூடலில் மூன்று ஆறுகள் கூடுகின்றன வாதலால், மூன்று ஆறுகளின் வெள்ளப்பெருக்கும் வருணிக் கப்படவேண்டும் என்று கருதிய ஒருவரால் இது பிற்காலத் தில் சேர்க்கப்பட்டது போலும். மேலே பொருநையாறும், சிற்ருறும் கூறப்பட்டமையால், இதில் மூன்ருவது ஆருகிய கோதண்டராமநதி என்னும் ஓடை கூறப்படுகிறது.

ருஉ. சண்ணைக்கடா - தின்று கொழுத்த கடா.

வேறு கீறி ஓட்ட வைத்த
ஏறு காது மாய் - நேமி
வீரனுர் முக்கூடற் பண்ணைக்
காரனுர் வந்தார். ருக

மூத்த பள்ளி முகம் பார்த்து
வார்த்தை சொல்வா ராம் - பெரு
மூச்சுக் கொண் டிளைய பள்ளி
பேச்சுக் கேட்பா ராம்
சாத்தி மகள் காத்தி தன்னைப்
பேத்தி என்பா ராம் - மெள்ளச்
சன்னையாய்க் களத்திலே வா
பின்னை என்பா ராம்
வாய்த்த தடிக் கம்பை யூன்றிச்
சாய்த்துப் பார்ப்பா ராம் - ஊத்தை
வாய்க்கு மெல்லப் புகை குடிக்கத்
தீக்குப் போவா ராம்
காத்தி ராத பள்ளனைப் பர
மார்த்தி என்பா ராம் - குச்சிற்
கண்ணைச் சாய்ப்பா ராம் முக்கூடற்
பண்ணைக் காரனுர். ருச

மூத்த பள்ளி முறையிடுதல்

எண்ணெயார் பூந்தயிலம் ஏற்றகுழல் மூத்தபள்ளி [லாம்
பண்ணையா னேடுரைத்தாள் பள்ளன்மனக் கள்ளமெல்

ருக. நேமிவீரனுர் - சக்கராயுதந் தரித்த திருமால்.

ருச. பேத்தி - பரிகசிப்பதற்குள்ள உரிமை பற்றி. சன்னை - சைகை. பரமார்த்தி - உலக அனுபவமற்றவன்.

வெண்ணெயார் வாயினிசை வேயழகர் மாயமிதோ
பெண்ணெயார் கையிற் பிடிப்பார் பிடிப்பாரே. (ருரு)

சிந்து

தூக்குணிப் பள்ளன் - ஏய்க்கிற ஆட்டத்தைத்
துக்குணிக் கேளும் - முக்காலுஞ் சொன்னேன்
காக்குங் காலணை - பார்க்கவுஞ் செய்யான்
காலஞ் செய்வது - கோலஞ் செய்யுமோ
போக்கு நீக்கில்லை - மூக்கிலே கோபம் என்
புத்தியுங் கேளான் - சத்துரு நீலன்
வாக்கு வாதமுண் - டாக்கினுள் என்றென்னை
வைதாலும் வையும் - மெய்தானி தாண்டே. (ருசு)

கட்டின மாட்டைத் - தொட்டீவி ழான்ஒருக்
காலுந்தான் உழக் - கோலுங்கை தீண்டான்
தொட்டியர் காணை - மட்டிபோல் வெந்துநான்
சோறிட் டாலுங்கண் - ஏறிட்டும் பாரான்
வட்டில் வாய்வைக்கில் - சட்டிகொண் டோங்கும்
மருதூ ராளை - விருதுக்கே வைத்தான்
பெட்டியால் வாரிப் - பட்டடை நெல்லெலாம்
பேய்த்தண் ணீருக்குத் - தேய்த்தான்கா ணுண்டே.

ருரு. வெண்ணெயார் வாயினிசை வேய் அழகர் - வெண்ணெயுண்ட வாயிலே வேய்ங்குழலை வைத்து கீதமிசைக்கும் கண்ணனுகிய அழகர்.

ருசு. தூக்குணி - மானமற்றவன். துக்குணி - சிறிதளவு. காலணை - நிலத்துக்கு நீர் தரும் வாய்க்கால் தலைப்பு. முக்காலும் சொன்னேன், காலஞ்செய்வது கோலஞ் செய்யுமோ, போக்கு நீக்கில்லை, மூக்கிலே கோபம், சத்துரு நீலன் என்பன பழமொழிபோல் வழங்கும் தொடர்கள்.

ருள. தொட்டியர் - ஒருசாதி மக்கள். விருதுக்கே - கௌரவத்துக்கே. பேய்த்தண்ணீர் - கள். பட்டடை - நெற்களத்திலே சேமித்து வைத்துள்ள நெற் குவியல்.

இளைய பள்ளி கூறுதல்

கலிப்பா

மாற்றவள்தன் சொற்கேளா மருதூரிற் பள்ளியுந்தான்
ஏற்றபடி சொன்னுள் இரண்டுபடில் யார்பொறுப்பர்
தேற்றமரி தன்றே சிறுமைவரா மற்பெருமை
ஆற்றவல்ல மாதர் அழகர்புய மார்பினரே. (அ)

சிந்து

குடிலிற் கிடந்த பள்ளனை - முக்கூடற் பள்ளி
கூப்பிட் டெழுப்பி முந்தா நாள்
விடியப்போ வேலையிலென்றுள் - அவனும் போனன்
வெள்ளமும் மேல்வரத் தாச்சு
கடினப் பிரவிர்த்தி ஏதோ - திரும்பிவரக்
கண்டிலேன் இன்று மூன்று நாளாய்
அடிமைக்கு நேற்றிரா வெல்லாம் - உறக்கமில்லை
அழகர் அறிவார்கா ணுண்டே. (கூ)

மூப்பாலுஞ் சோறும் உண்ணவே - நடத்திக்கொண்
மூப்படி யானும் பேய்ப்பட்டான் [டூர்
அப்பால் அவனுக் கொன்றுனல் - நயினர்சேதம்
ஆமே அடியாளுக் கென்ன
துப்பான கலுங்கில் மறுகால் - நிலையாதென்று
சொன்னுர்கள் இன்னதென் றறியேன்
இப்பால் அழகர் செய்ததைக் - காணலாமென்றே
இருக்கிறேன் என்செய்வே னுண்டே. (கூ)

(கூ) கடினப் பிரவர்த்தி - பிரயாசமான வேலை.

(கூ) மூப்படியான் - பழைய அடியான். நயினர் சேதம் - பண்ணையாருக்கு நஷ்டம். கலுங்கு - வாய்க்கால் அல்லது நீர் நிலையிலுள்ள மதகு.

பண்ணைக்காரன் கோபித்தல்

கலிப்பா

திசைபோன சூதுகற்ற தென்மரூ தூர்ப் பள்ளிகள்ளி
அசையாமற் பள்ளனையுள் ளாக்கிவைத்துக் கொண்டேனுடன்
இசையாத வார்த்தைசொன்னு யென்றுபண்ணை யானெழுந்து
கசையால் அடிப்பனென்று கண்சிவந்து கூறினனே. சுக

சிந்து

மூக்கூடற் பள்ளியைப் போல்
சொக்காரி நீ யல்லவே
வக்கணை ஏன் மருதூர்
அக்கிரமப் பள்ளி. சுஉ

குச்சுக் குள்ளே பள்ளனையும்
வைச்சுக்கொண் டதட்டாதே வாய்
தைச்சுப் போடுவேன் மருதூர்
கச்சற்காய்ப் பள்ளி. சுஙு

பள்ளன் வெளிவருதல்

கடின வுரையைக் கேட்டு
வடிவழகக் குடும்பன்
குடிலி லிருந்தே அரை
நொடியில் வந்தான். சுச

சுக. திசைபோன : 'இசையாற் றிசை போயதுண்டே' - சீவக சிந்தாமணி, 31. கசை - சவுக்கு.

சுஉ. சொக்காரி - தாயாதி ; சொம் - சொத்து ; சொத்துக்குடையவள் சொக்காரி. வக்கணை - திறமையான பேச்சு.

சுஙு. கச்சற்காய் - முற்றுத இளங்காய், உபயோகமில்லாத காய் ; அற்பத்தனமானவள் என்பது கருத்து.

பண்ணைக்காரன் வினவுதல்

பள்ளனைப் பண்ணைக் காரன்
கள்ளமாய்ப் பார்த்துப் பள்ளா
துள்ளாதே பண்ணைச் செய்தி
விள்ளடா என்றான். சுடு

பள்ளன் கூறுதல்

கலிப்பா

பத்துவடி வத்தழகர் பண்ணையான் கேட்டபடி
வித்துவகை மாட்டுவகை மேழிஏர்க் கால்முதலாய்க்
கொத்துவகை யத்தனையுங் கூட்டிவரத் துஞ்செலவும்
வைத்தஇருப் புங்குடும்பன் மாறுமற் கூறினனே. சுசு

சிந்து

பழகி னீர்அறி வீர்என் சமர்த்து
ப்யிரிடாக் கள்ளப் பள்அல்ல வேநான்
உழவு தான்ஒரு பன்றி யுழுந்தரை
ஒன்றல் லாமல் இரண்டெனக் கில்லை
அழகர் ஏவலி னுலே இலங்கை
அழித்து மீளுங் குரங்குள்ள மட்டும்
கிழமை தோறுங் கதிர்முளைத் தாலும்
கிடக்கவே ஓட்டுமோ பண்ணை யாண்டே. சுஎ

சுசு. பத்து வடிவத்து அழகர் - தசாவதாரங்களெடுத்த அழகர். வரத்து - வரவு.

சுஎ. பழகினீர் - பழகியவராகிய நீர். ஒரு பன்றி உழுந் தரை - இரணியாக்கனல் சுருட்டி ஒளித்துவைக்கப்பட்ட உல கத்தைத் திருமால் வராகாவதாரமெடுத்து மீட்டுவந்தார் என் பது வரலாறு. அழகர் ஏவல் - இராமனது ஏவல். குரங்கு - இராம சைன்யமாகிய குரங்குகள்; இவை பயிரை அழித்து விடுகின்றன என்பது குறிப்பு.

வித்து வகை

பலவெள் ளாண்மையிட் டேன்மணல் வாரியைப்
பண்டு நம்பெரு மாள்கட் டழித்தார்
செலவு போனதும் போய்ச்சில பூம்பாளை
செண்டலங் காரர் தோப்புக்கே காணும்
கலக வேற்கைத் திருமங்கை யாழ்வானைக்
காணேன் மச்சு முறித்தானைக் காட்டிச்
சொலவொண் ணைத்தெய்வ தாசிக ளுக்கே
சொரி குரும்பை விற்றூர்பல ராண்டே. சுஅ

எங்கும் போற்றும் பெருவெள்ளை முன்னம்
இராமர் சேனைக்குண் டாம்படி யாச்சு
தங்கும் பேரைக் குலவாழை காய்த்தது
சற்று மோநெல் லரிசி காணது
பொங்கும் போரில் மறுவில்லி நீலப்
புயவில் லூன்றிப் புறஞ்சாய்ந்த துண்டோ
அங்கு மிங்குங்கொண் டாட்டுவ தெல்லாம்
அறிவேன் பாரக் கடுக்கன்கா ணுண்டே. சுசு

சுஅ. மணல்வாரி, பூம்பாளை, திருமங்கையாழ்வான், மச்சு முறித்தான், சொரிகுரும்பை - நெல்வகைகள். பூம்பாளை நாலைந்து மாதங்களிலும் சொரிகுரும்பை ஏழெட்டு மாதங்களிலும் விளையும். மணல் வாரியைப் பெருமாள் அழித்தார்; பூம்பாளைநெல் தோப்பில் விதைப்பதற்குத் தான் காணும்; திருமங்கையாழ்வானைக் காணேன்; தாசிகளுக்குச் சொரி குரும்பை முற்றும் விற்றுவிட்டார்.

சுசு. பெருவெள்ளைச்சம்பா நெல் இராமர் சேனைக்கு உணவாய்விட்டது; பேரையிலிருந்து வந்த குலவாழை என்ற நெல் நன்றாய் விளைந்தது; ஆனால் அது தக்கபடி அரிசி காணது. குலவாழை - ஏழெட்டு மாதங்களில் விளையும் ஒருவகைச் சம்பா நெல்.

சிடிலா வகைக்கின்னம் எழுதி
இராச வாணனே இரண்டுபங் கிட்டு
நாடியே காவை அம்பல வாண
நயினார் போற்பின் பாதியுங் கூட்டித்
தேடினுல் அவர் முன்னின்ற பாதியும்
சேர்த்துக் கொள்ள மகாராச னுமே
கூடினுற் கூட்டும் வல்வித்தை எல்லாம்
குருகை மாறனைக் கேளுங்கா ணுண்டே. எ0

மாட்டு வகை

அதிசயந் தன்னைக் கேட்கில் முக்கூடல்
அழகர் பண்ணைக் குழவுமா டெங்கே
விதிவசந் தன்னில் ஆயிர மல்லியன்
மேற்றிசை முகஞ் சேர்ந்தது காணேன்

எ0. இராசவாணன் - நெல்வகை. இராசவாணன் என்பதில் முற்பாதியாகிய 'இராச' என்பதையும் அம்பலவாணனுகிய நடராசன் என்பதில் பிற்பாதியாகிய 'ராசன்' என்பதையும் சேர்க்க மகாராசன் என்னும் பொருளுடைய 'இராச ராசன்' என்பது பெறப்படும். அம்பலவாண நயினார்: உக-ம் பாட்டின் அடிக்குறிப்பு பார்க்க. குருகைமாறன் - நம்மாழ்வார்.

எக. ஆயிரம் அல்லியன் மேல்திசை முகம் சேர்ந்தது - யானைபோன்ற வலிமையுடைய ஆயிரம் உழவு மாடுகள் தம் இனத்தினின்றும் பிரிந்து மேல்திசை சென்றன, திரும்பிவர வில்லை என்பது கருத்து; ஆயிரம் இதழ்களுடைய தாமரைக்குக் கேள்வனுகிய சூரியன் அஸ்தமித்தான் என்பது மற்றொரு பொருள்.

சதியி லேசெப் பறைபுகு மாட்டைச்
சடையடை யாளம் போய்ப்பார்க்க வேணும்
எதிரில் லாத மயிலையுஞ் செட்டிகொண்
டேகினன் பேட்டை யேறுன்கா ணுண்டே. எக

ஓற்றைக் கொம்பனைத் தாண்டவ ராயன்
உள்ளூர்க் கோவிலுக் குள்ளே யடைத்தான்
மற்றைக் காளைக ளெல்லாம் நயினார்
வடமலை யப்பர் பேரிட்டு நிற்கும்
பற்றைக் காத்துக் கிடக்கும் ஒருசெம்
பருந்து சாயற் சுமைக்குத் தளப்பன்
புற்றைக் காத்திடும் பாம்பு கடித்துப்
பொருது விண்ணிற் பறக்குங்கா ணுண்டே. எஉ

எக. செப்பறை - முக்கூடலுக்கு அருகிலுள்ள ஒரு சிவாலயம்; சிதம்பரம்போலவே அமைக்கப்பெற்றது; அங்குள்ள மூர்த்தம் நடராஜா; திருநெல்வேலிச் சைவர்களுக்கு இப் பதி விசேஷமானது. செப்பறை புகுமாட்டை - சிலேடை: செப்பறையில் நடராசா செய்யும் நடனத்தை என்றும் செப்பறை புகுந்த மாட்டை என்றும் பொருள்படும். சதி - தாளம்; வஞ்சனை. மயிலை - மயிலாகிய புள்ளை; மயிலைக் காளையை. செட்டி - முருகன்; வணிகன்.

எஉ. ஓற்றைக் கொம்பன் - விநாயகர், ஒரு கொம்புடைய மாடு. தாண்டவராயன் - நடராஜா; தாண்டவராயர் என்பவர் விநாயகரைப் பிரதிஷ்டை செய்தாரென்பது விளங்குகிறது. மற்றைக் காளைகள் வடமலையப்பர் பேரிட்டு நிற்பதால் அழகர் பண்ணைக்கு உபயோகமில்லை. வடமலையப்பர்: கசம்பாட்டின் அடிக்குறிப்பு பார்க்க. பற்று - வயல். செம்பருந்து - செம்பருந்தின் நிறமுடைய மாடு; செம்பருந்து - கருடன். சுமைக்குத் தளப்பன் - சுமையைத் தாங்க வலியற்றது. பொருது விண்ணிற் பறக்கும் - தாங்கமாட்டாமல் இறந்தது.

ஏர்க்கால் வகை

திருமுக் கூடல் அழகர்க் கிளைய
தெரிவை நீலியைத் தேவியாய்க் கொண்ட
மருதப் பர்கொழு நானூறும் மாணிக்க
வாசகன் கிட்ட வாங்கியே கொண்டார்
விருதுக் கேகாரைக் காட்டார் வழக்கிட்டு
மேழி சேரமுன் வாங்கிக்கொண் டார்கள்
கருதிப் பெண்ணுக்கும் ஆணுக்குங் காமன்
கலப்பை முற்றுஞ் செலவிட்டா ராண்டே. எந

அனகன் ஆறை வரும்நயி னுத்தை
அழகர் மண்டபத் தூண்சாரம் ஏற்றக்
கனக நீள்வடங் கோடி கொடுத்தேன்
கார்வ ரைக்கு முழுவடம் ஒன்றே

எந. அழகர்க்கு இளைய தெரிவை - திருமாலின் தங்கையாகிய உமாதேவி. மருதப்பர் - மருதீசர். கொழு - கலப்பை நுனியில் பொருத்தியுள்ள இரும்பு; நானூறு கொளுவோடமைந்த திருச்சிற்றம்பலக் கோவையாரை சிவபெருமான் மாணிக்கவாசகரிடம் வாங்கிக்கொண்டார் என்பது ஒரு பொருள். விருதுக்கு - கொடிக்கு. காரைக்காட்டார் - காரைக்காட்டு வேளாளர் என்னும் கார்காத்த வேளாள வகுப்பினர்; இவர்கள் மேழிக்கொடி யுடையவர்களாதலின், மேழியெல்லாம் வாங்கிக்கொண்டார்கள். காமன் கலப்பையாழ்.

எச. அனகன் - அழகன். ஆறை வரும் நயினுத்தை - ஆறை அழகப்ப முதலியார். அழகர் மண்டபத் தூண் சாரம் ஏற்ற - அழகர் மண்டபத்தைக் கட்டும்போது தூண்களைச் சாரங்கட்டி ஏற்றுவதற்காக. வடங்கோடி - கோடி வடகயிறுகள். கார்வரைக்கும் உழும் வடம் ஒன்றே - வருகிற கார்ப்பயிர்வரைக்கும் உழுவதற்கு ஒரு வடமே மிகுதியுள்ளது.

எனசொல் வேனுகம் எண்ணிக்கை நாலுக்
கிருந்த தொன்றுழத் தன்னுகந் தன்னேத்
தினமும் நான்பகற் காணேன் இராத்திரி
தேடிப் பூத மெடுக்குங்கா ணண்டே. எச

பண்ணைக்காரன் இடையனைக் கூட்டிவரச் சொல்லுதல்

ஏது செய்வேன் என் றேதிய பள்ளன்தன்
ஏய்ப்புக் கேட்டந்தப் பேய்ப்பண்ணைக் காரன்
பாதி கேட்பதுஞ் சோதனை செய்வதும்
பார்க்க லாம்பின்பு தீர்க்கலா மென்றே
ஆதி நாள்வயல் வீதிகண் ணுறெல்லாம்
ஆடுவைத் தின்னும் மேடுந் திருத்தக்
கோதி லானந்தச் சாதி இடையனைக்
கூட்டிவா பள்ளா கூட்டிவா என்றான். எடு

பள்ளன் இடையனைத் தேடிப்போதல்

கலிப்பா

மைப்புயலே போலும் வடிவழகர் பண்ணைவயல்
அப்படியே தப்பாமல் ஆடுவைக்க வேணுமென்றே
ஒப்பரிய பள்ளன் உவந்துபண்ணை யாண்டவனார்
செப்பியவா றுயர்மனை தேடி நடந்தானே. எசு

எச. எனசொல்வேனுகம் - என்ன சொல்வேன் நுகம், என்ன சொல்வேன் உகம் என இருவிதமாய்ப் பிரிக்க. உகம் எண்ணிக்கை நாலு - நான்கு யுகங்கள்.

எடு. ஏய்ப்பு - பொய் வார்த்தை. பேய்ப்பண்ணைக்காரன் - அறிவில்லாத பண்ணைக்காரன். கண்ணுறு - பாசனமாகும் நன்செய் நிலப்பகுதி. கோதிலான் அந்தச் சாதி இடையன் எனப் பிரிக்க. கோதில் ஆனந்தச் சாதி இடையன் - கண்ணன்.

சிந்து

வீறுன முக்கூடல் விளங்குபண்ணை உரமேற்ற
மாருமல் ஆடுகொண்டு வருவேன்கா ணுண்டே. எள

தொழுதுவிடை கொண்டுநீர் சொன்னபடி ஆடுகொண்டு
பொழுதுபுகு முந்திவந்து புறப்படுவே னுண்டே. எஅ

குட்டிகளுங் கொண்டுசிறு குடில்களுளுங் கொண்டாட்டுப்
பட்டிகளுங் கொண்டின்று பகல்வருவே னுண்டே. எக

அழகர் திருவுளம்போல் ஆண்டவர்க்கு மனதுவர
உழவுவயல் உள்ளதெல்லாம் உரம்வைப்பே னுண்டே. அ0

இடையன் வரவு

கலிப்பா

கண்டார் பயப்படத்தன் கையிற் சுழற்றுதடி
செண்டாடிக் கொண்டுபள்ளன் சென்றழைத்த சொற்
தண்டாத சங்கத் தமிழழகர் முக்கூடல் [படியே
கொண்டாடுங் கோனேரிக் கோன்வந்து தோன்றினனே. அக

சிந்து

பாலளையி லுற்ற மணம்
மேலளைய நெற்றி யுடல்
நுட்டை நாமம் பதி
னெட்டு நாமம் பெறவே

அக. தண்டாத - நீங்காத. கோனேரிக்கோன் - இடையன் பெயர்.

அஉ. பாலளையிலுற்ற மணம் மேலளைய - பால் தயிர் முதலியவற்றின் மணம் தன்னிடத்தே வீச. நெற்றியுடல் - நெற்றியிலும் உடலிலும்.

மூக்கூடற் பள்ளு

நூலழகில் வெண் குதிரை,
வாலழகில் வாய்த்த நரை
நுரைவா யெனுங் குளத்தில்
திரைபோல் அலைந்திட
மாலழகர் பண்டு துயில்
ஆலழகர் மூக்கூடல்
வடிவழகர் வயலில் எருப்
பொடியுழவில் வைக்கவே
கோலொருகைக் கொண்டு கடைக்
காலுமொரு கைதூக்கிக்
கோனேரிக்கோன் ஆட்டுக்கிடை
கொண்டு வந்தான். அஉ

இடையன் சொல்லுதல்

பூதக்கோன் பொதுவாட்டை
வாதுக்கே ஒருபாம்பும்
புலியுங்காத் திருக்கு மது
கலிகண்டாய் குடும்பா

அஉ. நூலழகில்.....நரை - அழகிய வெண்மையான குதிரையின் வால்போல் நரைத்த மயிர். இடையனது வாயென்னும் குளத்தில் நுரையாகிய அலைகள் அலைந்தன: கோல் - மாடு ஓட்டும் கொம்பு. கடைக்கால் - மூங்கிற் குழாயாலான பால்கறக்கும் கலம். ஒரு கை தூக்கி - ஒரு கையில் கொண்டு. ஆட்டுக் கிடை - எரு வைப்பதற்காக வரும் ஆட்டு மந்தை.

அஊ. பூதக்கோன்...காத்திருக்கும் - பூதங்களுக்கு நாயகனாகிய சிவபெருமான் அம்பலத்தில் ஆடும் நடனத்தை வாதங் காரணமாக ஒரு பாம்பும் புலியும் (பதஞ்சலியும் வியாக்கிரபாதரும்) தரிசித்திருக்கும்; கலி - கலிகாலத்து விசித்திரம். பூதக்கோன் என்னும் இடையனுடைய ஆட்டைப் பாம்பும் புலியும் காத்திருக்கும் என்பது மற்றொரு பொருள்.

வேதக்கோன் கிடை யாண்ட
தீதுக்கா யவன்சாதி
வீதிதொறுங் கிடந்த கிடை
பேதியான் குடும்பா
நாதக்கோன் ஆட்டை முதல்
சோதித்தேன் பணத்துக்கே
தனதாக நிறுத்தினதுன்
மனதறியுங் குடும்பா
நாதக்கோன் முக்கூடல்
ஆதிக்கோன் பண்ணைவயல்
நானடா உரமேற்றும்
கோனடா குடும்பா. அந

மூத்த பள்ளி முறையிடுதல்

கலிப்பா

இடையரைக்கொண் டேவயலில் ஏவி இளை யாள்குடிலிற்
கிடைநமக்கு நல்ல கிடைஎனச்சென் றுன்குடும்பன்
அடைவுபட்ட செய்திபண்ணை யாண்டவனுர் கேளுமென்றே
படைதொடுத்து முக்கூடற் பள்ளிமுறை யிட்டாளே.

சிந்து

அடுத்திடும் வீட்டார் - சொல்லிக்
கொடுத்திட மாட்டார் - கிடைதான்
ஆட்டினிற் கிடையோ - இளையவள்
வீட்டினிற் கிடையோ

அந. வேதக்கோன் - பிரமன். சோதித்தேன் - கேட்டேன். நாதக்கோன் - நாதசொரூபனை திருமால். ஆதிக்கோன் : ஆதிநாயகர் (உந).

அச. அடைவுபட்ட செய்தி - பள்ளன் இளையாள் வீட்டிலேயே தங்கிவிட்ட செய்தி.

அரு. கிடை - கிடை, இருப்பு.

படுத்திடும் பள்ளன் - வேலையைக்
கெடுத்திடுங் கள்ளன் - எனைக்கண்டு
பதறியே விழுந்தான் - கைகால்
உதறியே எழுந்தான்.
எடுத்திடும் மடலன் - மயற்பேய்
தொடுத்திடுஞ் சடலன் - களவுகள்
இன்னமும் அறியீர் - அடியாள்
சொன்னதுங் குறியீர்
தடுத்தெனை யாளார் - அழகரும்
நடுத்தனைக் கேளார் - கடுஞ்சிறைச்
சாலையிற் போட்டால் - வளைவான்
வேலையி லாண்டே. அடி

வரத்தினை மீறுஞ் - செலவுக்குத்
தரித்திரம் ஏறும் - பேய்க்கொடை
மட்டுக்கட் டில்லான் - கூத்துக்கும்
கொட்டுக்கும் நல்லான்

அடு. எடுத்திடும் மடலன்-இளையவளுக்காக மடலேறவுந் தயாராயுள்ளவன். மயற்பேய் தொடுத்திடுஞ் சட்லன் - மையல் என்னும் பேய் அவன் உடலைப் பிடித்திருக்கிறது. அழகர் ஆஞ்தலுஞ் செய்யார், கேட்டலுஞ் செய்யார் என்பது பொருள். நடு - நியாயம்.

அசு. வரத்தினை மீறும் செலவுக்குத் தரித்திரமேறும் : பழமொழி. பேய்க்கொடை மட்டுக் கட்டில்லான் - பொருளை அளவில்லாமல் கொடுத்து விடுகிறான். நல்லான் - விருப்ப முடையவன்.

உரத்திடுங் காளை - சுழியன்
நரைத்தலை மோழை - புதியவள்
ஊட்டுக்குக் குறித்தான் - வில்லடிப்
பாட்டுக்குப் பொறித்தான்
பரத்திகைச் சுள்ளும் - அக்கரைத்
திருத்தினிற் கள்ளும் - கொண்டஞ்சு
பசுவையும் விற்றான் - மனந்தனில்
அசுயையும் அற்றான்
கரத்தொடு மரமும் - பசும்புரை
மரத்தொடு கரமும் - சேர்த்திரு
காவினில் விலங்கும் - பருக்கவே
கோலுவீ ராண்டே. அசு

தானுட்கை போலுஞ் - சளஞ்செய்து
மீனுக்கு வாலும் - பாம்புக்குத்
தலையையுங் காட்டி - எனக்காசை
வலையையும் பூட்டித்

அசு. உரத்திடும் - வலிமையுள்ள. சுழியன் - சுழியுடைய மாடு. மோழை - கொம்பில்லாத மாடு. ஊட்டு - உணவு: 'தரணி யெல்லாம், ஊன்புக்க வேற்காளிக்(கு) ஊட்டாங் காண்' - திருவாசகம், சாழல், கச. புதியவள் - மருதூர்ப் பள்ளி. வில்லடிப்பாட்டு - வில் அடிக்கும் பாட்டு, விற்பாட்டு; வில்போலமைந்த ஒரு கருவியை ஒலித்துக்கொண்டு, மறவர் முதலிய சாதிமக்கள் சிறு தெய்வங்கள் விழாக்கொள்ளுங் காலத்தே பாடும் பாட்டு; திருநெல்வேலிப் பிரதேசத்தில் இப்பாட்டு இன்றும் மிகுதியாகக் காணலாம். பரத்தி கைச் சுள் - பரத்தியினிடம் பெறும் கருவாடு. அக்கரைத் திருத்து - பொருளையாற்றுக்கு அக்கரையிலுள்ள கிற்றூர். அசுயை° - வெட்கம். பசும்புரை மரம் - உள் துளைக்கப்பட்ட பச்சை மரம்; தொழு மரம்.

அள. உட்கை - உள்ளாள். சளம் - துன்பம்.

தேனுக்குள் பாலாய் - அவள் மஞ்சள்
மேனிக்கு மாலாய்ப் - பணமெல்லாம்
சிந்தியே கெட்டான் - எனே யின்று
சந்தியில் விட்டான்
ஈனத்துக் கிவளாம் - தன் வெகு
மானத்துக் கவளாம் - காலவன்
இங்ங் கே தரியான் - கனவிலும்
அங்ங் கே பிரியான்
ஊனுக்கும் உயிராம் - பூமிக்கும்
வானுக்கும் பயிராம் - அழகருக்
குதவும்பள் வேண்டில் - அவன் இனிப்
பதனங்கா ணுண்டே. அள

ஆருக்கும் பணியான் - சீவலப்
பேரிக்குள் கணியான் - விரலெண்ணும்
அரிப்பிட்டுப் போட்டான் - பல்வரி
தெரிப்பிட்டுக் கேட்டான்
ஊருக்குள் ஏற்றம் - இவனிந்தச்
சேரிக்குள் நாற்றம் - குறும்பு செய்
தூராருக் குழைத்தான் - அழகர் சொம்
மாருகப் பிழைத்தான்

அள. தேனுக்குள் பாலாய் - இளைய்வளிடத்தில் • தேனும் பாலும் கலந்ததுபோல் இனிமையாய். அவள் - இளையவள். மாலாய் - ஆசை கொண்டவனுய். ஈனம் - இழிவு. ஊனுக்கு உயிரும், பூமிக்கும் வானுக்கும் பயிரும் ஆகிய அழகர் என்க ; 'பாரதனிற் பயிரானுன் காண்' என்பது திருத்தாண்டகம். உதவும் பள் - பயிர்த்தொழில் செய்வதற்கான பள்ளன். அவன் இனிப் பதனம் - அவன் விஷயத்தில் இனி ஜாக்கிரதையா யிருக்க வேண்டும் என்பது கருத்து.

அஅ. சொம் - சொத்து ; அழகர் பணிணைக்கு மாறு செய்கிறுன் என்பது கருத்து.

ஏருக்குள் மாடும் - முந்தின
கீரருக்குள் சூடும் - தன்கிளை
எவருக்கும் பொதுவாம் - ஆட்கொள்ளும்
அவருக்கும் அதுவாம்
பாருக்குள் மறைத்தான் - பணம் பல
பேருக்கும் இறைத்தான் - மெத்தவும்
பைத்தியந் தொடுத்தான் - சவுக்கினில்
வைத்திடா ராண்டே. அஅ

ஆனைக் குட்டியைப் போல் - எருமையை
ஞானிச் செட்டி கைக்கே - பணம் பதி
னஞ்சுக்குக் கொடுத்தான் - கொழுந்தியார்
குஞ்சுக்கிட் டெடுத்தான்
மீனைக் கொண் டளிப்பான் - கருவாட்
டூனைக் கொண் டொளிப்பான் - நான் சொன்னல்
வீம்புகள் அடிப்பான் - அவள் சொன்னல்
பாம்பையும் பிடிப்பான்
கோனைக் கண்டவனே - கோன் தலைப்
பேனைக் கண்டவனே - போய் அவள்
குச்சினில் வீழ்ந்தான் - வயல் எரு
வைச்சினி வாழ்ந்தான்

அஅ. கார் - கார்ப் பயிர். சூடு - நெற்கதிர். மாடும் நெல்லும் தன் கிளையாகிய இளையவள் சுற்றத்தார் எல்லோருக்கும் உரியது, தன்னை ஆட்கொள்ளும் மற்ற பள்ளியருக்கும் உரியது எனப் பள்ளன் சொல்லுகிறான் என்பது கருத்து. சவுக்கு - காவற்கூடம்.

அக. ஞானிச் செட்டி - ஞானிச் செட்டி என்பவன். குஞ்சுக்கு இட்டெடுத்தான் - பெண்ணுக்குச் சீர்வரிசைகள் செய்தான். கோன் - இடையன். குச்சு - குடிசை. வைச்சு - வைத்து.

பூனைக் குட்டியைப் போல் - பதுங்கிச் சொல்
மோனைக் கட்டுடனே - அவன் முழுப்
பொய்கொண்டு வருவான் - சிக்கென
வையுங்கா ணுண்டே. அக

ஏச்சுக்குப் பிறந்தான் - வரவரக்
கூச்சத்தை மறந்தான் - இளையவள்
இளமையைக் குறித்தான் - முதிருமென்
வளமையைப் பறித்தான்
நீச்சுக்கு மேலே - நிலைப்பென்ன
பேச்சுக் கையாலே - உழச் சற்றே
நினைப்பதுமில்லை - ஏனைத் தேடிக்
கனைப்பது மில்லை
தீச்சுட்ட தாறும் - பழித்திடும்
நாச்சுட்ட தேறும் - அவனை முன்
சியென்று போட்டேன் - நான் இனி
வாயொன்றுங் காட்டேன்
பேச்சிட்டுப் பாரும் - மரக்கணு
வாச்சிக்குத் தீரும் - பயப்படப்
பிடித்தது பிடியாய்க் - குட்டையில்
அடித்திடு மாண்டே. கூ

அக. சொல் மோனைக் கட்டு - அலங்காரமான பேச்சு. சிக்கென - விரைவில்.

கூ. ஏச்சு - பழிச்சொல். தீச்சுட்டதாறும், நாச்சுட்ட தேறும் : 'தியினற் சுட்ட புண் உள்ளாறும் ஆறுதே, நாவினற் சுட்ட வடு' - குறள். மரக்கணுவை வாச்சியினுல்தான் சேதிக்க முடியும். குட்டை - தொழு.

பள்ளன் வரவு

கலிப்பா

கத்தர்திரு முக்கூடல் கண்ணர்பண்ணை யாண்டவர்முன்
சித்தமுற மூத்தபள்ளி செப்பிமறைந் தேகியபின் [எரு
பொய்த்தமொழி பேசிமுதற் போனபள்ளன் மீண்டும்
வைத்துவய லுற்று வருவதுபோல் வந்தானே. கூக

பள்ளன் நிலவகை கூறுதல்

சிந்து

மூரிச் சீவலப்
பேரித் தண்ணீர்பாய் - கண்ணு முன
வாசவன் தொழும் அழகர் பேருள்ள
கேசவன் திருத்தும்
சாரிற் பயிரிட்
டூருக் கதிகமாய்க் - கதலி வாழை
காய்த்த வயலுங் கீர்த்தி சேர்நயி
னூத்தையார் திருத்தும்
சாரற் கறுக்கும்
ஈரத் தூற்றலாம் - நாற்றுப் புரவும்
சன்னை வெட்டியான் வாய்க்கால் போக்கும்
வன்னி யடித்திட்டும்

கூக. கத்தர் - கர்த்தர்.

கூஉ. சீவலப்பேரி, வீர பாண்டியப்பேரி - முறையே ஸ்ரீ வல்லபனாலும் வீர பாண்டியனாலும் கட்டப்பெற்ற ஏரிகள். வாசவன் - இந்திரன். கேசவன் திருத்து முதலியன நிலங்களின் பெயர்கள். கார் - கார் நெல் பயிரிடுங் காலம். கதலி வாழை - ஒரு நெல் வகை. நாற்றுப் புரவு - நாற்றங் கால். திருத்து, புரவு, பற்று, பகுதி, தடி, கட்டளை முதலியன வயல்களின் பொதுப் பெயர்கள். வன்னி யடித்திட்டு - வன்னி மரத்தடியிலுள்ள மேட்டு வயல்.

கோரைக் குண்டோடை
யோரத்திற் புரவும் - பார்வை யான
குத்துக் கல்லும் குளத்துப் பற்றும்
முத்தன் பகுதியும்
வீரப் பாண்டியப்
பேரிப் பாய்ச்சலும் - நாச்சி யார்திரு
விடையாட் டமுஞ்சுமை தாங்கி வட்டமும்
கடைபத்தித் தடியும்
பாரத் தென்மரு
தூரிற் பண்ணைக்கே - யழக ராச்சிப்
படைக்குத் தெற்கு வீடக்குக் குளங்கல்
மடைக்கு முள்பற்றும்
வாரத் துடையான்
ஏரிக் கட்டளையும் - வட்ட மாமொரு
வர்க்கத்தி லாந்தைக் குளமுந் தோணி
நிற்குந் துறைச் சுற்றும்
சேரச் செய்பல
பேரிட் டுள்ள தெல்லாம் - எருவைத் தேயின்று
திரும்பினே னின்னந் தேவரீர் ஏவல்
விரும்பினே னுண்டே. கூஉ

பள்ளனைத் தொழுவில் அடித்தல்

கலிப்பா

எந்தைதிரு முக்கூடல் ஏரியில்நீ ஆடுவைத்துத்
தந்தவித மோமருதூர்ச் சங்காத்தி வீட்டுறக்கம்

கூஉ. கோரைக் குண்டு - கோரையடர்ந்த வயல் ; குண்டு - சிறு வயல். திருவிடையாட்டம் - தேவஸ்தானங்களுக்கு விடப் படும் மானியம் ; 'திருவிடை யாட்டமாக இறையிழிச்சிக் கொடுத்தோம்' என்பது சாசனம். கடை - கடைசியிலுள்ள. வாரத்துடையான் ஏரிக் கட்டளை : இந்த ஏரியின் நீர்ப்பாச னத்துக்குட்பட்ட நிலம்.

கூங. சங்காத்தி : சங்காத்தம் - சிநேகம்.

சிந்தைதொட்டுப் பாரெனக்கண் சிவந்துபண்ணைக் காரனங்கே
வந்துபள்ளன் தன்காலில் மரக்குட்டை சேர்த்தானே. கூஎ

இளைய பள்ளி வருந்தல்

சிந்து

பழிகாரி முக்கூடற் பள்ளி - சரடு செய்த
பள்ள னென்றுமுகம் பாராமல்
வழியே போகுங் களவெல்லாம் - தலையின்மேல்
வலித்திட்டுப் பற்றுக் குறித்தாள்
கொழிய லரிசி யிட்டா லுங் - குப்பை கிண்டும்
கோழி என்பதைப் புதுக்கினாள்
அழியாத காசழியுமோ நான் - ஏது செய்வேன்
அழகர் திருநாமப் பள்ளா. கூசு

பள்ளன் தேற்றுதல்

மூடுகவா ராசிய முண்டு - குண்டுணிக்காரி
மூத்தபள்ளி பார்க்க வருவாள்
நடுவே தெய்வஞ் சோதிச்சுதையோ - பண்ணை
நயினார்க்குஞ் செவிகண் ணைச்சே
கடுகநீ போய்விடு சும்மா - சகதியிலே
கல்லெறிந்த கதை யாக்காதே
வடுவந்தால் மறைக்கப் போமோ - வருவதெல்லாம்
வந்துதீரும் மருதூர்ப் பள்ளி. கூடு

கூசு. சரடு செய்த பள்ளன் - தாலி கட்டிய புருஷன். கொழியல் அரிசி - தீட்டாத அரிசி ; சத்துள்ள உணவு என்பது கருத்து. அழியாத காசு அழியுமோ - செல்லாத காசு செல்லுமோ. அழகர் திருநாமப் பள்ளா : அழகர் பெயரைத் தரித்த பள்ளன் ; வடிவழகக் குடும்பன் என்பது.

கூடு. முடுக - விரைவாக. ராசியம் - ரகசியம். குண்டுணிக்காரி - கோள் சொல்லுகிறவள். நயினார் - எசமானன். வடு - இழிவு.

மூத்தபள்ளி சோறு கொண்டு வருதல்

எங்கே கிடக்கிறான் பள்ளன் - நயினரே
ஏறு விண்ணப்ப மொன்றுண்டு
செங்கான் எனக்கு மூத்தவன் - ஏதுக்கோ
தெய்வத்துக் காக்கிவைத் தானும்
அங்கே யிருந்து சட்டியில் - கறியுஞ் சோறும்
அனுப்பினன் நான்தனித் துண்பேனே
உங்கள் அடியா னுக்குநான் - கொடுத்துப் பார்த்தால்
உண்பானே உண்ணானே ஆண்டே. கூசு

கலிப்பா

தாரமிரண் டானலுந் தன்கணவன் வாஞ்சையினல்
வாரமுடன் முக்கூடல் வந்தபள்ளி தந்திரமாய்க்
காரணம்வே றொன்றுபண்ணிக் காரனுக்குச் சொல்லிமனச்
சோரமுடன் பள்ளனுக்குச் சோறுகொண்டு வந்தாளே.

பள்ளனிடத்துச் சொல்லுதல்

சிந்து

மருந்துக் கள்ளி மருதூரிற் பள்ளி
வடகரை விட்டு வந்த பிறகு
திருந்தப் பேசின வார்த்தையுங் கேளாய்நான்
தெற்கே பார்த்தால் வடக்கேநீ பார்ப்பாய்

கூசு. மூத்த பள்ளி, தன் முன்னவனை செங்கான் என்பவன் தெய்வத்துக்குப் படைத்து அனுப்பிய சோற்றைப் பள்ளனுக்குக் கொடுக்க எடுத்துவருகிறாள்.

கூஎ. வாரம் - அன்பு. சோரம் - கள்ளம்.

பருந்தாட்டங் கொண்டு கொப்பத்தில் ஆனை
பட்டாப்போல் அகப் பட்டாய் மரத்தில்
பெரும்தத் தன்னை தன்னைச்சுற் றும்விதி
பொய்க்குமோ சொல்லாய் மூக்கூடற் பள்ளா.

பள்ளன் வேண்டல்

மிஞ்சிப் போனதை ஏன்சொல்ல வேணும்
விருந்து விட்டபின் வெட்டினு ருண்டோ
கொஞ்சப் பேச்சுகள் சொல்லாதே வாய்த்தண்ணீர்
குடித்தா லுங்கொப் புளித்தாலும் ஆமே
பஞ்சில் பற்றும் நெருப்புப்போல் நெஞ்சில்
பழம்பகை யின்னும் பற்றவை யாதே
கெஞ்சிப் பண்ணை நயினரை மன்னிப்புக்
கேட்டுப் பாரடி மூக்கூடற் பள்ளி. கூகூ

மூத்த பள்ளி கூறுதல்

மூட்டி விட்டுக் குனியும் பழங்கதை
மூத லிக்கிறாய் பேதலித்துப் போய்
கெட்டி கெட்டி இளையவள் சொல்லல்லாற்
கிழட்டுப் பள்ளிசொல் பண்ணையார்க் காமோ

கூஅ. பருந்தாட்டம் - பெருந்துன்பம். கொப்பம் - யானை பிடிப்பதற்கு வெட்டிய பெருங்குழி.

கூகூ. விருந்தாகக் கொண்டோருக்குத் தீமை செய்வாருண்டோ? என்பது பொருள். கொஞ்சப் பேச்சு - சிறுமைத் தனமான வார்த்தை. வாய்த் தண்ணீர்...ஆமே - தீமை சிறிது செய்யினும் அதிகம் செய்யினும், தீமை தீமையே. பஞ்சில் பற்றும் நெருப்புப்போல் - பஞ்சிலே பிடித்த நெருப்பு வெளியே தெரியாமல் உள்ளேயே கனிந்து பஞ்சு முழுவதையும் எரித்துவிடுவதுபோல.

கஅ0. மூதலிக்கிறாய் - மெய்ப்பிக்கிறாய். பேதலித்து - சிந்தை திகைத்து. கெட்டி கெட்டி - இகழ்ச்சிக் குறிப்பு, நன்று நன்று என.

கட்டிநான் பேசப் போமோ அரண்மனைக்
காரியம் என்தன் கைக்குள்ளே யுண்டோ
வட்டிலுக்குள் வாய் வைத்ததெல்லாந் துறை
வடிவழகர் திருநாமப் பள்ளரு. கoo

பள்ளன் வேண்டல்

பக்குவஞ் சொல்ல நீதியோ நானிந்தப்
பாடு பட்டும் இனியறி யேனே
சக்க ளத்தி அவளென் றுனக்குச்
சரிசொன்னல் அந்தத் தாழ்ச்சி யுனக்கே
மக்க ளாணைஎன் ஞாணை உன் ஞாணை நீ
வார்த்த கஞ்சி குடித்துக் கிடப்பேன்
விக்கல்வாய்ப் பண்ணை யாண்டையைக் கேட்டென்னை
மீட்டுக் கொள்ளடி முக்கூடற் பள்ளி. கoக

மூத்த பள்ளி பண்ணைக்காரனை வேண்டல்

கலிப்பா

சத்தியமாய்ச் சொன்னபள்ளன் சற்றுமனங் கோணுமல்
புத்திசொல்லி உன்சிறைநான் போய்மீட்பன் என்றெ
முத்திதரு மாலழகர் முக்கூடல் மூத்தபள்ளி [மூந்து
அத்திசையில் நின்றுபண்ணை யாண்டவர்முன் சென்றாளே.

கoo. கட்டி - புனைந்து. அரண்மனைக் காரியம் - பண்ணையார் வீட்டுக் காரியம்.

கoக. பக்குவம் - புத்தி. மீட்டுக்கொள் - தொழுவிலிருந்து விடுவி.

சிந்து

ஐயா பராக்குப் பராக் கும்மைக் கும்பிட்டேன்
ஆண்டே - உம்மை
யல்லவோ தேடி அடியாள் இங்கே வந்தேன்
ஆண்டே
கையாரக் கண்ட களவும் பொறுப்பீரே
ஆண்டே - பள்ளன்
காவலைக் கண்ணுலே பார்க்கப் படாதுகாண்
ஆண்டே. கoங

தன்மத்துக் கிந்தப் பிழையைப் பொறும் எங்கள்
ஆண்டே - முலை
சாய்ந்தால் வயிறல்லோ தாங்க வேணும் பண்ணை
ஆண்டே
வன்மத்தைப் பார்த்தால் அவன் இலக் கல்லவே
ஆண்டே - தென்
மருதூரிற் பள்ளியால் வந்த பொல் லாப்புக்காண்
ஆண்டே. கoச

ஆடிக் காலாவதி வெள்ளாமை நாள் ஆச்சே
ஆண்டே - பள்ளன்
அல்லாம லேபயிர் ஆரிடுவார் பண்ணை
ஆண்டே

கoங. பராக்கு - கவனம் என்ற பொருளில் வழங்கும் குறிப்புச்சொல். காவல் - தொழுமரத்தில் மாட்டிக் கிடத்தல். பார்க்கப்படாது - பார்க்க முடியவில்லை.

கoச. இலக்கு - எதிரி.

கoடு. ஆடிக் காலாவதி - ஆடிமாதத்திலே முறைப்படிப் பயிர் செய்யவேண்டிய காலம் கடந்து போகிறது என்ற குறிப்பு.

தேடியிடும் பள்ளு பிள்ளைக்கிணை கண்டீர்
ஆண்டே - இனித்
தேவரீர் சித்தம்என் பாக்கியம் காண் பண்ணை
ஆண்டே. கo டு

சட்டம் மேல்சட்டம் பிழைத்தாலும் பெண்பிள்ளை
ஆண்டே - பொல்லாத்
தண்ணீர் குடித்த வெறியால் முதல் சொன்னேன்
ஆண்டே
கட்டளை யிட்டபடி புத்தி கேட்பன்காண்
ஆண்டே - பள்ளன்
கால்மரம் வெட்டி விடுவிக்க வேணுங்காண்
ஆண்டே. கo சு

பள்ளனை விடுவிக்க அவன் கணக்குச் சொல்லுதல்

கலிப்பா

மூத்தபள்ளி சொற்படியே முக்கூடற் பள்ளனைக்கால்
சேர்த்தமர முங்கழற்றிச் செய்வரிசை செய்தபின்பு
காத்திருந்து பின்னுமவன் கண்ணார்பண்ணை யாண்டவர்முன்
வாய்த்தவிதை வர்க்கமுடன் மாட்டுவகை சொன்னானே.

கo டு. பள்ளு பிள்ளைக் கிணை - பள்ளன் சிறு பிள்ளை போன்றவன்.

கo சு. எத்தனை பிழைகள் செய்த போதிலும், பெண் பிள்ளையானமையால் பொறுக்க வேண்டும் என்பது பொருள். பொல்லாத் தண்ணீர் - கள். கால் மரம் - கூலில் மாட்டிய குட்டை.

வித்து வகை

சிந்து

சித்திரக் காலிவாலான் சிறைமீட்டான் மணல்வாரி
செஞ்சம்பா கருஞ்சூரை சீரகச் சம்பா
முத்து விளங்கிமலி முண்டன்பொற் பாளைநெடு
மூக்கன் அரிக்கிராவி மூங்கிற் சம்பா
கத்தூரி வாணன்காடைக் கழுத்தன் இரங்கல்மீட்டான்
கல்லுண்டைப் பூம்பாளைபாற் கடுக்கன்வெள்ளை
புத்தன் கருங்குறுவை புனுகுச்சம் பாவும்இரு
பூவுக்கும் விதைசேரிற் போட்டே ணுண்டே. கoஅ

மாட்டு வகை

குடைக்கொம்பன் செம்மறையன் குத்துக்குளம்பன்
குடைச்செவியன் குற்றுலன் கூடுகொம்பன் [மேழை
வடக்குப்புல்லைக் கரும்போரான் மயிலைக் கழற்சிக் கண்
மட்டைக்கொம்பன் கறுப்பன் மஞ்சள்வாலன் [ணன்
படைப்புப் பிடுங்கி கொட்டைப் பாக்கன் கருமறையன்
பசுக்காத்தான் அணிற்காலன் படலைக்கொம்பன்
விடர்த்தலைப் பூநிறத்தான் வெள்ளைக் காளையும் இந்த
விதத்திலுண் டாயிரந்தான் மெய்கா ணுண்டே. கoகூ

கoஅ. சித்திரக்காலி முதல் புனுகுச்சம்பா வரை நெல் வகைகள். பூ - போகம். சேர் - நெல்லைச் சேமித்து வைப்பதற் காக வைக்கோற் புரியால் கட்டப்படுவது.

கoகூ. குடைக் கொம்பன் முதல் வெள்ளைக் காளை வரை யில் மாடுகளின் பெயர்கள். குடைக் கொம்பன் - வளைந்த கொம்புடையது. செம்மறையன் - சிவந்த கறையுடையது. கூடு - நுனிகூடிய. புல்லை, மயிலை - புல்லை, மயிலை நிறமுடை யவை. குற்றுலன் - குற்றுலத்திலிருந்து வந்தது. கழற்சிக் கண் ணன் - கழற்சிக்காய் போன்ற கண்ணுடையது. மட்டை - பட்டையான. கரும்மறையன் - கரிய கறையுடையது. படலை - பரந்த.

ஏர்க்கால் வகை

தயரத ராமரான தாமரைக் கண்ணழகர்
தனுவாங்கி மரமேழும் சாய்த்த நாளில்
கயமர மொன்றுவளைக் கையொன்று நுகமொன்று
கழுந்தேர்க்கா லொன்றுசிறு கைக்கோல் ஒன்று
வயலுழுங் குத்தியொன்று வளைமேழி ஒன்றிந்த
வகையேழும் அந்த எழு மரத்தால் செய்தே
இயல்பாய்ப் பதனம்பண்ணி இருப்பதுண் டத்தனையும்
எண்ணி அறியவல்லார் எவர்கா ணுண்டே. கக0

இலங்கா புரியில்முன்னுள் எங்கள் அழகருடன்
எதிர்த்த ராவணன்மகன் இந்திர சித்து
கலங்கவே வந்தசிறைக் கருடனைக் கண்டு கட்டுக்
கழன்ற பாச வடக்கயி றாயிரம்

கக0. தயரத ராமர் - தசரத புத்திரரான இராமர். தனு வாங்கி - வில்லை வளைத்து. மரமேழும் சாய்த்த நாள் - தன் பராக்கிரமத்தைச் சுக்கிரீவனுக்குக் காட்டவேண்டி ஒரே கணை யால் ஏழு மராமரங்களையும் துளைத்த நாள். கயமரம் - கீச மரம், பரம்புச் சட்டம்; வளைக்கை - கடைமுளை; நுகம் - நுகத்தடி, நோக்கால்; கழுந்து ஏர்க்கால் - திரண்ட நுனி யுடைய ஏர்க்கால்; ஏர்க்கால் - கலப்பை, வண்டி முதலியவற் றில் நுகத்தைப் பொருத்தும் பாகம்; சிறு கைக் கோல் - சாட் டைக் கழி; குத்தி - பாரை: பெரும்பாலும் இது இரும்பாலா னது; வளை மேழி - கலப்பையின் அடிப்புறத்தில் வளைவா யுள்ள உறுப்பு; இராமர் துளைத்த ஏழு மராமரங்களையுங் கொண்டு இவ்வேழு கருவிகளையும் அமைத்துக்கொண்டதாகப் பள்ளன் சொல்லுகிறான். பதனம் பண்ணி - பத்திரப் படுத்தி.

ககக. இராமனையும் இலக்குவனையும் இந்திரசித்து நாக பாசத்தால் பிணிக்க, அப்போது அங்குவந்த கருடனைக் கண்டு நாகபாசம் கழன்றோடிய வரலாறு இங்கு குறிப்பிடப்படு கிறது; அந்த நாகபாசத்தால் செய்த வடக்கயிறுகள் ஆயிர முண்டு எனப் பள்ளன் கூறுகிறான். வடக்கயிறு - ஏர்க்காலை யும் நுகத்தையும் பிணைக்க உபயோகிக்கப்படுவது; உறுதியா யிருப்பதற்காகத் தோல் அல்லது நரம்பால் செய்யப்பெறும்.

குழங்க ளுடன்மடிந்த கொலைவாள் அரக்கர் வேலும்
கூர்வாளும் சேர்த்தடித்த கொழுவா யிரம்
மலங்காமல் இந்தப்படி வகையெல்லாங் தேடிவைத்தேன்
வயலிலே நாளேரிட வாரீ ராண்டே. ககக

முகூர்த்தம் பார்த்தல்

கலிப்பா

ஏரும் பலவிதையும் ஏர்க்கால் முதலாகச்
சீரும்அழ கக்குடும்பன் செய்திபெறச் சொல்லியபின்
ஆரும் பரவும் அழகர்பண்ணை யான்கேள்வி
கூரும் முகிழ்த்தம் குடும்பனுடன் சொன்னனே. ககஉ

சிந்து

சத்தமி புதன் சோதி தைதுலக் கரணம்
தவறுத சுபயோகந் தருபஞ் சாங்கம்
மெத்தநன் றெனப்பார்த்து மேலான வேதியர்கள்
மிக்கதுலா முகிழ்த்தம் விதித்தா ரின்று
பத்தர்பணி முக்கூடல் பரமனர் அழகர்தம்
பண்ணைக்கே ரிடவேணும் பள்ளா என்றே
உத்தாரம் பண்ணைக்காரன் உரைத்தான் உரையைக்கேட்ட
உடனேகுடும்பன் ஏர்கொண் டுழச்சென்றனே.

ககக. நாளேரிடுதல் - நல்ல நாளில் ஏர் பூட்டி யுழத் தொடங்குதல்; பொன்னேர் பூட்டுதல் என்பதும் இது.

ககஉ. முகிழ்த்தம் - முகூர்த்தம்.

ககங. சத்தமி, புதன், சோதி, தைதுலை, சுபயோகம் திதி, வாரம், நட்சத்திரம், கரணம், யோகம் ஆகிய பஞ்ச அங்கங்கள். சோதி - சுவாதி. துலா முகிழ்த்தம்-துலா லக்னம்.

பள்ளர் உழச் செல்லுதல்

சாத்தன் பெரியான் கொன்னைத் தாண்டி அரியான்
சடையான் உடையான் கட்டைச் சங்கன் புங்கன்
போத்தன் அருதன் கோணப் பூவன் மருதன்
பூலான் வயித்தி வேலான் புலியன் கலியன்
காத்தன் வெருகன் கப்புக் காலன் முருகன்
கண்டன் கறுத்த முண்டன் கங்கன் சிங்கன்
கூத்தன் முதலா யுள்ள பள்ள ரெல்லாம்
குரவையிட் டேரைப் பூட்டிக் கூடி யுழுதார். ககச

பள்ளனை மாடு முட்டல்

பூட்டுங் காளையை விட்டுப் பூட்டாக் காளையைப்
பூட்டும் பொழுதிலொரு புல்லைக் காளை
மோட்டு வரால் குதிக்க முகத்தை மாறி
முடுக்கி மறிக்கும் ஆளை முட்டி யோட
மாட்டுக் குறும்படங்க மறிப்ப னெனவே
வடிவழகக் குடும்பன் வந்து மறித்தான்
கோட்டு முனையாலது குத்து மளவில்
குடும்பன் சற்றேமயக்கங் கொண்டு விழுந்தான்.

பள்ளியர் வரவு

கலிப்பா

துள்ளியெழுங் காளை தொடர்ந்துபள்ள னைப்பாய்ந்து
தள்ளிவிடும் சோர்வுகண்டு சற்றுந் தரியாமல்

ககச. சாத்தன் முதல் கூத்தன் வரையில் பள்ளர் பெயர்கள்.

ககடு. புல்லை - மங்கிய மஞ்சள் நிறம். கோட்டு முனை - கொம்பு நுனி.

புள்ளின்கடை வாய்கிழித்த புங்கவனூர் முக்கூடல்
பள்ளிவரத் தென்மருதூர்ப் பள்ளியும்வந் துற்றுளே.

மூத்த பள்ளி வருந்தல்

சிந்து

மதயானை முதற்பிடிக்க வல்லாய் - இந்த மாட்டுக்கு
மாட்டாமல் போனதென்ன சொல்லாய்
கதையோமுன் மலைகளையும் முறித்தாய் - அந்தபலம்
கண்டிலனென் றேமுடி மறித்தாய்
சதுர்வேதன் விதித்ததலைப் பொறியோ - மருதூர்ச்
சக்களத்தி புலைமருந்தின் வெறியோ
முதலோ தார்வினைத்த இடும்போ - தெரிந்திலேன்
முக்கூடல் அழகர்பண்ணைக் குடும்பா. ககள

இளைய பள்ளி வருந்தல்

வடுப்படா மேனிவடுப் படுமோ - நன்றுநன்றென்
வல்லாளன் சமர்த்தும் போய் விடுமோ
தடுத்துநீ ஏன்மாட்டைத் தொடர்ந்தாய் - முக்கூடல்
சதுரிபார்த்துச் சிரிக்கவோ கிடந்தாய்
அடுத்திதுவும் உனக்குவர முறையோ - மலையின்மேல்
ஐயாபூ லாவுடையார் குறையோ
படுத்திடை எழுந்திருந்து கொள்ளாய் - வடிவழகர்
பாதம்மற வாதபண்ணைக் குடும்பா. ககஅ

ககசு. புள்ளின் கடைவாய் கிழித்த புங்கவனூர் : கஉ - ம் பாட்டின் அடிக்குறிப்பு பார்க்க.

ககள. மாட்டாமல் - வலியாற்றுமல். சதுர்வேதன் - பிரமன்.

ககஅ. சதுரி : சதுர் - சாமர்த்தியம். பூலாவுடையார் : ஒரு காவல் தேவதை ; இதன் கோயில் மலைமேலே இருந்ததெனத் தெரிகிறது.

பள்ளன் எழுந்து வேலை செய்தல்

கலிப்பா

ஏங்கியிரு பள்ளியரும் இவ்வா றிரங்கிநிற்கும்
தேங்குதலை வார்த்தை செவியிற் புகுதலுமே
தாங்குதுயர் நீங்கித் தலையசைத்துத் தோள்குலுக்கிப்
பாங்கினெடு முக்கூடற் பள்ள னெழுந்தானே. ககக

சிந்து

பள்ளன் எழுந்துநிலை தரித்தான் - நின்ற
பள்ளியர் முகம்பார்த்துச் சிரித்தான்
மெள்ளப் புருவங்கோட்டி நெரித்தான் - மாட்டை
மீளவும் பூட்டியுழத் தரித்தான். கஉ0

உழுத உழவைக்கண்டு களித்தான் - பள்ளர்
உள்ள பேரைஎல்லாம் விளித்தான்
தொழுது தெய்வக்கடன் கழித்தான் - அந்தத்
தொளியில் விதைகள்எல்லாந் தெளித்தான். கஉக

முளைக்குத் தண்ணீரைஅடைத் திட்டான் - கொல்லை
முழுதும் மறுநாள்வெட்டி விட்டான்
வளைத்து வேலிசூழ நட்டான் - நாற்று
வளர்க்க நாளும்ஓருப் பட்டான். கஉஉ

வளர்ந்த நாற்றைமுகங் கண்டான் - சேரி
மள்ளர் கூடமது வுண்டான்
அளந்தி டாமகிழ்ச்சி கொண்டான் - பண்ணை
ஆண்டையைப்போ யந்தச்சேதி விண்டான். கஉந

கஉ0. கோட்டி - வளைத்து.
கஉக. தொளி - சேறு, வயல்.
கஉஉ. முளை - முளைத்துவரும் நாற்று.

கலிப்பா

நாற்றுத் தொழுவயழகர் நாட்டிற் பழனமெல்லாம்
ஏற்றும் பயிர்தருநாற் றின்றுநட வேணுமென்றே
தேறும் படியறிக்கை செய்துபண்ணை யாண்டவனூர்
கூறும் பணிதலைமேல் கொண்டுபள்ளன் மீண்டானே.

நாற்றுப் பறித்தல்

சிந்து

மூந்தித் தரிசை யடித்து மறுத்து
முச்சா லடித்திட் டுழவு நாலும்
முழுதும் உழுது திருந்தப் பரம்பு
மூன்றுந் தடவியே
அந்தத் தொளிக்குச் சமைந்த நாற்றை
அடுத்த வயலில் பிடுங்கி வேறே
அடுக்கி முடிந்து வட்ட வட்டங்க
ளாய்க்கு வித்தபின்
வந்தித் தழகர் பதத்தைத் துதித்து
வைத்த நாற்றை எடுத்து நெற்றியில்
வைத்து நாலு திசையும் நோக்கி
வாழ்த்திக் கும்பிட்டே

கூஉச. நாறும் தழாய் - மணம் வீசுகின்ற துளவ மாலை. ஏறும் - செழிக்கின்ற.

கஉடு. மறுத்தும் முச்சால் அடித்து - மீண்டும் மும்முறை மடக்கி உழுது. நாற்றை நெற்றியில் வைத்துக் கும்பிட்டு : முதன் முதலில் நாற்றைப் பிடுங்கி நடும்பொழுது, பள்ளர் நாற்று முடியை நெற்றியில் வைத்துத் தெய்வத்தை நினைத்து பயிர் செழிக்கவேண்டுமெனப் பிரார்த்தித்துப் பின்னர் நடவு தொடங்குதல் வழக்கம்.

பந்திப் படுத்தி நிரையை வகுத்துப்
பரவை யொலிபோல் குரவை யெழுப்பி
பயிர்நெருங் காமல் கலந்து போகாமல்
பதியும் பள்ளீரே. கஉடு

பள்ளியர் வகை

சின்னி குருந்தி அருதி மருதி
செல்லி இருவி எல்லி கலிச்சி
திருவி அணைஞ்சி வெழுதி பெரிச்சி
செம்பி வம்பி தம்பிச்சாள்
நன்னி உடைச்சி சடைச்சி குமுக்கி
நல்லி பூலி ஆலி வேலி
நாச்சி பேச்சி சுந்தி எழுவி
நாகி போகிலாள்
பொன்னி அழகி நூவி சேவி
பூவி சாத்தி காத்தி அம்மச்சி
பூமி காமி வேம்பி கரும்பி
புலிச்சி அங்காளி
கன்னி பொதுவி அன்னம் பாலி
கள்ளி யுங்கலந் தொருவர்க் கொருவர்
கைவி ரசலாய் நடுகைச் சமீர்த்தைக்
காட்டும் பள்ளீரே. கஉசு

கஉடு. பந்திப் படுத்தி - வரிசையாக அமைத்து. பரவை ஒலி - கடலொலி. குரவை - நடுவோர் பாடும் பாட்டு. பதியும் - நடும்.

கஉசு. சின்னி முதல் கள்ளி வரை பள்ளியர் பெயர். கைவிரசலாய் - வேகமாயும் சாமர்த்தியமாயும்.

நடுகை

கலிப்பா

தூற்றுக்கால் பூந்துளவத் தாரழகர் முக்கூடற்
சேற்றுக்கால் மள்ளருக்குத் தென்றற்கால் என்னுமோ
ஆற்றுக்கா லாட்டியருள் ஆட்டெழுங்கால் பண்ணைநடும்
நாற்றுக்கால் விட்டு நடுகைக்கால் ஏறுதே. கஉஎ

சிந்து

யடை கொண் டேவருங் கரனையும் - பொரு
விடயஞ் சேர்திரி சிரனையும்
பண்டு முடித்த கணையினர் - குகன்
கண்டு பிடித்த துணைவனர்
குடை குன்றுய்ப் பசுக் கிடைநின்றூர் - முக்
கூடலழகர் வயலுள்ளே
கொண்டாடிக் கொண்டு நடச்செய்தே - இன்று
கண்டோ மிதென்ன புதுமையோ
தொடையென்றுல் வாழைத் தண்டைப்போல் - விழிக்
கடையென்றுல் கணை ரெண்டைப்போல்
சொருக்கென்றுல் மேகப் படத்தைப் போல் - முலை
நெருக்கென்றுல் இணைக் குடத்தைப் போல்

கஉஎ. ஆற்றுக் காலாட்டியர் - மருதநிலப் பெண்டிர் (திவாகரம்); ஆற்றுக்கால் - ஆற்றிலிருந்து பிரிந்து வரும் வாய்க்கால்.

கஉஅ. கரன், திரிசிரன் - இலக்குவனுல் துன்புற்ற சூர்ப் பனகைக்குத் துணையாகப் படையோடு வந்து இராம லக்ஷ்மணர்மீது போர்தொடுத்த அரக்கர். முடித்த - கொன்ற. குடை குன்றுய் : கண்ணன் கோவர்த்தன கிரியைக் குடையாகத் தூக்கி, இந்திரன் பெய்வித்த கல்மாரியினின்றும் பசுக்களைக் காத்த வரலாறு. நடச்செய்தே - நடும்பொழுது. சொருக்கு - கொண்டை.

இடையென்றுல் வஞ்சிக் கொடியைப்போல் - வரும்
நடையென்றுல் இளம் பிடியைப்போல்
இருந்த சாயலுக் கிப்பால் - குருந்தி
திருந்தி னளடி பள்ளீரே. க உ அ

கடிக்கும் அரவில் நடிக்கும் இறைவர்
கஞ்சனுர்க் கொரு நஞ்சனுர்
கடையும் அமுதம் உடையுந் திரையிற்
காட்டி அண்டருக் கூட்டினுர்
அடிக்குள் அடங்கும் படிக்கு முதல்வர்
அழகர் முக்கூடல் வயலுள்ளே
ஆடிப் பாடி நாற்று முடியை
அலைத்துக் குலைத்து நடச்செய்தே
வடிக்கும் மதுவைக் குடிக்கும் ஆசை
மயக்கமும் பெருந் தியக்கமும்
வரம்பில் பாய்ந்து பரம்பில் சாய்ந்த
வாட்டமும் முகக் கோட்டமும்
துடிக்கும் இதழைக் கடிக்கும் எயிறும்
சோர்ந்து விரிந்த கூந்தலும்
தொடையும் நெகிழ்ந்த உடையும் கிடந்த
கிடையும் பாரும் பள்ளீரே. நஉ கூ

கஉ கூ. அரவில் நடிக்கும் - காளிங்க நர்த்தனம் செய்யும். கஞ்சனுர்க்கொரு நஞ்சு அன்னுர் - கம்சனுக்கு நஞ்சு போன்றவர். கடையும் அமுதம்...ஊட்டினுர் - பாற்கடல் கடைந்து அமுதத்தை அமரருக்குத் தந்தவர். அடிக்குள் அடங்கும் படிக்கு - மகாபலியிடம் நிலம் வேண்டித் திரிவிக்கிரமாவதாரம் எடுத்தபோது ஓரடியில் அடங்கிய பூலோகத்துக்கு. தியக்கம் - தேக்கம்.

புங்கவர் தமிழ்ச் சங்கம் மருவும்
புலமைத் தலைமை அழகனார்
பொருநை யாற்றணை பெருகுங்கால் - புனல்
பொருத மருதூர் வயலுள்ளே
தங்கள் வேலை நாற்றுக்கும் - பள்ளர்
அங்க லாய்க்குஞ் சோற்றுக்கும்
தாமதப் படவே மற்ற தொன்றைச்
சாட்டி மேட்டில் கூட்டமாய்
எங்குங் காப்பொலி பொங்கவே - அதற்
கெதிராய்ச் சங்கிலி அதிரவே
இலங்கு முலைகள் குலுங்கவே - காதில்
இசையும் பணிகள் அசையவே
அங்கும் இங்கும் செங்கை நீட்டி
அருதியுஞ் சின்ன மருதியும்
அரியாஞ்ங் கட்டைப் பெரியாளுங் - கும்மி
அடிப்பதைப் பாரும் பள்ளீரே. கஙo

வெள்ளானைக் கிறை போற்றுவார் - ஒரு
புள்ளாடற் கொடி ஏற்றுவார்
வேதம் பரவும் பாதர் வைகுண்டர்
வீரர் அழகர்முக் கூடலார்

கஙo. புங்கவர் - சிறந்தவர், கடவுள். சங்கீம் மருவும் அழகர் - தண்டாத சங்கத் தமிழழகர் (அக). அங்கலாய்க்கும் - பெரிதும் விரும்பும்.

கஙக. வெள்ளானைக்கு இறை-ஐராவதத்துக் கிறைவனான இந்திரன். புள்ளாடற் கொடி ஏற்றுவார் - கருடனைத் தனது வெற்றிக் கொடியாக வைத்த திருமால்.

உள்ளூர்ப் பண்ணை வயலுளே - தெற்கு
வெள்ளூர்ப் பள்ளி வெயிலியும்
உளக்குடிப் பள்ளி உடைச்சியும் - மேலக்
களக்குடிப் பள்ளி சலைச்சியும்
தள்ளாடிக் கொண்டு நடச்செய்தே - பள்ளர்
துள்ளாடிக் கூட்ட மிடச்செய்தே
தையலி மகள் பொய்யலி கிட்டச்
சாடிப் பெரியான் ஓடிப்போய்
கள்ளா லுற்றது மீறியே - நிலே
கொள்ளா மல்தடு மாறியே
காப்பைக் காட்டென்று கையைப் பிடிக்குங்
கோப்பைப் பாரும் பள்ளீரே. கஉக

சிறுகண் வேழ முறுவெந் துயரம்
தீர்த்து முன்னின்று காத்தவர்
திருமுக் கூடல் அழகர் - பழைய
திருவிளை யாட்டுப் புரவிலே
குறுவை யறுதா ளடியையும் - பள்ளன்
புரவி உழுத தடியையும்
குழப்பிப் பரம்பு தடவிக் - காலிட்
டுழப்பிச் சம்பா நடச்செய்தே
மறுகி மறுகிச் சருவக் குடும்பன்
மச்சினி கூழைப் பிச்சியை
வாவென் றுன்அவள் போவென்றுள் - இவன்
மறித்தான் அவள்பின் பிரித்துப்போய்

கஉக. வெள்ளூர், உளக்குடி, மேலக் களக்குடி : ஊர்களின் பெயர்கள். சாடி - விரைந்து. கோப்பு - உபாயம்.

கஉஉ. சிறுகண் வேழம் - கஜேந்திரன். திருவிளையாட்டுப் புரவு (திருவிடையாட்டப் புரவு ?) - ஒரு வயலின் பெயர். குறுவை - மூன்று மாதங்களில் பயிராகும் நெல்வகை. அறுதாளடி - குறுவை யறுத்த பின் சம்பா பயிரிடவேண்டிய நிலம். தடி - வயல்.

தறுகி அறுகங் கொடியிலே - அடி
தட்டி விழுந்த மட்டிலே
தலையைத் தாங்குரப் போலே - குத்து
முலையைத் தாங்குரன் பள்ளீரே. கநஉ

பத்துத் தலையும் அரக்கன் புயமும்
தத்தக் கணையொன் றேவிய
பருவப் புயலின் உருவத் தழகர்
பண்ணைக் கண்ணுறு நடச்செய்தே
முத்தக் குடும்பன் பெற்ற பொத்தாணி
மொண்டிச் சோரன் மாறனூர்
மூக்கி தமக்கை காக்கி கறுப்பி
மூவிக் கிளைய நூவிதன்
குத்து முலையும் முத்து நகையும்
குறிக்கிருன் அந்தச் சிறுக்கியும்
கூசிப் பார்க்கிருள் அதுக்கவன் மெள்ளப்
பேசிப் பார்க்கும் ஆசையால்
எத்தத் துணிந்து அதட்டிட் டவள்முன்
ஏர்க்காலை விட்டு நோக்காலை
எடுக்கிருப் போலே கிட்டக் கிட்டப்போய்
அடுக்கிருன் பாரும் பள்ளீரே. கநந

செழுத் திருப்பதந் தொழுந் தவத்தினர்
சித்த முருகி நித்தமும்
தேடி வருமுக் கூட லழகர்
சிற்றூற் றுக்கால் பற்றிலே

கநஉ. தறுகி - தடுக்கி.

கநந. அரக்கன் - இராவணன். பருவப் புயல் - கார் காலத்து மேகம். நோக்கால் - நுகக்கால் ; வாய்க்கால் என்றும் பாடம்.

கநச. சிற்றூற்றுக் கால் - சித்திரா நதியிலிருந்து வரும் வாய்க்கால்.

உழுந் தொழிற்படு பழந்தொளிப் புனல்
உடைச்சு முடங்கல் நடச்செய்தே
ஒண்டி வயிற்றுப் பண்டிப் பானை
தொண்டிக் கள்ளை மண்டியே
எழுந்த நெட்டையன் கழுந்து மொட்டையன்
இருவக் குடும்பன் மருமகன்
ஈச்சக் குடும்பன் பாச்சக் காலை
எட்டி முட்டித் தட்டியே
கொழுந்தி பக்கத்தில் விழுந்த துக்கவள்
கூடப் பிறந்த மாடன் போய்
கொண்டை யைப்பிடித் திழுக்கிறுன் வம்புச்
சண்டையைப் பாரும் பள்ளீரே. கஉச

பயிர் விளைவு

கலிப்பா

பாரின்அமு துண்ணப் பசிக்களிப்பார் நின்றநிலை
பேரினும்மென் மேலும் பெருகுதற்குச் சாட்சியென்றே
காரினுரு வச்சுருதி காரணர்முக் கூடல்வயல்
சீரின்நடு நாற்றுநடச் செய்யினில்நின் றேங்கியதே.

சிந்து

பதிந்த நடவுதேறிப் பசப்பு மேறிப்
பசந்து குருத்துமேன்மேற் பரந்து செறிந்து
முதிர்ந்த தமிழிசைக்கு முடியசைக்கும்
முதல்வ ரெனத்தழைத்து முதல்குழைந்தே

கஉச. முடங்கல் - மூலையிலுள்ள வயல். தொண்டிக் கள் - நெல்லாலாக்கின கள் : சிந்தாமணி, 1233 உரை: பாச்சக் கால் - பாய்ச்சற் கால்.

கஉடு. நின்ற நிலை பேரினும்-செல்வங் குறைந்து வறுமை எய்தினும்.

கஉசு. பதிந்த-நட்ட. பசப்பு-பசுமை. முதல்வர்-திருமால்.

பொதிந்த பொதியைநீட்டிப் பூட்டிக் காட்டி
பரப்போர்பொன் னிணங்குகை போல வணங்கி
ஏதிர்ந்த கதிர்மூலத்தே இடைபழுத்து
ஏற்ற விளைவுதோற்றுத் தோற்றியதே. கஉசு

முறுக விளைந்தவாறு முற்றுந் தேற்ற
முக்கூடற் பண்ணைக்காரன் முன்பு கூற
மறுபடி யவன்சொன்ன வகைநன் றென்ன
மள்ளர் பலரும்நாடி வயலிற் கூடி
உறுதெய்வ நிலைபோற்றி உரிமை சாற்றி
ஓங்குநாட் கதிர்கொய்தார் உவகை செய்தார்
நிறுவி நிறைதெரிந்தார் நெருங்கிக் கதிரரிந்தார்
நிரப்பி யரிகளெங்கும் பரப்பினரே. கஉள

கடிதிற்புரி முறுக்கிக்கதிர் கட்டி யிறுக்கிக்
கட்டின கட்டெடுப்பார் களத்தில் விடுப்பார்
நெடிதிற் சுமை கள்எடுப்பார் நிலைப்போர் வைப்பார்
நின்ற போரைச் சரிப்பார் நிலத்தில் விரிப்பார்
பிடியிற் பகடணைப்பார் பிணையிற் பிணைப்பார்
பிணையல் விடத்தொடுப்பார் பெற்றுக்கொடுப்பார்
பொடிவைக்கோ லெத்தவிர்ப்பார் பொலியைக் குவிப்பார்
பொலிதூற்றி யாற்றிப்பொலி பொலியென் றளப்பார்.

கஉசு. பொதி - கதிர்த் தொகுதி.

கஉள. நாட் கதிர் கொய்தல் - நல்ல நாளில் கதிரறுக்க ஆரம்பித்தல். அரி - அரிந்த கதிர்த் தொகுதி.

கஉஅ. பிணை - பல் மாடுகளை ஒரே வரிசையில் கட்டுவதற் கமைந்த தாம்பு. பொலி - தூற்றுத நெற்குவியல்.

தினச் சத்திரத்துக் கென்றும் பெரியநம்பி
திருமாளிகைக் கென்றுஞ்சில நெல்லுக்கொடுப்பார்
சனக் கட்டளை ஏழு திருப்பதிக்கும்
தலத்தார் படிக்குஞ்சில சாலியளப்பார்
மனத்துக் கினிய காவை வடமலேந்த்ரன்
மடத்துக்கு வேண்டுஞ் செந்நெல் வாரிக்குவிப்பார்
கனக்குஞ் சிறப்பமையக் கட்டியளப்பார்
கங்காணப் படிபண்ணைக் காரனுர் முன்னே. கஉசு

நெற்கணக்கு

கலிப்பா

வளந்தருதென் முக்கூடல் மாயவனுர் பண்ணையிலே
அளந்தபொலி இத்தனையென் றுதாய முஞ்செலவும்
களந்தனிலே நின்றுபண்ணைக் காரனுடனே குடும்பன்
உளந்தடுமா றுதவகை உள்ளபடி சொன்னனே. கசஅ

சிந்து

அளக்கும் பொலிக்கணக்கைப் பண்ணை
யாண்டே சொல்லக்கேளும் - பள்ளர்
வளர்க்கும் பல பெருஞ் சோலியில்
மறவாதிருஞ் சொன்னேன். கசக

கஉசு. சாலி - சாலிநெல். கட்டியளத்தல் - மரக்காலுக்கு மேலே நெல்லைக் குவித்துக் கைகளை வளைத்துப் பிடித்து அளத்தல். கங்காணம் - கண்காணம் ; பயிர் செய்வதற்குரிய ஒப்பந்தம்.

கசக. பொலிக்கணக்கு - தூற்றிச் சுத்தம் பண்ணின நெல்லின் கணக்கு. சோலி - வேலை மிகுதி.

ஆடித் திருநா ளுக்கு நெல்
ஆ[ரு]யிரங் கோட்டை - நெட்டைத்
தாடிப் பிச்சன் வகையில் நேருஞ்
சம்பாநெல் லளந்தேன். கசஉ

வருபங்குனித் திருநாள் படி
வகைக்காயிரங் கோட்டை - சின்னத்
திருவன் பயிரிடும் புள்ளியிற்
செந்தாழைநெல் லளந்தேன். கசஙு

சிற்ருற் றணைக் கல்லுக் கட்டச்
செலவாயிரங் கோட்டை - பண்ணைப்
பெற்ருக் குடும்பன் புள்ளியில் கண்ட
பெருவெள்ளைநெல் லளந்தேன். கசச

மண்டகப் படிச் சாத்துக்கொரு
வகையாயிரங் கோட்டை - கட்டை
முண்டன் நெல்வகை தனிலே கண்ட
முத்துவெள்ளைநெல் லளந்தேன். கசஞு

கசஉ. கோட்டை - வைக்கோற் புரியால் சுற்றி உள்ளே நெல்லைப் பொதிந்து கட்டிவைக்கப்படுவது; இருபத்தொரு மூக்கால் கொண்டது.

கசஙு. படி - செலவுக்குரிய நெல். புள்ளி - நிலம்.

கசஉ-ஙு. இவற்ருல் முக்கூடலழகர் கோயிலில் ஆடி மாதத்திலும் பங்குனி மாதத்திலும் விழா நடந்ததாகத் தெரிகிறது.

கசச. இந்நூல் செய்யப்பெற்ற காலத்தே சித்திராநதியில் அணை கட்டப்பெற்றதென்று இதிலிருந்து தெரிகிறது.

கசஞு. மண்டகப்படி - கோயிலில் உற்சவ மூர்த்தியை மண்டபத்தில் எழுந்தருளப் பண்ணுவதற்காகச் செய்யும் செலவு.

நாவாணர்க்கும் மறை யோருக்கும்
நாலாயிரங் கோட்டை - பச்சை
மூவான் முத லிட்டமலே
முண்டன்நெல் லளந்தேன். கசசு

இதுவன்றியுந் தினப்பூசை நெல்
எண்ணூயிரங் கோட்டை - மொண்டிப்
பொதுவன் புதுத்திருத்திற் கண்ட
பூம்பாளைநெல் லளந்தேன். கசள

முற்றுங்கணக் கென்னுற் சொல்ல
முடியா தென்பதறிவீர் - சேரில்
மற்ற நெல்லும் விதையுங் கட்டி
வைத்தேன் பண்ணை யாண்டே. கசஅ

மூத்த பள்ளி முறையிடுதல்

கலிப்பா

எல்லாக் கணக்குரைத்தும் என்பேரும் என்கணக்குஞ்
சொல்லாது விட்டபள்ளன் சூதையினிக் கேளுமென்றே
வில்லாளர் முக்கூடல் மிக்கபள்ளி தன்பொருமல்
நில்லாமல் பள்ளியர்முன் நிட்டூரஞ் சொன்னளே. கசகூ

சிந்து

மூட்டிக்காற் பண்ணை யாண்டே
நடுக் கேளாரோ - ஆந்தை
மூக்குமூஞ்சிப் பண்ணை யாண்டே
நடுக் கேளாரோ

கசகூ. பொருமல் - அழுது விம்முதல். நிட்டூரம் - கொடுமை.

கசுo. ஆண்டே - ஆண்டை. நடு - நியாயத்தை.

மட்டிவாழ்ப் பண்ணை யாண்டே
நடுக் கேளாரோ - கரு
மந்திமூகப் பண்ணை யாண்டே
நடுக் கேளாரோ
சட்டித்தலைப் பண்ணை யாண்டே
நடுக் கேளாரோ - தண்ணீர்ச்
சால்வயிற்றுப் பண்ணை யாண்டே
நடுக் கேளாரோ
கெட்டிகெட்டி பெண்டு ரெண்டு
வைத்த குடும்பன் - செய்த
கெருவமும் வஞ் சகமும்
கேளும் பள்ளீரே. கரு0

பள்ளனுக்கு மருதூரிற்
பள்ளி யர்சைதான் - இன்னும்
பற்றுவிட்ட தில்லைப் பாடு
பட்டும் அறியான்
பிள்ளையா ரடியில் உறை
நெல்லு மெடுத்தான் - அவள்
பெற்றநெல் லுடன் கலந்து
பெட்டியில் வைத்தான்

கரு0. கெட்டி கெட்டி : க00-ம் பாட்டு பார்க்க. பெண்டு ரெண்டு - இரு மனைவியர்.

கருக. பாடுபட்டும் - துன்பமனுபவித்தும். பிள்ளையா ரடியில் - இப்பெயர்கொண்ட நிலத்தில் விளைந்த நெல்லிலே ; பிள்ளையார் திருமுன்பு என்றுமாம். உறை நெல் - நெல் அளப் போர் குறிப்பிட்ட ஒரு அளவுக் கடையாளமாக தனியே எடுத்துவைக்கும் பிடிநெல். அவள் - இளையவள்.

உள்ளபோ ரெனக்குத் தரக்
கையெழும் பாமல் - காலால்
உழுதுவா யாலதட்டி
உழப்பிப் போட்டான்
தள்ளுமண் ணுங் கல்லுஞ் சற்றே
நெல்லுங் கலந்தே - பங்கு
தந்தோமென் றெனக்கிம் மட்டுந்
தந்தான் பள்ளீரே. கருக

பள்ளியர் ஏசல்

சிந்து

முண்டைமுறை யிட்ட தென்ன
முக்கூடற்பள்ளி - உங்கள்
மூப்புச்சொம் மெனக்குத் தந்தால்
மூதலியடி
தொண்டை கட்டக் கூப்பிடாதே
கூப்பிட்டென்னை - வைது
சொன்ன பேச்சைப் பண்ணையார்க்குச்
சொல்லுவேனடி. கருஉ

சொன்னலெனக் கென்ன பயம்
மருதூர்ப்பள்ளி - சென்று
சொல்லி லுன்கால் சலியாது
சொல்லடி போடி

கருக. போர் - பங்கு. காலால் உழுதல் - காலால் தரையைக் கிளைத்தல். உழப்பி - வார்த்தையால் மழுப்பி. இம் மட்டு - இவ்வளவே ; மிகக் குறைவு என்பது கருத்து.

கருஉ. இது இளைய பள்ளி கூற்று. மூப்புச்சொம் - பழமையாய் வரும் சொத்து. மூதலி - மெய்ப்பி.

கருங. இது முதல் ஏசல் இறுதி (களங) வரை ஒவ்வொரு பாட்டிலும் முதல் பாதி மூத்த பள்ளி கூற்று, பிற்பாதி இளைய பள்ளி கூற்று.

என்னுலேயா காதுதுண்டோ
முக்கூடற்பள்ளி - பள்ளன்
இங்குவந்தாலுன் சலுகையெல்லாங்
தெரியுமடி. கருங

சலுகையில் லாமலென்ன
மருதூர்ப்பள்ளி - நானும்
தன்னூர்விட்டுன் போல ஓட்டுச்
சாய்ப்பில் வந்தேனே
வலுச் சலுகை பேசாதே நீ
முக்கூடற்பள்ளி - உன்போல்
வழக்கிட்டுக் கணக்கிட்டு
வந்தேனே போடி. கருச

வழக்கிட்டு நான் வந்தேனே
மருதூர்ப்பள்ளி - பள்ளன்
மாமன்மக னென்றென்னை
மறித்துக் கொண்டான்
உழக்கிற் கிழக்கு மேற்கோ
முக்கூடற்பள்ளி - மறித்து
உன்னைக் கொண்டான் என்னைக்கண்டென்
னூரிலே வந்தான். கருரு

கருங. சலுகை - செல்வாக்கு.
கருச. ஓட்டுச் சாய்ப்பில் - பிறருடைய ஆதரவில்.
கருரு. உன்னைக் கொண்டான் - உன்னை மணஞ் செய்து கொண்டான்.

அங்கே யவன் வந்தா லென்ன
மருதூர்ப்பள்ளி - ஊரார்
ஆமக்களைத் தொடர்ந் தூனப்போல்
ஆரடி வந்தாள்
எங்கேவந் தாலு மென்ன
முக்கூடற்பள்ளி - வீட்டில்
எய்திற் காட்டு நாவி பூனைக்
கிணையாமோடி. கருசு

நாவி யென்றுய் பூனை யென்றுய்
மருதூர்ப்பள்ளி- அந்த
நாவி நானடி பூனை மூளி
நாயும் நீயடி
வீவி யாட்டம் ஆட வேண்டாம்
முக்கூடற்பள்ளி - பேச்சில்
மிஞ்சிப் பேசில் நெஞ்சறுப்பேன்
அஞ்சிப் பேசடி. கருள

அஞ்சச் சொன்ன தென்னை யென்ன
மருதூர்ப்பள்ளி - உனக்
காசைப் பட்ட குடும்பனை
அஞ்சச் சொல்லடி
கொஞ்சக் காரிக் கஞ்சு வேலை
முக்கூடற்பள்ளி - இன்னும்
குட்டையிற்போ டுனக்கவன்
கும்பிட் டஞ்சுவான். ஞருஅ

கருசு. ஊரார் ஆமக்கள் - பிறர் கணவர்; ஆமக்கள் - ஆண் மக்கள்; என் கணவன் என்பது பொருள். நாவி பூனைக் கிணையாமோ - கத்தூரி மிருகமே யானாலும், அது காட்டை விட்டு வீட்டை யண்டிவந்தால் பூனைக்கு இணை யாகுமோ.

கருஅ. கொஞ்சக்காரி - அற்பத்தனமுடையவள்.

குட்டைதனில் போட்டதற்கோ
மருதூர்ப்பள்ளி - அந்தக்
குடும்பனைப் பிணைப்பட்டுக்
கொண்டு மீட்டாய்
சட்டை பண்ணு தேசிக் காட்டு
முக்கூடற்பள்ளி - குட்டை
சாத்துவாய் கழற்றுவாய் உன்
தந்திரமடி. கருக

மந்திரமுந் தந்திரமும்
மருதூர்ப்பள்ளி - உன்போல்
வகை வந்தால் பள்ளனுமென்
வசமாகானே
சந்தியில் மாங் கொட்டை போடி
முக்கூடற்பள்ளி - நீயும்
சாரங் கெட்ட மருந்தென்றே
சாதிக்க வாராய். கசுக

சாதிப்ப துனக்கு வரும்
மருதூர்ப்பள்ளி - நரி
தான்பரியாய்ச் சாதித்தான் உங்கள்
சம்பு வல்லோடி
பேதிக்கச் சாதிக்க வாராய்
முக்கூடற்பள்ளி - கல்லைப்
பெண்ணைச் சாதித்தான் உங்கள்
கண்ண னல்லோடி. கசுக

கருக. சட்டை பண்ணுது - இலட்சியம்பண்ணுமல்.

கசுக. சந்தியில் மாங்கொட்டை: இத்துணை அற்பமான வள் என்பது பொருள்.

கசுக. சிவபெருமான் மாணிக்கவாசகருக்காக மதுரையில் நரிகளைப் பரிகளாக்கியதும், இராமன் கல்லாயிருந்த அகலிகையைப் பெண்ணாக்கியதும்.

மங்கையொரு பங்கிருக்க
யோகி யென்றுதான் - கையில்
மழுவேந்தி நின்ரு னுங்கள்
மத்த னல்லோடி
கொங்கைதனில் நாச்சியாரைச்
சங்கை யில்லாமல் - பண்டு
கூடி நெய்யில் கையிட்டா னுங்கள்
கொண்ட லல்லோடி. கசூஉ

காமனை மருகனென்
றெண்ணிப் பாராமல் - காய்ந்து
கண்ணிலேறு பட்டா னுங்கள்
கர்த்த னல்லோடி
மாமனென்று பாராமல்மூன்
கஞ்சனைக் கொன்றே - கண்கள்
மாருதேபூப் பட்டா னுங்கள்
மாய னல்லோடி. கசூஙூ

மாதொருத்திக் காசைப்பட்டுப்
பொன்னின் மயமாம் - பனி
மலையேறிப் போனு னுங்கள்
மத்த னல்லோடி
காதலித்துத் தம்பியுடன்
சீதை பொருட்டால் - அன்று
கடலேறிப் போனு னுங்கள்
கண்ண னல்லோடி. கசூச

கசூஉ. சங்கை - வெட்கம்.

கசூஙூ. மருகன் : திருமால் மகன் என்ற முறைபற்றி. கண்ணிலேறு பட்டான் - கண்ணுல் எறிபட்டான்.

கசூச. மாதொருத்தி - உமாதேவி. பனிமலை - இமயமலை. கடலேறிப்போனன் - சீதையை மீட்பதற்காக இராமன் கடல் கடந்து இலங்கை சென்ற வரலாறு.

தான்பசுப்போல் நின்று கன்றைத்
தேர்க்காலில் விட்டே - சோழன்
தன்மகனைக் கொன்ரு னுங்கள்
தாணு வல்லோடி
வான்பழிக்கு ளாய்த்தவசி
போல மறைந்தே - நின்று
வாலியைக் கொன்ரு னுங்கள்
மாய னல்லோடி. கசுரு

வலிய வழக்குப் பேசிச்
சுந்தரன் வாயால் - அன்று
வையக் கேட்டு நின்ரு னுங்கள்
ஐய னல்லோடி

கசுரு. சிவபெருமான் பசுவாகவும் இயமன் கன்ருகவும் வந்தபோது, மனுநீதிச் சோழன் மைந்தனுகிய வீதிவிடங்கன் கன்றின்மேல் தன் தேரைச் செலுத்திய பாதகம் நீங்க அச் சோழன் தன் மகனைத் தேர்க்காலிலிட்டான் என்பது புராண கதை : 'ஈசன் பசுவாகி ஏமனெரு கன்ருகி, வீசுபுகழ் ஆரூரின் வீதிவந்தா ரம்மானே.' சுக்கிரீவனுடன் நட்புப் பூண்ட இராம பிரான், சுக்கிரீவனும் வாலியும் போர் புரியுங்கால் தான் மறைந்துநின்று அம்பினல் வாலியை வீழ்த்தினன் என்பது இராமாயணக் கதை.

கசுசு. சிவபெருமான் ஆலாலசுந்தரரைப் பூவுலகில் தடுத் தாட்கொள்வதாக வாக்குக் கொடுத்திருந்ததற் கிணங்க, சுந்தர மூர்த்தியின் திருமணத்தின்போது தானே வலிய வந்து வழக் கிட்டு, சுந்தரர் வெகுண்டுரைத்த சொற்களைப் பொறுத்து நின்ருரென்பது பெரியபுராணக் கதை.

மூக்கூடற் பள்ளு

புலிபோல் எழுந்து சிசு
பாலன் வையவே - ஏழை
போல நின்முன் உங்கள் நெடு
நீல னல்லோடி. கசுசு

அடியனும் நாயனுமாய்க்
கோவில் புறகே - தொண்டன்
அன்று தள்ளப் போனு னுங்கள்
ஆதி யல்லோடி
முடியுஞ் சூடாமலே கை
கேசி தள்ளவே - காட்டில்
முன்பு தள்ளிப் போனு னுங்கள்
மூர்த்தி யல்லோடி. கசுஎ

சுற்றிக் கட்ட நாலு முழத்
துண்டு மில்லாமல் - புலித்
தோலை யுடுத்தா னுங்கள்
சோதி யல்லோடி

கசுசு. சிசுபாலனிடத்துத் தொண்ணூற்றொன்பது பிழைகள்வரையில் பொறுப்பதாகக் கண்ணபிரான் அவன் தாயிக்கு வாக்குக் கொடுத்திருந்தமையால், சிசுபாலன் வைததைப் பொறுத்து வந்தாரென்பது பாகவதக் கதை. நெடுநீலன் - நீலவண்ணனுகிய நெடுமால்.

கசுஎ. திருவாரூரிலே சிவபெருமானைத் தொழுவந்த சுந்தரமூர்த்தி நாயனுர் தேவாசிரிய மண்டபத்தே யிருந்த சிவனடியாரை வணங்காது நேரே இறைவனைத் தொழச் செல்லுவதைக் கண்ட விறன்மிண்ட நாயனுர் 'வன்றொண்டன் புறகு' என்றும், 'அவருக்குப் பிரானுகிய இறைவனும் புறகு' என்றும் உரைத்தார் என்பது பெரியபுராணத்துட் கூறப்படும் வரலாறு. அடியன் - சுந்தரர்; நாயன் - நாயகன், சிவபெருமான்; தொண்டன் - விறன்மிண்டர். தள்ளி - வெகுதூரத்தில். மூர்த்தி - இராமபிரான்.

கசுஅ. தாருகாவனத்து இருடிகள் அபிசார யாகஞ் செய்து அதில் தோன்றிய புலியைச் சிவபெருமான்மீது ஏவ, அவர் அதைக் கொன்று அதன் தோலை யுடுத்திக்கொண்டார் என்பது சிவபுராணக் கதை.

கற்றைச் சடை கட்டிமர
வுரியுஞ் சேலுதான் - பண்டு
கட்டிக் கொண்டா னுங்கள் சங்குக்
கைய னல்லோடி. கசுஅ

நாட்டுக்குள் இரந்தும் பசிக்
காற்ற மாட்டாமல் - வாரி
நஞ்சை யெல்லாம் உண்டா னுங்கள்
நாத னல்லோடி
மாட்டுப்பிற கேதிரிந்துஞ்
சோற்றுக் கில்லாமல் - வெறும்
மண்ணை யுண்டா னுங்கள் முகில்
வண்ண னல்லோடி. கசுக

ஏற ஒரு வாகனமும்
இல்லாமையினல் - மாட்டில்
ஏறியே திரிந்தா னுங்கள்
ஈச னல்லோடி
வீறு சொன்ன தென்ன மாடு
தானு மில்லாமல் - பட்சி
மீதி லேறிக் கொண்டா னுங்கள்
கீத னல்லோடி. களo

கசுஅ. இராமபிரான் சீதையும் இலக்குவனும் பின் தொடரக் காட்டுக்குச் சென்றபோது மரவுரி தரித்துச் சென்றார். சங்குக் கையன் - திருமால்.

கசுக. வாரி நஞ்சு - கடலில் தோன்றிய நஞ்சு ; ஆலகால விடம். மாட்டுப்பிறகே திரிந்தமை கண்ணன் கோவலரிடையே வளர்ந்தமையால் ; மண்ணையுண்டது யசோதைக்குத் தன் கடவுள் தன்மையைக் காட்டவேண்டி.

களo. பட்சி - கருடன். கீதன் - கீதமிசைப்பவன், வேணு கோபாலன்.

பெருமாள் அடியானுக்குப்
பெண்டிருந்துமே - எங்கள்
பெருமாளே நீ பழித்துப்
பேசலாமோடி
திருமால் அடிமை யென்றுய்
சாலப் பசித்தால் - ஆருந்
தின்னுத துண்டோ சினத்தால்
சொல்லாத துண்டோ. களக

தீராண்மைநன் முகச் சொன்னுய்
மருதூர்ப்பள்ளி - போபோ
சினத்தாலுஞ் சிரழியச்
சொல்ல லாமோடி
வாராதோ எனக்குக் கோபம்
முக்கூடற்பள்ளி - முந்த
வைதவரை வாழ்த்தினவர்
வையகத் துண்டோ. களஉ

முந்த வைதால் வைவே னென்றுய்
மருதூர்ப்பள்ளி - சீற்றே
மூப்பிளமை பார்த்துத் தலை
சாய்ப்பா ரில்லையோ

களக. பெருமாள் அடியானுக்குப் பெண்டிருந்தும் - அழகர் அடியவனன பள்ளனுக்கு நீ மனையாளா யிருந்துகொண்டு.

களஉ. தீராண்மை - வன்மத்தாற் சொல்லுங் கோள். சிரழிய - பெருமை குன்ற.

களங. மூப்பிளமை பார்த்துத் தலைசாய்ப்பார் : மூத்தோர் பக்கமாகக் காலை நீட்டிப் படுத்தல் மரியாதைக் குறைவாகக் கருதப்படும் என்பது.

இந்த வார்த்தை முந்தச் சொன்னால்
முக்கூடற்பள்ளி - சண்டை
இத்தனை யுண்டோ எனக்குப்
புத்தி யில்லையோ. களஙு

பள்ளியர் சமாதானமாதல்

சொன்ன லென்ன நீயும் பொறு
நானும் பொறுத்தேன் - கிளை
சூழ்ந்திருக்க நாமே கூடி
வாழ்ந்திருக்கலாம்
பன்னகத்தி லாடிய முக்
கூட லழகர் - திருப்
பாத மலர் வாழ்த்தி யாடிப்
பாடுவோமே. களச

வாழ்த்து

கலிப்பா

வீழியிதழ்ச் செங்கமலம் மேவும்அனை வாழிநெடுஞ்
சூழிமுக வேழமென்று சொன்னதிருப் பேர்வாழி
ஆழியரு ளாளர் அழகர்திருத் தாள்வாழி
வாழிதிரு முக்கூடல் வைணவர்கள் வாழியவே. களரு

முற்றும்

களச. இது மூத்தபள்ளி கூற்று. பன்னகத்தில் ஆடிய - காளிங்கன் என்னும் பாம்பின்மேல் நர்த்தனமாடிய.

களரு. வீழி யிதழ் - வீழிக்கனி போன்று சிவந்த இதழ். அனை - அன்னை, இலக்குமி. சூழிமுக வேழம் - முகபடாம் அணிந்த நெற்றியுடைய யானை ; சேனை முதலிகள்.

அரும்பொருளகராதி

[எண் - செய்யுளெண்]

அகலிகை வரலாறு 161
அம்பலவாணன் (காவை) 29, 70
அரக்கர் 111
அரவு (காளிங்கன்) 129, 174
அழகக் குடும்பன் 94, 112
அழகர் : அருளாளர் 175 ; அலங்காரர் 16 ; ஆதிக் கோன் 83 ; ஆதி நாயகர் 23 ; ஆதியர் 1 ; ஊழிச்சயனத்தர் 2 ; கண்ணர் 107 ; கர்த்தர் 91 ; செண்டலங்காரர் 19, 23, 68 ; தண்டாத சங்கத் தமிழழகர் 81 ; தமிழ்ச் சங்கம் மருவும் புலமைத் தலைமை அழகனூர் 130 ; துளவமாலை யணிந்தவர் 1, 124, 127 ; தேர்ப்பால் அழகர் 29 ; பண்ணவர் 31, 41 ; புங்கவர் 116, 130 ; மறைமுதல்வர் 1 ; மாதவர் 34 ; மாயவர் 1, 140 ; வேதசிற்பரத்தார் 4 ; வேதம் பரவும்பாதர் 131 ; வைகுண்டர் 131 ; நீலத்திருமேனி : காப்பு, 1, 3, 14, 28, 76, 133, 135, 169
அழகர் கட்டளைகள் 28, 29
அழகர் சன்னிதி 30
அழகர் புய மார்பின் மாதர் 58
அழகர் மண்டபத் தூண் சாரம் ஏற்றியது 74
அழகராச்சிப் படை 92
ஆசூர் நன்னாடு 37 ; வடகரை நாடு 17, 21, 25 ; வளநாடு 5
ஆடிக் காலாவதி வெள்ளாமை 105
ஆடித் திருநாள் 142
ஆயிர மல்லியன் 71
ஆழ்வார் : பத்தாகப் பெயர்தரும் பத்தாள் 4 ; பத்து நாவலர் - காப்பு
ஆற்றுக்காலாட்டியர் 127
ஆறைவரும் நயினூத்தை 74
இந்திரசித்து 111
இந்திரன் : காவுக்கிறைவன் 38 ; சுரர்பதி, மகபதி 1 ; வாசவன் 92 ; வெள்ளானைக் கிறை 131
இராசவாணன் 70
இராமர் எவலால் குரங்குகள் இலங்கையை அழித்தது 67 ; கல்லைப் பெண்ணாக்கியது 161 ; குகன் தோணியூர் 128 ; கைகேசி சொற்படி வனம் புகுந்தது 167 ; சீதை பொருட்டால் கடல் கடந்தது 164 ; தசரத ராமர் 110 ; மரவுரி யுடுத்தது 168 ; மறுவில்லி 69 ; முந்நீரிடுங்கணையார் 43 ; வாலியைக் கொன்றது 165 ; வில்லாளர் 149
இராமர் சேனை 69
இராமானுசன் பீடம் 28
இராவணன் 111 ; பத்துத் தலையும் புயமும் துத்தியது 133
இருகால் மாடுகள் 11
இலக்குமி : கமலை 4 ; செங்கமலம் மேவும் அன்னை 175 ; பூமா-காப்பு
இலங்கை 67, 111
இளமுறைக்கோன் 1

ஈழ மின்னல் 35
உடையாரய்யர் 32
உதய வரை 50
உமாதேவி: அழகர்க்கிளைய தெரிவை, நீலி 73; மங்கை 162
உள்ளூர்க் கோவில் 72
உளக்குடி 131
ஏட்டெழுத்து - காப்பு
எண்ணெழுத்து 11
எயினப்படை 42
ஏர்க்கால் வகை 73, 74, 110
ஐராவதம்: தவளவாரணம் 46; வெள்ளானை 131
ஒற்றைக் கொம்பன் 72
கங்கணங் கட்டுதல் 32
கங்காணம் 139 [132
கஜேந்திரன்: சிறுகண் வேழம்
கஞ்சன்: தம்சன் 129, 163
கட்டியளத்தல் 139
கண்ணன் 28, 161, 164; கஞ்சனைக்கொன்றது 163; காளிங்க நர்த்தனம் ஆடியது 129, 174; கீதன் 170; கோவர்த்தன கிரியை எடுத்தது 45, 128; சிசுபாலன் வையக்கேட்டு நின்றது 166; பார்த்தசாரதி 29; புள்வாய் கிழித்தது 12, 116; மண்ணையுண்டது 169; வேய்ங்குழல் ஊதியது 55
கம்மியர் 21
கரன் 128
கருடக்கொடி 131; கோன் 2; பரி 39, 49; கருடன் 111; பணிகள் பதங்க எழுத்தது 38
கருமறத்தியர் 42
கலிமின் 38
களக்குடி (மேலக்) 131
காமன் 163; - கலப்பை 73
காரிப்பிரான் 31
காரைக்காட்டார் 73
காவை 28, 29, 70, 139
குகன் 128
கும்மி 130
குருகை 4
குருகை மாறன் 70
குலப்பத்தனுர் 16
குளம் அஞ்சுக்கும் சக்கரக்கால் நிலையிட்டது 14
குற்றாலம் 51, 109
குற மோட்டுச்சாதி 40
குறிஞ்சி 40
கூடல் (மதுரை) 14
கூத்தும் கொட்டும் 86
கேசவன் 92
கைகேசி 167
கோச்சி மஞ்சள் 8
கொன்றைக்குழல் 45
கோனேரிக்கோன் 81, 82
சக்கரக்கால் 14
சக்கரத்தாழ்வார் 15; ஆழி 175
சத்தமி 113
சனக்கட்டளை 139
சாத்தா 32
சாத்தூரிற் பெரியநம்பி அய்யங்கார் 30
சிசுபாலன் 166
சித்திரா நதி 13, 51
சிவபெருமான் இமவான் மகளை மணந்தது 164; கர்த்தன் 163; கனலைத் தரித்தது 38; காமனைக் காய்ந்தது 163; சம்பு 161; சுந்தரன் வையக் கேட்டு நின்றது 166; தாணு 165; நஞ்சையுண்டது 20, 169; நரி

பரியாக்கியது 161 ; நாயன் 167; புலித்தோலுடுத்தது 168; பூதக்கோன் 83 ; மங்கை பங்கன் 162 ; மத்தன் 162, 164 ; மதோன்மத்தர் 24 ; மாட்டை வாகனமாக உடையது 170
சிற்சுற்றணை 144
சிற்சுறு 51, 134
சீதை 164
சீவலப்பேரி 29, 88, 92
சீவல நன்னாடு 5
சீவலமங்கைத் தென்கரை நாடு 18, 22, 26
சுக்கிரத்தேவர் 15
சுந்தரர் 166 ; அடியன் 167
சுபயோகம் 113
சுருதி 11, 135 ; சுருதியர் 4
சூழிமுக வேழம் 175
சேங்கான் 96
செங்கோல் 14, 28
செஞ்சி 14
செட்டி (முருகன்) 71
செப்பறை 71
செண்டலங்காரர் 19, 23, 68
சேனை முதற்கோன் 3 ; சூழிமுக வேழம் 175
சோதி : சுவாதி 113
சோழன் 165
ஞானிச்செட்டி 89
தஞ்சை 14
தஞ்சைப் பள்ளன் 14
தமிழ் : சங்கத்தமிழ் 81 ; சங்கம் 130 ; முத்தமிழ் 13 ; மூவகை 4, 29
தமிழ் வேதம் 31
தமிழிசை 136
தயரத ராமர் 110
தலத்தார் படி 139
தாண்டவராயன் 72
தாதக்கோன் 83
தாமரைக்கண்ணழகர் 110
தாவரவகை : அவரை 44 ; அறுகங்கொடி 132 ; இஞ்சி 26 ; இருப்பை, ஈந்து 42 ; எள், கடுக்கை 44 ; கரும்பு 26, 46 ; கள்ளி, குரவம் 42 ; குல்லை 44 ; குளவி 40 ; சூதம் 25 ; சூரிய காந்தி 22 ; தினை 40 ; துவரை 44 ; தெங்கு 25 ; தோன்றி 44 ; நெய்தல் 48 ; பங்கயம் 26 ; பலா 25 ; பாலை 42 ; புன்னை 48 ; பூகம் 25 ; பூவை 44 ; மஞ்சள் 26 ; மரவம் 42 ; மராமரம் 110 ; மருதம் 46 ; மல்லிகை 44 ; மாதுளை 25 ; முல்லை 44 ; வாழை 25, 46 ; வெதிர் 42
தாளவிதத்து ஏழணி 3
தானவர் 1
தானிகர் 28
தீங்கள் மும்மாரி 32
திரிகூட மால்வரை 51
திரிசிரன் 128
திருக்கோவையார் : கொளு நானூறு 73
திருப்பதி ஏழு 139 ; நூற்றெட்டு 11
திருமங்கையாழ்வான் 68
திருமலைக்கொழுந்து (காவை) 28
திருமால் 171 ; அடிக்குள் அடங்கும் படிக்கு முதல்வர் 129 ; அரவணைத் துயவர் 1 ; அரி 38 ; கடல்கடைந்து அமுதமூட்டியது 129 ; கருட ஊர்தியர் 39, 49 ; சங்குக் கையர் 168 ;

சுகோத்தேவர் தூயைக் கொன்றது 15 ; தமிழிசைக்கு முடியனுக்கும் முதல்வர் 136; திரிவிக்கிரமாவதாரம் 129 ; நாதக் சேனன் 83 ; நீலன் 166 ; நெடுமால் 47 ; நெய்யில் கையிட்டது 162 ; நேமிவீரனூர் 53 ; பட்சி வாகனம் உடையவர் 170 ; பத்து வடிவம் (தசாவதாரம்) 66 ; பாவலனுக்கு ஆர்வலன் 3 ; புள்ளாடற் கொடி ஏற்றுவார் 131; பெருமாள் 11, 171 ; மால் 44; வராகாவதாரம் 67 ; வெள்ளத்திலே துயில்பவர் 7, 82
திருவாய்மொழி 11
திருவிடையாட்டம் 92 ; திருவீளையர்ட்டுப் புரவு 132
திருவில் 38
தினச்சத்திரம் 139
தின்பூசை 147
தூர்க்கை : சூலவேற்கன்னி 42
தூலா முகிழ்த்தம் 113
தெக்கண விட்டுணு 15
தெய்வதாசிகள் 68
தென்கரை 18, 22, 26
தென்திருநூர் 116
தென்முக்கூடல் 140
தேர்ப்பாலழகர் 29
தைதுலக் கரணம் 113
தொட்டியர் 57
தொண்டிக் கள் 134
நகர் வளம் 19, 20, 23, 24
நம்மாழ்வார்: காரிப்பிரான் புதல்வர் 31 ; குருகை மாறன் 70 ; குலப்பத்தனர் 16 ; சுருதியர், பத்தாளிற் பருதியர் 4 .
நயினாத்தை 74, 92
நாகபாசம் 111
நாச்சியார் 92, 162
நாட்கதிர் கொய்தல் 137
நாட்டு வளம் 17, 18, 21, 22, 25, 26
நாமப்பொட்டு 6 ; நாமம் பதினெட்டு (பட்டை) 82
நாயன் 167
நாவாணர் 146
நாளேரிடல் 111
நூற்றெட்டு திருப்பதி 11
நெய்தல் 48
நெல்வகை 108; இராசவாணன் 70 ; கதலிவாழை 92 ; குலை வாழை 69 ; குறுவை 132 ; சம்பா 132, 142 ; சாலி 139 ; செந்தாழை 143 ; செந்நெல் 22, 26, 139 ; சொரிகுரும்பை 68 ; திருமங்கை யாழ்வான் 68 ; பூஞ்சாலி 30 ; பூம்பாளை 68, 147 ; பெருவெள்ளை 69, 144 ; மச்சுமுறித்தான் 68 ; மணல்வாரி 68; மலைமுண்டன் 146 ; முத்துவெள்ளை 145
பங்குனித் திருநாள் 143
பஞ்சாங்கம் 113
பட்டோலைக் கெழுதரும் பா 4
பண்ணைக்காரன் 53, 54, 150
பத்து வடிவத்தழகர் 66
பலியிடல் 32, 33
பள்மூவகைத்தமிழ் 4;பள்ளிசைகாப்பு, 1, 2 ; பள்ளேசல் 3
பள்வரி 88
பள்ளர் வகை 114
பள்ளியர் வகை 126
பாம்பு - பதஞ்சலி 83

பாலி 42
பிரமகத்தி 15
பிரமன்: கமலத்தயன் 38; சதுர் வேதன் 117; போதன் 3; வேதக்கோன் 83
பிள்ளையாரடி 151
புகைகுடித்தல் 54
புதன் 113
புலி - வியாக்கிரபாதர் 83
புலியூருடையார் 33
புலிமருந்து 117
புளி (உறங்காப்புளி) 4
பூதக்கோன் 83
பூலாவுடையார் 32, 118
பெரியநம்பி 11, 30, 139
பேரை 69
பொங்கலிடல் 32
பொதிகைவரை 50
பொருநை 13,30,36,47,50, 51
பொருநையாற்றாணை 130
மகாராசன் 70
மண்டகப்படிச் சாத்து 145
மதோன்மத்தர் 24
மராமரம் ஏழு 110
மருதப்பர் 73
மருதம் 46
மருதீசர் 9, 20, 24
மருதூராள் 57
மலையாள மின்னல் 35
மறை 1, 3; மறையோர் 146
மனுநீதிச்சோழன் செயல் 165
மனுமரபு 1
மாட்டுவகை 71, 72, 109; சுழியன் 86; புல்லிக்காளை 115; மோழை 86
மாணிக்கவாசகன் 73
மாறனூர் 133
மீன்வகை 50, 51; புஞ்சலை மீன் கெண்டை 8; வரால் 115; வாளை 23
முத்தமிழ் நாட்டழகர் 13
முத்தேவு 4
முப்பான்மைத் தொழில் 4
முருகன்: அழகனூர் மருகோன் 40
மூல்லை 44
மேழி விருது 73
வடக்குவாய்ச் செல்லி 33
வடகரை 17, 21, 25, 98
வடமலைந்திரன் 14; மட்டு 139; மா கறுப்பென்பது 38
வடமலையப்பர் 72.
வடிவழகக்குடும்பன் 10, 15, 64, 100, 115
வருணன்: கடல் இறைவன் 48
வரைக்கோன் 40
வாசவன் 92
வாரத் துடையான் எரிக்கட்டளை 92
வாலி 165
வானக் குருசில் 40
வித்துவகை 68, 69, 70, 108
வில்லடிப் பாட்டு 86
விறன்மிண்டர் வரலாறு 167
வீரப்பாண்டியப்பேரி 92
வீவியாட்டம் 157
வெள்ளானை 131
வெள்ளூர் (தெற்கு) 131
வேதம் 4, 83, 131
வேதியர்கள் 113
வைகுண்டர் 131
வைணவர் 28, 175

செய்யுள் முதற் குறிப்பகராதி

[எண் - செய்யுளெண்]

அங்கே	156	எல்லாக்	149	குற்றுலத்	51
அஞ்ச	158	ஏங்கியிரு	119	குன்றைக்	45
அடியானும்	167	ஏச்சுக்கு	90	கொண்டல்	19
அடுத்திடும்	85	ஏதுசெய்	75	கோட்டு	16
அதிசயங்	71	ஏரும்பல	112	சங்கம்	20
அழகர்	80	ஏறஒரு	170	சட்டம்	106
அளக்கும்	141	ஐயாபராக்	103	சத்தமி	113
அனகன்	74	ஒருபோத	11	சத்தியமா	102
ஆடிக்காலா	105	ஒற்றைக்	72	சலுகை	154
ஆடித்திரு	142	கங்கமே	49	சாத்தன்	114
ஆதிமரு	9	கட்டினு	57	சாதிப்பது	161
ஆருக்கும்	88	கடிக்கும்	129	சித்திரக்	108
ஆற்றுவெள்	35	கடிதிற்	138	சிற்றுற்றணை	144
ஆறுபரந்	52	கடினவுரை	64	சிறுகண்	132
ஆனைக்குட்டி	89	கண்டார்	81	சின்னி	126
இக்கரை	36	கத்தர்திரு	91	சிவலப்	29
இடையரை	84	கறுக்குங்	10	சுக்கிரத்	15
இருவன்றி	147	கறைபட்டு	21	சுற்றிக்கட்ட	168
இலங்கா	111	காமனை	163	சூலானது	37
கடலா	70	காயக்கண்	22	செஞ்சரண	8
உத்தரபாக	13	கார்பூத்த	28	செஞ்சிக்கு	14
உதைத்து	50	காரிப்பிரான்	31	செழுந்திரு	134
உழுத	121	காவலராந்	5	சொன்னலென்	174
உள்ளத்தி	7	காவுக்கிறை	38	சொன்னலென	153
எங்கும்	69	குச்சுக்குள்	63	சோதிமாமணி	23
எங்கேகிட	96	குட்டிகளுங்	79	தத்தும்பாய்	24
எண்ணெயார்	55	குட்டை	159	தயரத	110
எதிரும்	42	குடிலிற்	59	தன்மத்து	104
எந்தைதிரு	93	குடைக்கொம்	109	தாரத்திரு	2

தாரமிரண்	97	பாயுங்கருட	39	முடுகவா	95
தாற்றுக்கால்	127	பாயும்மருத	46	முண்டை	152
தான்பசுப்	165	பாரின்அமு	135	முத்திதர	34
தானுட்கை	87	பால்வெள்ளத்	41	முந்தவைதால்	173
திங்கள்	32	பாலாயி	82	முந்தித்தரி	125
திசைபோன	61	புகுந்த	48	முந்நீரிடுங்	43
திருமுக்கூட	73	புங்கவர்	130	முப்பாலுஞ்	60
தினச்சத்திர	139	பூட்டுங்	115	முல்லைக்கோடி	44
தீராண்மை	172	பூத்ததலை	33	மூலைக்குத்	122
துள்ளி	116	பூதக்கோன்	83	மூற்றுங்	148
தூக்குணி	56	பூமேவு காப்பு		மூறுகவிலை	137
தேவாதி	27	பூவலயக்	3	முன்றிற்	47
தொழுது	78	பெருமாள்	171	மூத்தபள்ளி	107
நாட்டுக்குள்	169	பொருதை	30	மூத்தபள்ளிமு	54
நாவாணர்	146	மங்கை	162	மேடையேறி	17
நாவியென்	157	மண்டகப்	145	மைப்புயலே	76
நாறுந்துழா	124	மணிமரகத	1	வடுப்படா	118
நெற்றி	6	மதயானை	117	வரத்தினை	86
பக்குவஞ்	101	மந்திரமுந்	160	வருபங்குனி	142
பங்கயந்	26	மருந்துக்	98	வலியவழ	166
படைகொண்	128	மள்ளர்	12	வழக்கிட்டு	155
பத்துத்தலை	133	மாதொருத்தி	164	வளந்தரு	140
பத்துவடிவ	66	மாரிச்சிவல	92	வளர்ந்த	123
பதிந்த	136	மாற்றவள்	58	வானக்குருசில்	40
பலவெள்ளா	68	மாறுகண்	53	வித்தாரக்	4
பழகினீர்	67	மிஞ்சிப்	99	விழியிதழ்	175
பறிகாரி	94	மீதுயர்ந்திடு	25	வீருன	77
பள்ளன்எழு	120	முக்கூடற்	62	வெள்ளாணை	131
பள்ளனுக்கு	151	முட்டிக்காற்	150	வென்றல்லோ	18
பள்ளனை	65	முட்டிவிட்டு	100		